DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004 | BRAMPTON / MISSISSAUGA 905 457 1700 | MARKHAM (New Location) 905 472 7223
பற்களை ஒழுங்குபடுத்தும் முறையை தமிழில் விளங்கிக்கொள்வதற்கு சரியான அலுவலகங்கள் உங்களுக்கு அருகில் - டாக்டர். இளங்கோ

For Your Rental Needs
iHOME Rentals
416-703-7300 | info@ihomerentals.ca

Homelife Future Realty Inc.
"My clients are my value"
647-668-8276 | 416-629-5800
905-201-9977 (Business)
Kailain Thillainathan Sales Representative kailain.thillai@gmail.com | homesbyraghu@gmail.com Ragu Thillainathan Sales Representative

SunSanmugathas, ASA
Broker of Record / Vice President
Property/Max Realty Inc
416-948-0693

CAMSONICS SECURITY SYSTEMS INC.
Rajeev Sebarasha:- 647.302.5748
FULL HD www.camsonics.com
உங்கள் வீட்டினையும், வேலைத் தளங்களையும் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள உடனே அழையுங்கள்

நான் எப்பொழுதும் உங்களோடு தான்
Buying-Selling-Investing
Homelife/Future Realty Inc., Brokerage
Raj Perampalam Broker
என்னை அழையுங்கள்
Direct: 416-897-9155
Office: 905-201-9977

PYRAMID GROUP
UTHAYAN SIVARAJAN 416.301.5555
RAJ 416.843.3333
KUMAR 416.453.7777

ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
• Family sponsorship;
• Super visa for parents and grandparents including health insurance;
• Citizenship;
• Permanent resident card renewal;
Kokulan Baskaran
Tax Consultant
403-2855 Markham Road Scarborough ON M1X 0C3
Tel: 647-344-6600
info@allinoneservices.ca
www.allinoneservices.ca

List Your Property Free
PROPERTYMAX.LK
+94772332300

Residential & Commercial Real Estate Services
Bala Logendralingam Realtor
Cell: 647-447-1562
RE/MAX COMMUNITY

27ம் ஆண்டில்...
27 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
# உதயன்
திக்கெட்டும் தமிழ் உலகில் எத்திக்கும் கதிர் வீசும் வாரச் செய்தி இதழ்
Member of National Ethnic Press and Media Council of Canada
$1.00
416-752-1524 www.uthayannews.ca
Canadian Media Circulation Audit
உதயம் 1471 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday June 14, 2024

## "கனடிய அரசாங்கம் புதிய இனவெறி எதிர்ப்பு உத்தியை அறிமுகம் செய்கின்றது. இதன் மூலம் மாற்றங்களைக் கொண்டு வரும் அமைப்புகளை அறிமுகப்படுத்துகிறது"

### கனடாவின் பன்முகத்தன்மை, உள்ளடக்கம் மற்றும் மாற்றுத்திறனாளிகள் நலன்களுக்கு பொறுப்பான அமைச்சர் கமல் கேரா,தெரிவிப்பு

- (ரொறன்ரோவிலிருந்து கனேஸ்)



பன்முகத்தன்மை சார்ந்த கொள்கையே கனடாவை வடிவமைத்துள்ளது மற்றும் தொடர்ந்து வடிவமைத்து வருகிறது. 2015 ஆம் ஆண்டு முதல், கனடிய அரசாங்கம் பன்முகத்தன்மை மற்றும் உள்ளடக்கத்தில் உறுதியாக உள்ளது, இதன் மூலம் கனடாவையும் உலகையும் ஒரு சிறந்த இடமாக மாற்றுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. முன்னேற்றம் ஏற்பட்ட போதிலும், நாடு முழுவதும் உள்ள பல்வேறு சமூகங்களைச் சேர்ந்த பலர் இனவாதத்தால் பாதிக்கப்பட்டுள்ளனர். கனடாவில் உள்ள பலருக்கு இனவாதப் போக்கை சமாளிப்பதுஏற்றுக்கொள்ள முடியாத உண்மையாகவே உள்ளது.

கனடாவில் இனவெறி மற்றும் பாகுபாடுகளுக்கு எதிரான மத்திய அரசின் தலைமையை வலுப்படுத்தும் நோக்கோடு கனடாவின்பன்முகத்தன்மை, உள்ளடக்கம் மற்றும் மாற்றுத்திறனாளிகள் நலன்களுக்கு பொறுப்பான அமைச்சர் கமல் கேரா,அவர்கள் கனடாவின் புதிய இனவெறி எதிர்ப்பு உத்திகள் மற்றும் அதனை நடைமுறைப்படும் அமைப்புகள், இவற்றை உள்ளடக்கிய கனடாவின் இனவெறி எதிர்ப்பு வியூகத்தை கடந்த சனிக்கிழமை 8ம் திகதி வெளியிட்டார். ரொறன்ரோ நகரில் உள்ள பொது அமைப்பு ஒன்றின் தலைமை அலுவலகத்தில் இந்த நிகழ்வு இடம்பெற்றது (தொடர்ச்சி 20ம் பக்கம்)

## 50 ஆண்டு காலப் புனிதப் பணியாற்றி வரும் உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்திற்கு அபகீர்த்தி ஏற்படுத்தும் 'மோசடிப் பேர்வழி' கள் தொடர்பாக அவதானமாக இருங்கள்

### தாயகத்தில் உள்ள கல்வியாளர்களையும் பொதுமக்களையும் வேண்டி நிற்கும் உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கம்

கடந்த 50 ஆண்டு காலமாக உலகெங்கும் கிளைகளை அமைத்து தமிழ்மொழிக்கும் பண்பாட்டுக்கும் மற்றும் இளைய தலைமுறையினருக்காகவும் புனிதமான பணிசெய்து வரும் உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்திற்கு அபகீர்த்தி ஏற்படுத்தும் வகையில் ஆங்காங்கே சட்டவிரோதமான முறையில் செயற்பட்டு வரும் சில குழுக்கள் தொடர்பாக உலகெங்கும் வாழும் தமிழ் மக்களுக்கும் குறிப்பாக எமது சமூகத்தின் அறிவுத் தளத்தில் கம்பீரமாக நின்று கொண்டிருக்கும் கல்வியாளர்களுக்கும். அறியத்தரும் வகையில் இந்த அறிக்கையை கனடாவில் தலைமையகத்தைக் கொண்டு இயங்கும் உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் செயற்குழு வெளியிடுகின்றது. எனவே யாழ்ப்பாணப் பல்கலைகழகத்தில் எமது அனுமதியில்லாமலும் சட்ட விரோதமாகவும் எதிர்வரும் யூன் மாதம் 14ம் திகதி தொடக்கம் 16ம் திகதி வரை யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் உள்ள "கைலாசபதி கலையரங்கில் ஒரு மாநாடு நடைபெறவுள்ளதாக அறிவிக்கும் துண்டுப் பிரசுரம் ஒன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது ஒரு 'மோசடி"யாகும் இவ்வாறு உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் செயலாளர் நாயகம் ஜேர்மனி வாழ் துரை கணேசலிங்கம். துணைத் தலைவர் கனடா வாழ் சிவா கணபதிப்பிள்ளை மற்றும் சர்வதேச ஊடகப் பொறுப்பாளர் ஆர். என். லோகேந்திரலிங்கம் ஆகியோர் கூட்டாக வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (தொடர்ச்சி 12ம் பக்கம்)

தாமோர் நகை அடைவு மாளிகை
THAMOR PAWN BROKER
*கனேடிய அரசின் அங்கீகாரம் பெற்றவர்கள்
*நம்பிக்கை நாணயத்திற்கு உத்தரவாதம்
குறைந்த வட்டியுடன் எவ்வளவு தொகை வேண்டும் என்றாலும் மிசிசாகாவிலும் பிறாம்ரனிலும் அமைந்துள்ள எமது அடைவு மாளிகையை நாடுங்கள்.
வர்த்தக துறையில் 20 வருட முன்னோடிகள்
107 Dundas St, East (2nd flr) Mississauga, ON, L5A 1W7 905-272-1222
23 -8907 The Gore Rd. Brampton, ON L6P 2L1 905-794-4404
online service: www.remitbee.com

இவ்விடத்தில்
விளம்பரம் செய்ய எம்மை அழையுங்கள்
416-752-1524

INCOME TAX! INCOME TAX! INCOME TAX!
Personal ✓ Corporation ✓ New Home HST Filling
Selva Vettyvel
416.568.4301, 905.471.4050
204-7 Eastvale Drive, Markham ON. L3S 4N8


LATIKA PRODUCTIONS
ISAI Aruvi
2024
CANADA EVENT CENTER Whitby
JUNE 28
5 - 11 PM
FOR TICKETS CALL
647-996-5922
905-201-6000
● HARINI ● TIPPU ● KPY BALA ● ARAVIND K ● VARSHA
● VITHUSAYNI ● AJEESH ● THAMIRAA ● PRIYANTHY
POWERED BY Latika Gold House
LISA
SMART RESTORATION
HARWOOD
MPK CUSTOM FRAME INC.
STARZ DANCE
24 HOURS TAMIL NEWS
உதயன்
Scarborough Dosa boyz
GLORIOUS

பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்

உதயன் வெளியீட்டாளர்கள் | Uthayan Publishers

EDITOR IN CHIEF: R. N.Logendralingam
OFFICE ASSISTANT: Pirabu
GRAPHIC: Pathma, Yalini, Logan & Shanthy (Aum Sign) and Ganesh.
TECHNICAL: Janani and Bala
PRINTERS: Web News Printing Inc.
DISTRIBUTION: Yogarajah,

Phone: 416 752 1524, Fax: 416 752 6703
4062 Ellesmere Road, Scarborough ON M1C 1J2
website: www.uthayannews.ca email: Uthayannews@yahoo.com

Canada
We acknowledge the financial support of the Government of Canada

உதயன் கதிரோட்டம்

# அநீதிக்கு எதிரான எழுத்துப் பணியாற்றும் ஊடகவியலாளர்கள் மீது அநியாயமான முறையில் அச்சுறுத்தல்களா?

இலங்கையில் கடந்த பல ஆண்டுகளாக ஊடகவியலாளரகளை ஊக்குவித்து அரசியவாதிகள் உரையாற்றுவதும் பின்னர் அதே அரசியல்வாதிகள் அல்லது அரச அதிகாரிகள் செய்யும் தவறுகளை சுட்டிக்காட்டும் பொது மக்க்ளையோ அன்றி ஊடகவியலாளர்களையோ தங்கள் காவல் நாய்களாக விளங்கும் பாதுகாப்புப் படையினரை ஏவி அவர்கள் மீது தாக்குதல்களையோ அன்றி கொலை வெறித்தாக்குதல்களையோ நடத்துவது என்பது சாதாரணமாக இடம்பெறும் சம்பவங்களாகி விட்டன.

இதனை விட பரிதாபமான விடயம் எதுவென்றால், தங்கள் சார்பாக ஊடகவியலாளர்கள் மேற்கொள்ளும் சமூக நீதிக்கு முரணான விடயங்களை சுட்டிக்காட்டும் தீரத்தைக் கண்டு எதிரியானவன் அவர்கள் மீது தாக்குதல் நடத்தும் போது. ஊடகவியலாளர்கள் வசிக்கும் இடத்தை சூழ்ந்து வாழும் அயலவர்கள் கூட தாக்குதல்களை நடத்துபவர்களுக்கு எதிராக சாட்சிகளாக தோன்று மறுப்புத் தெரிவிப்பது தான்.

சமூகப் பணிபோன்று பத்திரிகையாளர்கள் தங்கள் நேரத்தை செலவு செய்து செய்திகளை எடுத்தும் எழுதியும் ஆற்றும் பணியை சில வேளைகளில் பாராட்டிப் பேசும் அரசியல் தலைவர்கள் கூட தாக்குதல்களுக்குள்ளாகும் ஊடகவியலாளர்களின் பக்கம் திரும்பிப் பார்ப்பதும் இல்லை என்ற கவலைக்குரிய செய்திகள் கடல் தாண்டி எம்மை வந்தடைகின்ற போது. அவ்வாறானவற்றை தாங்கிக் கொள்ள முடியாதவர்களாகவே உள்ளோம்.

கடந்த காலங்களில் தமிழ் ஊடகத்துறையின் மீதான நேரடி மற்றும் மறைமுக தாக்குதல் சம்பவங்கள், படுகொலைகள், உயிரச்சுறுத்தல் நடவடிக்கைகள் வடக்கிலும் கிழக்கிலும் வன்னியிலும் முயல்கள் போன்று முயற்சியுடையவர்களாகவும் சமூகத்திற்கு மிகவும் அவசியமான பணியை ஆற்றுக்கின்றவர்கள் மீது எச்சரிக்கை மற்றும் விசாரணை கெடுபிடிகள் என்பன இன்றும் அதேவடிவத்தில் தொடர்ந்து வருகின்ற நிலையில் இவ்வாறான வன்முறைக் கும்பல்களின் மூலம் ஊடகவியலாளர்களை மௌனிக்கச் செய்யும் எத்தனிப்பானது மிக மிக ஆபத்தான அனுகுமுறையாகும் என்பதை நன்கு உணர்ந்து கொண்டாலும், அவற்றை கண்காணிக்க வேண்டியவர்களே 'கோடரிக் காம்புகளாக' மாறி
புனிதப் பணி செய்யும் பத்திரிகையாளர் தாக்கப்படுவதை நியாயப்படுத்தியும் வருவதற்கு 'சுயநலம்' ஒன்றே முதன்மைக் காரணமாக விளங்குகின்றது.

தமிழர்களின் உரிமைகள் மறுக்கப்பட்டு இருப்பும் கேள்விக்குறியாக்கப்பட்டு வரும் இன்றைய சூழமைவில் தமிழர்கள் எதிர்கொள்ளும் அடக்குமுறைகளையும், நெருக்கடிகளையும் வெளிக்கொணரும் ஒரே வழிமுறையாக ஊடகம் என்னும் தளம் இருந்து வருகிறது. இவ்வாறான நிலையில் யாழ்ப்பாணத்தில் நிகழ்ந்துள்ள பத்திரிகையாளர் த.பிரதீபன் வீட்டின் மீதான தாக்குதலானாது ஊடக சுதந்திரத்தின் மீதான பாரிய அச்சுறுத்தலாகவும். இச் செயற்பாட்டினை தனியே குறித்த ஒரு ஊடகவியலாளருக்கு எதிரான உரிமை மீறலாகவும் நாம் பார்த்து அவற்றிக்கு எதிராக குரல் கொடுக்க வேண்டிய பொறுப்பு எம்மைச் சார்ந்தது என்பதையும் நாம் தெரிந்த கொள்ள வேண்டும்.

யுத்தம் இடம்பெற்ற காலப்பகுதியில், பல்வேறு வடிவங்களில் ஊடகவியலாளர்கள் மீது மேற்கொள்ளப்பட்டு வந்த அடக்குமுறையானது புதிய புதிய வடிவங்களில் இன்றும் தொடர்ந்தவண்ணமேயுள்ளது. இவ்வாறு உயிர்ப்பலியெடுப்புகள், காணாமல்போகச் செய்தல்கள் உள்ளிட்ட பல்வேறு நெருக்கடிகளுக்கு முகம்கொடுத்தவாறே எமது தமிழ் ஊடகத்துறை தமிழ் மக்களின் உரிமைக்குரலாக ஓங்கி ஒலித்து வருகிறது. அதனையும் நசுக்கி தமிழர்களது குரலை மௌனிக்கச் செய்யும் விதமாக ஊடகத்ததுறை மீதான இவ்வாறான தலையீடுகளை நாம் வன்மையாக கண்டிக்க வேண்டும். இது நம் கடமை என்றும் ஓங்கிக் குரல் கொடுக்கவும் தயங்கக் கூடாது.

உங்கள் வீட்டை புதுப்பிக்க வேண்டுமா?



Legalize your basement now!

* Basements
* Bathrooms
* Kitchen
* Flooring
* Accent Walls
* Painting
* Custom Closets



Coverall Group Inc.
Contact: Siva 416-706-8160

## OSTBA ANNUAL GENERAL MEETING 2024

Date: Wednesday, July 17, 2024
Via Zoom link: 647 795 05 04
Pass Code: 29 29 29
Venue: Yarl Co-op Building, 2584, Rugby Road
Mississauga, Ontario, L5B 4B4
Time: 10.00 am

Agenda
1. Registration of participants - Members in good standing
2. Canadian National Anthem
3. Tamil Thaai Vaalthu
4. A minute silence remembering our deceased members and other's
5. Adoption of the minutes of A.G.M held in 2023
6. President's Address
7. Secretary's Annual Report
8. Audited Financial Statements - April 01.2023 to March 31. 2024
9. Discussion of any resolutions
10. A.O.B
11. Note : Resolutions forms are available on our website ostb5.ca under documents

Members attending the AGM through ZOOM will require to have their video on with their name.

Mr. T.Sivaloganathan
Board Secretary (OSTB A)

Mr. Esa Para Esananda
Board President (OSTBA)

Phone 416-473-6880 Email: ostba2019@gmail.com

## யாழ்ப்பாணத்தில் காணி விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம் - கொழும்புத்துறையில் 4 பரப்பு காணி, கொழும்புத்துறை வீதியில் யோகர் சுவாமிகள் மடத்துக்கு அருகாமையிலும் பிள்ளையார் கோவிலுக்கு எதிர் புறமாகவும் விற்பனைக்கு உண்டு.

தொடர்புக்கு : krishnasubram7@gmail.com

What's up number Australia-61,434079623 – Serious Buyers Only

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# யாழ்ப்பாணத்தில் பெருமளவான கேரளக் கஞ்சா மீட்பு!



யாழ்ப்பாணம் குருநகர் பகுதியில் 22 கிலோகிராம் கேரள கஞ்சா பொலிஸாரினால் 10-06-2024 அன்றையதினம் கைப்பற்றப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண பிராந்திய விசேட குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸாரால் குறித்த கஞ்சா கைப்பற்றப்பட்டது.

பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் குருநகர் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பின்போது 10 பொதிகளில் 22 கிலோகிராம் கஞ்சா கைப்பற்றப்பட்டது.

கைப்பற்ற கஞ்சாவை யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ள பொலிஸார், சந்தேக நபரை கைது செய்ய நடவடிக்கை எடுத்துள்ளனர்.


HUMAN RIGHTS COMMISSION OF SRI LANKA

29/05/2024

# ஜனாதிபதி வழங்கிய நியமனம் பறிப்பு — பாதிக்கப்பட்ட பெண் பட்டதாரி மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு

யாழ்ப்பாணத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் இடம்பெற்ற பட்டதாரிகளுக்கான ஆசிரியர் நியமனத்தில் வழங்கப்பட்ட நியமனத்தை இரத்துச் செய்தமை தொடர்பில் பாதிக்கப்பட்ட பெண் பட்டதாரி இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் வவுனியா பிராந்திய அலுவலகத்தில் முறைப்பாட்டை பதிவு செய்துள்ளார்.

குறித்த சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது, கடந்த மாதம் யாழ்ப்பாணம் வருகைதந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் வடக்கில் ஆசிரியர் சேவைக்கு இணைத்துக் கொள்ளப்பட்டவர்களுக்கான நியமன கடிதங்கள் வழங்கும் நிகழ்வு யாழ்ப்பாணம் தந்தை செல்வா கலை அரங்கில் இடம்பெற்றது.

குறித்த வைபவத்தில் கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த பெண் பட்டதாரி ஒருவருக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் ஆசிரியர் நியமனம் வழங்கப்பட்ட நிலையில் குறித்த நியமனத்தில் தவறு இருப்பதாக மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு பரிந்துரை செய்த நிலையில் சில நாட்களில் மீளப் பெறப்பட்டது.

இந்நிலையில் பாதிக்கப்பட்ட பட்டதாரி இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் வவுனியா பிராந்திய அலுவலகத்திற்கு எழுத்து மூலமான முறைப்பாட்டை வழங்கியுள்ளார்.

குறித்த முறைப்பாட்டில் நான் ஆசிரியர் நியமனத்தை கேட்டு பெறவில்லை எனவும் தனக்கு வழங்கிய நியமனத்தை மீளப் பெற்றதன் மூலம் உளநீதியான பாதிப்பை எதிர்நோக்கியுள்ளதுடன் சமூகத்தில் தனது நற்பெயருக்கு களங்கம் ஏற்பட்டுள்ளது.

அதுமட்டுமில்லாத எனது நியமனத்தை மீளப் பெற்றதன் மூலம் நான் அரச சேவையை முறை தவறிப் பெற்றதாக சமூகத்தில் கருத்துக்கள் உருவாகின்ற நிலையில் தனக்குரிய பரிகார நீதியை வழங்குமாறு மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

# பல கோடி செலவில் முழுவதும் கருங்கல்லினாலான அராலி ஞானவைரவர் ஆலய கும்பாபிஷேகம்!

வடக்கு நாகேந்திரமடம் புளியடி ஸ்ரீ ஞான பைரவர் ஆலய ஜீர்ணோத்தாரண அ்ட்டபந்தன மகா கும்பாபிஷேக நிகழ்வு 12-06-2024 அன்றையதினம் வெகு சிறப்பாக நடைபெற்றது.

மங்களகரமான குரோதி வருடம் வைகாசி மாதம் 30ஆம் நாள் (12.6.2024) புதன்கிழமையும் சுக்லபக்ஷ ஷஷ்டியும் 7 மகநக்ஷத்திரமும் சித்தயோகமும் குருஹோரையும் நேத்ரஜீவ பெலமும் கூடிய சுபயோக சுபதினத்தில் உதயாதி காலை மணி 11.00 முதல் நண்பகல் 12.00 மணிவரையுள்ள சிம்ம லக்கினத்தில் அருள்மிகு ஞானவைரவர் சுவாமிக்கும் ஏனைய பரிவார 1 மூர்த்திகளுக்கும் அஷ்டபந்தன மஹாகும்பாபிஷேகம் நடைபெற்றது.







குரோதி வருடம் வைகாசி மாதம் 27ம் நாள் (09.06.2024) ஞாயிறு அதிகாலை சூர்யோதயத்தில் கர்மா ஆரம்பமானது. அந்தவகையில் கும்பாபிஷேகம் வெகு சிறப்பாக நடைபெற்றது.

இந்தியாவில் இருந்து அழைத்து வரப்பட்ட திருச்செந்தூர் சுப்பிரமணியசுவாமி கோவில் விநாயகர்த்தா, திருக்கையிலை மணி பிரம்மஸ்ரீ சு. சிவஸ்வாமிசாஸ்திரி குருக்கள் தலைமையிலான குழுவினரால் இந்த கும்பாபிஷேக நிகழ்வு நடாத்தி வைக்கப்பட்டுள்ளது.

கும்பாபிஷேக நிகழ்வில் பசு, குதிரை, யானை ஆகியன பூஜை வழிபாடுகளில் ஈடுபடுத்தப்பட்டன.

இந்த ஆலயமானது பல கோடி ரூபா செலவில் முழுவதும் கருங்கல்லினால் அமைக்கப்பெற்றுள்ளது. அனைத்து கருங்கல்லு வேலைகளும் இந்தியாவிலேயே செய்யப்பட்டு இந்தியாவில் இருந்து கட்டடக்கலைஞர்களை அழைத்து வந்து அந்த கருங்கற்களை பொருத்தி ஆலயம் அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# யாழ். சாவகச்சேரி A9 வீதியில் கைதடி — நுணாவில் பகுதியில் டிப்பருடன் மோதுண்டு இளங் குடும்பஸ்தர் ஒருவர் சம்பவ இடத்தில் உயிரிழந்துள்ளார்



யாழ். சாவகச்சேரி A9 வீதியில் கைதடி - நுணாவில் பகுதியில் டிப்பருடன் மோதுண்டு இளங் குடும்பஸ்தர் ஒருவர் சம்பவ இடத்தில் உயிரிழந்துள்ளார்.

இந்த சம்பவம் புதன்கிழமை (12) அதிகாலை 4.30 மணியளவில் இடம் பெற்றுள்ளது.

யாழ்ப்பாணத்திலிருந்து சாவகச்சேரி நோக்கி பயணித்த டிப்பர் வாகனத்துடன் வீதியில் நடந்து பயணித்த குடும்பஸ்தர் மோதுண்டு உயிரிழந்தள்ளார்.

உயிரிழந்தவர் குருணாகலை சேர்ந்தவர் 34 வயதுடைய இளங் குடும்பஸ்தர் என தெரிவிக்கப்படுகிறது.

சம்பந்த தொடர்பான மேலதிக விசாரணைகளை சாவகச்சேரி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# புளொட் — தேசிய மக்கள் சக்தி தலைவர்கள் இன்று சந்திப்பு



எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் சம்பந்தமாக, தேசிய மக்கள் சக்தியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான அநுரகுமார திசாநாயக்க அவர்களுக்கும் புளொட் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான தர்மலிங்கம் சித்தார்த்தன் அவர்களுக்குமிடையிலான சந்திப்பு 12-06-2024 அன்று பிற்பகல் 1.00 மணியளவில் த.சித்தார்த்தன் MP அவர்களின் கந்தரோடை இல்லத்தில் நடைபெற்றது.

இச் சந்திப்பில், தேசிய மக்கள் சக்தியின் தேசிய நிறைவேற்றுப் பேரவை உறுப்பினர் பிமல் ரத்நாயக்க, தேசிய மக்கள் சக்தியின் மத்திய செயற்குழுவின் உறுப்பினரும் யாழ் மாவட்ட பிரதான அமைப்பாளருமான இராமலிங்கம் சந்திரசேகர் மற்றும் புளொட் அமைப்பின் மத்தியகுழு உறுப்பினர் கௌதமன் ஆகியோரும் கலந்து கொண்டிருந்தார்கள்.

ஒன்றரை மணி நேரத்திற்கும் மேலாக நடைபெற்ற இச்சந்திப்பின்போது, தமிழ் மக்களின் அரசியல் தீர்வு தொடர்பாக அதாவது அதிகாரப் பரவலாக்கல் தொடர்பாக தங்களது கட்சி எடுத்துள்ள நிலைப்பாடு என்ன என்பது இதுவரை தெளிவுபடுத்தப்படவில்லை. ஆகவே அதிகாரப் பரவாக்கல் தொடர்பாக தெளிவான நிலைப்பாட்டினை தமிழ் மக்களுக்கு நீங்கள் வெளிப்படுத்த வேண்டும் எனவும், இணைந்த வடக்கு கிழக்கை நீதிமன்றத்தினூடாக தனித்தனி மாகாணங்களாக பிரிப்பதற்கு பிரதான பங்காளியாக தங்களது ஜே.வி.பி கட்சி செயற்பட்ட விடயத்தில் எம் மக்கள் மத்தியில் இன்றுவரை அதிருப்தி இருப்பதால் இவ்விடயத்தில் தேசிய மக்கள் சக்தியின் உறுதியான நிலைப்பாட்டினை நீங்கள் வெளிப்படுத்தும் பட்சத்தில், உங்கள் கட்சி சம்பந்தமான தமிழ் மக்களது மனநிலையில் மாற்றம் ஏற்படலாம் எனவும் தலைவர் திரு. சித்தார்த்தன் அவர்கள் தெளிவுபடுத்தினார்.

அதேநேரத்தில் எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் தமிழ் பொது வேட்பாளரை நியமிப்பதற்கு, ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியில் அங்கத்துவம் வகிக்கின்ற ஐந்து கட்சிகளும் ஆதரவு தெரிவித்துள்ளோம். சமூக மட்ட அமைப்புக்களும் அதற்கான முன்னெடுப்புக்களை மேற்கொண்டு வருகின்றன. தமிழ் பொது வேட்பாளர் ஒருவர் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் பட்சத்தில் ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியாக நாங்கள் முழுமையாக அவருடனேயே செயற்படுவோம் என்பதையும் திரு.த.சித்தார்த்தன் அவர்கள் தெரிவித்தார்.

தொடர்ந்து, ஜனாதிபதி தேர்தல் தொடர்பாக வடக்கிலும் கிழக்கிலும் தெற்கிலும் காணப்படும் பிந்திய நிலைமைகள் பற்றி கலந்துரையாடப்பட்டதோடு, எதிர்காலத்திலும் தொடர்ந்து சந்திப்புக்களை மேற்கொள்வதற்கு இரு தரப்பிலும் சம்மதம் தெரிவிக்கப்பட்டது.



# ஊடகவியலாளர்களை "காணொளி பதிவு செய்ய வேண்டாம்" என மிரட்டிய சஜித்தின் பாதுகாப்பு பிரிவு!

இலங்கை செய்திகள்
Sri Lanka News

எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச அவர்கள் சுழிபுரம் விக்டோரியா கல்லூரிக்கு பேருந்து ஒன்றினை வழங்கினார்.

பேருந்துக்கு வழக்கம்பரை அம்மன் ஆலயத்தில் பூஜை வழிபாடுகள் இடம்பெற்றன. அதனைத் தொடர்ந்து சஜித் பிரேமதாச அவர்கள் பேருந்தில் அமர்ந்து அதனை செலுத்துவதற்கு தயாராகும் போது ஊடகவியலாளர்கள் அதனை காணொளி மற்றும் புகைப்படம் எடுத்தனர்.

உடனே அங்கிருந்த சஜித்தின் பாதுகாப்பு பிரிவினர் ஊடகவியலாளர்களின் கேமராவினை கையால் தட்டி புகைப்படம் மற்றும் காணொளி எடுக்க வேண்டாம் என அச்சுறுத்தினர். இதனால் அங்கு சலசலப்பு ஏற்பட்டது.

# நாம் ஆட்சிக்கு வந்தால் கீரிமலை ஜனாதிபதி மாளிகைக்கு அருகில் அழிவடைந்த ஆலயங்களை மீள புனரமைப்போம் என்கிறார் தேசிய மக்கள் சக்தி தலைவர் அனுர குமார திஸாநாயக்க

போரில் எந்த குற்றமும் செய்யாத பாடசாலை சிறுவர்கள் குழந்தைகள் குண்டு தாக்குதலுக்குள்ளாகி உயிரிழந்து, யுத்தம் முடிவுக்கு வந்து இவ்வளவு ஆண்டுகளாகியும் நீங்கள் எல்லோரும் இணைந்து இன்னமும் இனப்பிரச்சினைக்கு தீர்வை வழங்க முடியவில்லையே என தேசிய மக்கள் சக்தியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான அனுர குமார திஸாநாயக்கவிடம் சைவ சமயத் தலைவர்கள் ஆதங்கத்தை வெளியிட்டனர்.

யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்துள்ள அனுரகுமார திஸாநாயக்க தலைமையிலான குழுவினர் நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்திற்குச் சென்று சந்திப்பில் ஈடுபட்டனர்.

சந்திப்பில் நல்லை ஆதீன குரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரம்மாச்சார்ய சுவாமிகள், அகில இலங்கை இந்து மாமன்றத்தின் உபதலைவர் ஆறு திருமுருகன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

இதன்போது, நாட்டில் நீண்டகாலமாக நிலவும் இனப்பிரச்சினையை தீர்க்க ஜேவிபி பங்காற்ற வேண்டும் என வலியுறுத்திய சைவ சமயத் தலைவர்கள், போரில் எந்த குற்றமும் செய்யாத பாடசாலை மாணவர்கள் சிறுவர்கள் குழந்தைகள் குண்டு தாக்குதலுக்குள்ளாகி உயிரிழந்தபோது இடதுசாரி தலைவர்களாக இருந்த நீங்கள் ஏன் எதிர்ப்பை வெளியிடவில்லை என ஆதங்கம் வெளியிட்டனர்.

வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் விவாகரம் நீடித்து செல்லும் நிலையில் அதற்கு தீர்வு என்ன என கோரிய போது எனது சகோதரியும் காணமலாக்கப்பட்டவர் தான். எனக்கு அதன் வலி தெரியும். நாம் ஆட்சிக்கு வந்து அதற்கொரு தீர்வை காண்போம் என அனுர குமார திஸாநாயக்க தெரிவித்தார்.



வெடுக்குநாறிமலை உள்ளிட்ட பல இடங்களில் சைவ ஆலயங்கள் அழிக்கப்படும் நிலையில் பௌத்த விகாரைகள் அமைக்கப்படுகிறன.

தமிழர் பிரச்சினைக்கு தீர்வு காணாமல் இந்த நாடு ஒருபோதும் முன்னேறாது என சைவ சமயத் தலைவர்கள் சுட்டிக்காட்டியபோது.

சமயத்தின் பெயரால் சண்டை பிடிக்க கூடாது என தெரிவித்த அனுர குமார திஸாநாயக்க, நாம் ஆட்சிக்கு வந்தால் கீரிமலை ஜனாதிபதி மாளிகைக்கு அருகில் உள்ள அழிவடைந்த ஆலயங்கள் மீள புனரமைக்க நடவடிக்கை எடுப்போம் எனவும் தெரிவித்தார்.

ஜனாதிபதி தேர்தல் களம் சூடுபிடித்து தென்னிலங்கை வேட்பாளர்கள் வடக்கிற்கு வருகின்ற போக்கு அதிகரித்துள்ள நிலையில், குறித்த சந்திப்பில் அனுர குமார திஸாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தியினர் ஜனாதிபதி தேர்தல் தொடர்பாக எதையும் வெளிப்படையாக பேசவில்லை என்றும் அறியமுடிகிறது.

# ஊடகவியலாளரின் வீட்டின் மீது தாக்குதல் — தமிழ் தேசிய மக்கள் முன்னணி கண்டனம்!

ஊடகவியலாளர் தம்பித்துரை பிரதீபன் அவர்களின் வீட்டிற்கும் உடமைகளுக்கும் சேதமேற்படும் வகையில் இன்று அதிகாலை மேற்கொள்ளப்பட்ட தாக்குதலை வன்மையாகக் கண்டிக்கின்றோம் என தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் ஊடகப் பேச்சாளர் கனகரத்தினம் சுகாஷ் தெரிவித்துள்ளார்.

இன்றையதினம் அவர் வெளியிட்ட ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். அவ் அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

இது கருத்துக்களைக் கருத்துக்களால் எதிர்கொள்ளத் தைரியமற்ற கோழைகளின் அற்பத்தனமான சட்டவிரோத செயற்பாடாகும்.

இத்தாக்குதலில் ஈடுபட்ட நபர்களைக் கைதுசெய்வதற்கு பொலிசார் உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று கோருவதோடு, பாதிக்கப்பட்ட ஊடகவியலாளருக்கு எமது ஆதரவைத் தெரிவிக்கின்றோம் என குறிப்பிடப்பட்டுள்ளது.



இலங்கை செய்திகள்
Sri Lanka News

# தனி தமிழ் வேட்பாளர், தேர்தல் பகிஷ்கரிப்பு என்பன வரலாறு கற்றுத்தந்த பலனளிக்காத வீணான முயற்சிகளே

## தமிழ் தேசிய பணி சபை தலைவர், நல்லையா குமரகுருபரன்



தனி தமிழ் வேட்பாளர், தேர்தல் பகிஷ்கரிப்பு என்பன எதிர் கால பேரம்பேசும் வல்லமையை இழக்கச்செய்யும்.

அதனை விடவும் தமிழ் மக்கள் பெரும் பான்மையாக வாக்களிக்கதவறினால் நம்மவர் கடந்த கால வரலாறுபோல் சிறு தொகையே வாக்களிப்பார்களாயின் எமது தமிழ்மக்களாணை கோரும் சுயநிர்ணய உரிமையை, அபிலாசைகளை, தமிழ்மக்கள் பெரும்பான்மையால் நிராகரித்ததாக உலகிற்கு அடித்து கூறுவர். சுயநிர்ணய உரிமையும் கனடாவின் கியூபேக் ஆக போய்விடும்.

பேரம்பேசும் வல்லமையுள்ள, சிங்கள தலைமைகள் ஏற்றுக்கொள்ளக்கூடிய பாராளுமன்ற உறுப்பினர்கள், பிரமுகர்கள் இன்னமும் எம்மிடையே உள்ளனர். இவர்களால் முதலில் பேச்சுவார்த்தையை ஆரம்பித்து தேசிய வேட்பாளர்களை வலிந்திளுத்து தீர்வு பற்றிய அவர்தம் உத்தரவாதம் பெற வேண்டும். தேர்தலின் பின்னர் தவறின் உலகறியச் செய்வது தனி தமிழ் வேட்பாளர், தேர்தல் பகிஷ்கரிப்ப என்பதை விட சிறந்த சாணக்கியமாகும் எனவும் முன்னாள் மேல் மாகாணசபை உறுப்பினர் என். குமரகுருபரன் தெரிவித்தார்.

நாம் விரும்பியோ விரும்பாமலோ தேசியகட்சிகளூடாக ஒரு ஜனாதிபதி தெரிவாகப் போகின்றார் ஆதலின் எமது தனி தமிழ் வேட்பாளரை அவர்கள் பெரிது படுத்த வேண்டிய தேவை இல்லை. தேர்தலை பகிஸ்பரிப்பதன் மூலம் நமக்கான உரிமையை நாமே இழக்க தயாரானவர்களாகின்றோம்.

மாறாக. நாம் நம்மையிழந்த, நம்வளங்களையிழந்த போரினால் அனைத்துலகமும் எமது அபிலாசைகளை அறியும். பொதுத்தேர்தலிகளில் தமிழர் விடுதலை கூட்டணியின் ஏகோபித்த வெற்றிமூலமும் தமிழ் தேசிய கூட்டமைப்பின் வெற்றிமூலமும் எமது சுய நிர்ணய உரிமையை உலகறிய செய்துவிட்டோம். நாமும் நம் வல்லமையுள்ள மக்கள் பிரதிநிதிகள் இதற்காக ஒன்றுபட்டு தேசிய வேட்பாளர்களுடன் பேச்சு வார்த்தையை ஆரம்பியுங்கள். வல்லவர்களாக சுமந்திரன், விக்னேஷ்வரன் சித்தார்த்தன், செல்வம் அடைக்கலநாதன் போன்றவர்கள் இதனை முன்னெடுக்க வல்லவர்களே. பழமைபோல் பழக்கப்பட்ட செத்த பாம்பை மீண்டும் மீண்டும் அடிக்கும் செயல்களை செய்து காலம் கடத்துவது வீணான செயல் எனவும் முன்னாள் மேல் மாகாணசபை உறுப்பினர் என். குமரகுருபரன் தெரிவித்தார்.

# மல்லாவி வைத்தியசாலைக்கு கனடா செந்தில் குமரன் நிவாரண நிதியத்தினால் இரத்த சுத்திகரிப்பு இயந்திரங்கள் வழங்கிவைப்பு!

**- விஸ்ணுதாசன் ஜெனன் (சுயாதீன ஊடகவியலாளர்)**



முல்லைத்தீவு மாவட்டத்தின் மல்லாவி ஆதார வைத்தியசாலையின் பயன்பாட்டிற்கான இரத்த சுத்திகரிப்பு இயந்திரம் கனடா செந்தில் குமரன் நிவாரண நிதியத்தினால் 09-06-2024 ஞாயிற்றுகிழமை மாலை வழங்கி வைக்கப்பட்டன.

இந்நிகழ்வானது மல்லாவி ஆதார வைத்தியசாலையின் சிறுநீரக சிகிச்சை பிரிவு கட்டிடத் தொகுதியில் இடம்பெற்றிருந்தது.

இதன்போது கனடா செந்தில்குமரன் நிவாரண நிறுவனத்தின் அனுசரணையில் 3,367,000 செலவில் இரத்த சுத்திகரிப்பு இயந்திரங்கள் மல்லாவி ஆதார வைத்தியசாலை நிர்வாகத்திடம் உத்தியோகபூர்வமாக கையளிக்கப்பட்டது.

மல்லாவி ஆதார வைத்தியசாலையின் பதில் வைத்திய அத்தியட்சகர் வைத்தியர் B.H.S. தேஷாஞ்ஜலி மற்றும் யாழ் போதனா வைத்தியசாலையின் சிறுநீரக மருத்துவ ஆலோசகர் வைத்தியர் பிரம்மா. R. தங்கராசா ஆகியோர் தலைமையில் இடம்பெற்ற மேற்படி கையளிப்பு நிகழ்வில் செந்தில் குமரன் நிவாரண நிதிய பொறுப்பாளர் வழங்கி வைத்தார்.

மேலும் நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் பத்திரன, சிறப்பு விருந்தினராக முல்லைத்தீவு மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர். M. உமாஷங்கர்.

செந்தில்குமரன் நிவாரண நிறுவன ஸ்தாபகர் திரு. டி. செந்தில்குமரன் ஆகியோர் கலந்து சிறப்பித்திருந்தனர்.

நிகழ்வில் முன்னைநாள் மல்லாவி வைத்திய அதிகாரிகள், மாவட்ட வைத்தியர்கள், தாதிய உததியோகத்தர்கள், பணியாளர்கள் சமூக சேவகர்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.







# வட்டுக்கோட்டைக்கு அருகில் உள்ள அராலி என்னும் கிராமத்தில் இளம் பெண் தூக்கிட்டு உயிர்மாய்ப்பு!

அராலி வடக்கு பகுதியில் இளம் பெண்ணொருவர் தவறான முடிவெடுத்து தூக்கிட்டு உயிர்மாய்த்துள்ளளார். அதே பகுதியை சேர்ந்த 24 வயதுடைய சிவகரன் மயூரா என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

குறித்த பெண்ணின் தந்தையும், அண்ணாவும் ஏற்கனவே உயிரிழந்துள்ளனர். இந்நிலையில் அவர் உயிர்மாய்த்துள்ளார்.

சடலம் மீதான பிரேத பரிசோதனைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ. ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். உடற்கூற்று பரிசோதனைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.



# பருத்தித்துறை – துன்னாலையில் நீண்ட காலமாக இயங்கி வந்த சட்டவிரோத கொலைக்களம் முற்றுகை

பருத்தித்துறை - துன்னாலைப் பகுதியில் நீண்ட காலமாக இயங்கி வந்த சட்டவிரோத கொல்களத்தை முற்றுகையிட்ட சாவகச்சேரிப் பொலிஸார் இறைச்சியாக்கப்படவிருந்த கன்றுத்தாச்சி மாடு உட்பட மூன்று பசு மாடுகளை 11-06-2024 செவ்வாய்க்கிழமை காலை வேளையில் உயிருடன் மீட்டுள்ளனர்.

சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மட்டுவில் பிரதேசத்தில் அண்மையில் வளர்ப்பு மாடுகள் திருடப்பட்டதாக பொலிஸாருக்கு கிடைத்த முறைப்பாட்டின் அடிப்படையில் நீண்ட தேடுதலுக்கு மத்தியில் பொலிஸார் மேற்படி சட்டவிரோத கொல்களத்தை கண்டுபிடித்துள்ளனர்.

இதன்போது சாவகச்சேரி - மட்டுவில் கிராமத்தில் திருடப்பட்ட ஒரு மாட்டினை பொலிஸார் மீட்டதுடன் - ஏனைய இரண்டு மாடுகள் அடையாளம் காணப்படாத நிலையில் சாவகச்சேரிப் பொலிஸ் நிலையத்தில் வைத்து பராமராக்கப்பட்டு வருகின்றது.

அதேவேளையில் மட்டுவில் கிராமத்தில் திருடப்பட்ட ஏனைய மாடுகள் இறைச்சியாக்கப்பட்டிருக்கலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.



இந்த சுற்றிவளைப்பின் போது மூன்று பசு மாடுகள் மீட்கப்பட்டதுடன் பசு மாடுகளை கடத்த பயன்படுத்தப்பட்ட வாகனம் ஒன்றுடன் பிரதான சந்தேக நபர் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளார்.



# திருநெல்வேலி, கொக்குவில் பகுதிகளில் சுகாதாரமற்ற தெருவோர வியாபாரம் – மூவரிற்கு தண்டம்

திருநெல்வேலி பொது சுகாதார பரிசோதகர் பா.சஞ்சீவன் தலைமையிலான பொது சுகாதார பரிசோதகர் குழுவினரால் திருநெல்வேலி, கொக்குவில் பகுதிகளில் கடந்த (மே) மாதம் 29ம் திகதி இரவு தெருவோர வியாபார நிலையங்கள் பரிசோதிக்கப்பட்டன.

இதன்போது மருத்துவ சான்றிதழ் இன்றி உணவை கையாண்டமை, தனிநபர் சுகாதாரம் இன்றி உணவை கையாண்டமை போன்ற அடிப்படையான சுகாதார வசதிகள் கூட இல்லாமல் சில வியாபார நிலையங்கள் இயங்கியமை பரிசோதனையில் இனங்காணப்பட்டது.

அவ்வாறு இனங்காணப்பட்ட மூன்று வியாபார உரிமையாளர்களிற்கு எதிராக யாழ் மேலதிக நீதவான் நீதிமன்றில் பொது சுகாதார பரிசோதகர் பா. சஞ்சீவன் இனால் வழக்குகள் 10.06.2024 திங்கட்கிழமை தாக்கல் செய்யப்பட்டது. வழக்குகளை அன்றைய தினமே விசாரணைக்கு எடுத்துக்கொண்ட மேலதிக நீதவான் செ. லெனின்குமார் மூவரிற்கும் மொத்தமாக 35,000/= தண்டம் அறவிட்டதுடன் கடும் எச்சரிக்கையும் விடுத்தார்.



இலங்கை செய்திகள்
Sri Lanka News

# வடக்கில் கனடாவின் துணைத்தூதரகம் ஒன்றை திறக்க நல்லை ஆதீனம் வேண்டுகோள்



நடராசா லோகதயாளன்

கனடா துணைத்தூதரகத்தை வடக்கில் நிறுவி, மக்களுக்கு உதவவேண்டும் என நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் மற்றும் அகில இலங்கை இந்து மாமன்றத்தின் துணைத் தலைவர் ஆறு. திருமுருகன் ஆகியே-ார் கனேடியத் தூதுர் எரிக் வால்ஷ் அவர்களிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கனடா நாட்டுத்தூதுவர் யாழ்ப்பாணத்தில் நல்லை ஆதீனத்தின் குரு முதல்வர் மற்றும் ஆறு திருமுருகன் உட்பட இந்துமத ஆன்மீக பெரியோர்களை சந்தித்து பேசினார். அதன் போதே இந்த கோரிக்கையை இருவரும் விடுத்தனர்.

இதன்போது நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசந்தர ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன், ஆன்மீகச்சுடர் ரிஷி தொண்டுநாதன் சுவாமிகள் ஆகியோருடன் நாட்டின் இன்றைய சூழ்நிலை தொடர்பாக கனேடிய தூதர் கலந்துரையாடினார்.



நல்லை ஆதீன முதல்வர் கனடாநாட்டில் வாழும் எம்மக்களைக் கௌரவமாக அங்கு வழிநடத்துவதற்கு நன்றி கூறியதோடு இந்த நாட்டில் நிலவும் இனப்பிரச்சனைத் தீர்வு தொடர்பாக கனடா நாடு இலங்கை அரசுடன் பேசவேண்டும் என்பதனை வலியுறுத்தினர்.

கனடா துணைத்தூதரகத்தை வடக்கில் நிறுவி, மக்களுக்கு உதவவேண்டும் எனவும், கனடா தூதுவராலய விசா அலுவலகம் வடக்குப் பகுதியில அமையவேண்டிய அவசியத்தையும் விளக்கினர். தொடர்ந்து போரில் இறந்தவர்களுக்கு மனிதநேய அடிப்படையில் வழிபாடு செய்யும் உரிமையினையும் எடுத்துரைத்தனர்.

# யாழ். மாவட்ட ரீதியாக சாதனை படைத்த வஜீனாவுக்கு ஊர் திரண்டு விழா எடுத்த நெகிழ்ச்சி!

வெளியாகிய 2023 ஆம் ஆண்டுக்கான க.பொ.த உயர்தர பரீட்சையில் மாவட்ட ரீதியாக முதலாவது இடத்தையும், அகில இலங்கை ரீதியாக 32வது இடத்தையும் பெற்ற பாலகிருஷ்ணன் வஜினா அவர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வானது வெகு சிறப்பாக நடைபெற்றது.

குறித்த மாணவி கல்விகற்ற பாடசாலையான பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தர கல்லூரியில் இருந்து, மேற்கத்தேய இசை வாத்தியங்கள் முழங்க, ஊர் மக்கள், ஆசிரியரகள், சக மாணவர்கள், கல்விமான்கள், அயல் ஊரவர்கள் என அனைவரும் புடைசூழ அவரது ஊரான சாந்தை கிராமத்திற்கு ஊர்வலமாக காரில் அழைத்துச் செல்லப்பட்டார்.

பின்னர் சாந்தை சன சமூக நிலையத்தில் குறித்த மாணவிக்கு கௌரவிப்பு நிகழ்வு இடம்பெற்றது. ஊரவர்கள், அயலவர்கள், உறவினர்கள், ஆசிரியர்கள் கல்விமான்கள் என பலர் மாணவிக்கு மலர் மாலை அணிவித்ததுடன், தங்க ஆபரணங்கள் உள்ளிட்ட பரிசு பொருட்களுடன் பல்வேறு பரிசுப் பொருட்களும், நினைவுச் சின்னங்களும் வழங்கி வைக்கப்பட்டன.







ஊடகங்கள் வாயிலாக மாணவியின் சாதனையை பார்வையிட்ட புலம்பெயர் தேசங்களில் வசிக்கும் உறவுகளும் குறித்த மாணவிக்கு பரிசுப் பொருட்களை வழங்கியதுடன், புலம்பெயர் தேசத்தில் வசிக்கும் ஒருவர் துவிச்சக்கர வண்டியையும் வழங்கி வைத்தார். அதனை வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் சபா குகதாஸ் மாணவியிடம் கையளித்தார்.

குறித்த மாணவி மிகவும் வறுமை கோட்டுக்குட்பட்ட குடும்பத்தை சேர்ந்தவர் என்பதுடன் அவர் கல்வி கற்பதற்கு வீட்டில் ஒரு மேசை கூட இல்லாத நிலையில் வெற்று தரையில் இருர்தே கல்வியினை கற்று இந்த நிலையை அடைந்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த நிகழ்வில் மாணவியின் உறவினர்கள், ஊரவர்கள், அயலவர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், கல்விமான்கள் என பலரும் கலந்து சிறப்பித்தனர்.

THANA INSURANCE Inc.

# Thana Insurance Inc

## NON MEDICAL INSURANCE

| AGE | 45 | | 50 | | 55 | | 60 | | 65 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | M | F | M | F | M | F | M | F | M | F |
| 10 K | 22 | 20 | 22 | 20 | 25 | 23 | 34 | 29 | 45 | 37 |
| 25 K | 37 | 34 | 47 | 40 | 54 | 49 | 76 | 64 | 106 | 84 |
| 50 K | 69 | 62 | 89 | 75 | 104 | 92 | 147 | 123 | 206 | 162 |
| 100 K | 133 | 118 | 172 | 144 | 202 | 179 | 289 | 241 | 406 | 318 |
| 200 K | 260 | 231 | 337 | 282 | 398 | 353 | 572 | 476 | 807 | 631 |

## 20 YEARS TERM - NON MEDICAL INSURANCE

| AGE | 45 | | 50 | | 55 | | 60 | | 65 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | M | F | M | F | M | F | M | F | M | F |
| 100K | 32 | 26 | 50 | 40 | 86 | 60 | 140 | 94 | 265 | 171 |
| 200 K | 60 | 46 | 103 | 74 | 166 | 115 | 275 | 182 | 468 | 321 |



Call us Today

Cell : 416-728-5772
Office : 416-519-3896

**Thana Manickavasagar**
Insurance Broker
thana7@gmail.com
www.thana.ca
fax : 647-547-8147
80 Nashdene Road ,#D218,
Scarborough,ON,M1V 5E4

20 வருடம் மட்டுமே பணம் செலுத்தும் காப்புறுதி


மருத்துவ பரிசோதனை இல்லாத காப்புறுதி

சாரதி அனுமதிப்பத்திரம் பறிமுதல் செய்யப்பட்டு காப்புறுதி செய்யமுடியாமல் இருப்பவர்களிற்கும்

உங்கள் காப்புறுதி முகவர் தற்போது சேவையில் இல்லாவிடின் உங்கள் திட்டத்தை இரத்து செய்யாமல் அதில் இலவசமாக மாற்றங்களை செய்ய என்னை அழையுங்கள்

# தமிழ்ப் பொது வேட்பாளர்: சூடு பிடிக்கும் பிரச்சாரக் களம்

- யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார் -



தமிழ் பொது வேட்பாளர் வேண்டுமா வேண்டாமா என்ற விவாதம் சூடு பிடிக்கத் தொடங்கியுள்ளது. இந்த விவாதத்தை முதலில் தொடக்கி வைத்தது அரசியல் விமர்சகர்கள் சிலர், அரசியல்வாதிகளான சுரேஷ் பிரேமச்சந்திரன், விக்னேஸ்வரன், இவர்களோடு மக்கள் மனு என்று அழைக்கப்படும் ஒரு குடிமக்கள் சமூகம். யாழ்ப்பாணத்தை மையமாகக் கொண்டு இயங்கும் காணொளி ஊடகம் ஒன்றின் அனுசரணையோடு இயங்கும் ஒரு குடிமக்கள் சமூகம் அது. பொது வேட்பாளருக்கு ஆதரவாக அந்த சிவில் சமூகம் வடக்கு கிழக்கில் இதுவரை மூன்று கருத்தரங்குகளை ஒழுங்குபடுத்தியிருக்கின்றது. இக்கருத்தரங்குகளில் பொது வேட்பாளரை ஆதரித்து எழுதிவரும் கருத்துருவாக்கிகள், அரசியல் செயற்பாட்டாளர்கள், அரசியல்வாதிகள், ஆர்வலர்கள் பங்குபற்றுவதுண்டு.

அந்தச் சிவில் சமூகம் தமிழ் மக்கள் பொதுச்சபைக்குள் ஒருங்கிணைந்து காணப்படும் சிவில் அமைப்புகளில் ஒன்றாகும். தமிழ் மக்கள் பொதுச்சபையானது கடந்த ஒரு மாதத்திற்கு மேலாக மக்கள் மத்தியில் சந்திப்புகளை ஒழுங்குபடுத்தி வருகின்றது. இச்சந்திப்புகள் யாவும் சிறியவை. ஆனால் இச்சந்திப்புக்களில் ஈடுபடும் அமைப்புக்கள் யாவும் மாவட்ட மட்ட ஒன்றியங்கள் ஆகும். கடற் தொழிலாளர் ஒன்றியம், கூட்டுறவாளர் ஒன்றியம், பார ஊர்திகள் சங்க ஒன்றியம், வர்த்தக சமூகங்கள் போன்றவற்றுடன் குடிமக்கள் சமூகத்தை சேர்ந்தவர்கள் கலந்துரையாடி வருகிறார்கள். இந்த உரையாடல் அனைத்திலுமே பொது வேட்பாளருக்கு ஆதரவாகத்தான் கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன. இச்சந்திப்புக்களில் யாரும் ஏன் ஒரு தமிழ் பொது வேட்பாளரை நிறுத்த வேண்டும் என்று கேட்கவில்லை. அல்லது ஏன் ஒரு தென்னிலங்கை வேட்பாளருக்கு வாக்களிக்கக் கூடாது என்றும் கேட்கவில்லை. அல்லது ஒரு தமிழ் பொது வேட்பாளரை நிறுத்தினால் அவர் இனவாதத்தை தூண்டி விடுவார் என்றும் சொல்லவில்லை.

இவ்வாறாக ஒருபுறம் தமிழ்ப் பொது வேட்பாளருக்கு ஆதரவாக சந்திப்புக்களும் கருத்தரங்குகளும் ஒழுங்கு செய்யப்பட்டு கொண்டிருந்த ஒரு பின்னணிக்குள், கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணத்தில் தந்தை செல்வா கலையரங்கில் ஒரு கருத்தரங்கு, மக்கள் மன்று என்ற பெயரில் ஒழுங்கு செய்யப்பட்டது. அதை ஒழுங்கு படுத்தியவர் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரனுக்கு நெருக்கமான சாவகச்சேரியை சேர்ந்த ஒரு சட்டத்தரணி ஆகும். அவர் முன்பு மாகாண சபை உறுப்பினராகவும் இருந்தவர்.

இக்கருத்தரங்கில் 300க்கும் குறையாதவர்கள் கலந்து கொண்டார்கள். கருத்தரங்கில் உரை நிகழ்த்தியவர்களுள் சட்டத்தரணி சிறீகாந்தாவைத் தவிர அனைவரும் தமிழ்ப் பொது வேட்பாளரை எதிர்த்துக் கருத்துக் கூறினார்கள். இதுபோன்ற கருத்தரங்குகள் எதிர்காலத்தில் வடக்கு கிழக்கில் நடாத்தப்படும் என்றும் தெரிய வருகிறது.

அதாவது தமிழ்ப் பொது வேட்பாளர் என்ற விடயம் தமிழ் அரசியலில் அடுத்த கட்ட வளர்ச்சியை அடைய தொடங்கிவிட்டது. ஒரு பக்கம் தமிழ் மக்கள் பொதுச்சபை என்ற மக்கள் அமைப்பானது பொது வேட்பாளரை முன்னிறுத்தும் நோக்கத்தோடு உழைத்து வருகின்றது. அது கட்சிகளோடு இணைந்து ஒரு பொதுக் கட்டமைப்பை உருவாக்கவிருக்கின்றது. இன்னொரு பக்கம் தமிழரசுக் கட்சிக்குள் சுமந்திரன் அணியானது பொது வேட்பாளருக்கு எதிராக உழைத்து வருகின்றது.

தவிர தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியும் ஏற்கனவே களத்தில் இறங்கிவிட்டது. சில வாரங்களுக்கு முன் அவர்கள் யாழ் நகரப் பகுதியில் துண்டுப் பிரசுரங்களை விநியோகித்தார்கள். அத்துண்டுப் பிரசுரங்கள் தமிழ் பொது வேட்பாளருக்கு எதிரானவை. பகிஸ்கரிப்பை இம்முறை நடைமுறைப்படுத்துவது என்ற நோக்கம் கட்சியிடம் உண்டா இல்லையா என்று தெரியவில்லை. ஆனால் பலஸ்கரிப்புக்காக உழைப்பது என்பது ஒரு தேர்தல் பிரச்சாரம்தான். யாருக்கும் வாக்களிக்க வேண்டாம் என்று பிரச்சாரம் செய்வது.

இவ்வாறாக தமிழ்ப் பரப்பில் ஜனாதிபதித் தேர்தலையொட்டி மூன்று போக்குகள் துலக்கமாக மேல் எழத் தொடங்கி விட்டன. இதனால் தமிழ் வாக்குகள் மூன்றாக உடையக்கூடிய வாய்ப்புகள் அதிகரிக்கின்றன.

தென்னிலங்கையில் ஏற்கனவே வாக்குகள் மூன்றாக உடையும் வாய்ப்புகள் அதிகரித்துவிட்டன. இந்த மூன்று தென்னிலங்கை வேட்பாளர்களில் யாருக்காவது தமிழ் மக்கள் வாக்களிப்பார்களாக இருந்தால் அதிலும் தமிழ் தமிழ் வாக்குகள் சிதறும்.

எனவே இப்பொழுது தொகுத்துப் பார்க்கலாம். சுமந்திரன் அணியானது தமிழ்ப் பொது வேட்பாளரை எதிர்க்கின்றது. அதே சமயம் தென்னிலங்கையில் உள்ள யாரோ ஒரு வேட்பாளருக்கு தமிழ் வாக்குகளை சாய்த்து கொடுக்கப் போகிறது என்பதும் தெரிகிறது. இது ஒரு பகுதி தமிழ் வாக்குகளை உடைக்கும்.

தமிழரசு கட்சிக்கு இப்பொழுது மொத்தம் ஆறு நாடாளுமன்ற உறுப்பினர்கள் உண்டு. இந்த ஆறு நாடாளுமன்ற உறுப்பினர்களும் சுமந்திரன் அணி என்று கூற முடியாது. கட்சிக்குள் நடந்த தலைமைப் பதவிக்கான தேர்தலில் இந்த ஆறு நாடாளுமன்ற உறுப்பினர்களில் சிலர் சிறிதரனின் அணிக்குள் நின்றார்கள். ஆனால் தமிழ்ப் பொது வேட்பாளர் என்ற விடயத்தில் அவர்கள் சுமந்திரனுடன் இருப்பதாகத் தெரிகிறது. இதில் சிறீதரன் அணி மட்டுமே தமிழ்ப் பொது வேட்பாளரை ஆதரிக்கின்றது. ஆனால் தேர்தல் நடக்குமாக இருந்தால் சிறீதரனின் அணி தமிழ்ப் பொது வேட்பாளருக்கு ஆதரவாக களமிறங்கி வாக்குகளைத் திரட்டுமா? ஏனெனில் கட்சியின் மையக் குழுவானது பொது வேட்பாளருக்கு எதிராக காணப்படுகிறது. அதனால் கட்சியின் உத்தியோகபூர்வ நிலைப்பாடு பெரும்பாலும் யாராவது ஒரு தென்னிலங்கை வேட்பாளருக்கு ஆதரவாகத் திரும்பக்கூடிய வாய்ப்பே அதிகமாகத் தெரிகிறது. இது தமிழ் வாக்குகளில் ஒரு பகுதியை உடைக்கும்.

அடுத்ததாக, பொது வேட்பாளருக்கு ஆதரவான கட்சிகள் தமிழ்ப் பொதுச் சபையோடு இணைந்து ஒரு வேட்பாளரை முன்னிறுத்தினால், அதுவும் தமிழ் வாக்குகளை உடைக்கும். பொது வேட்பாளரை ஆதரிக்கும் அணிக்குள் டெலோ அமைப்பிடம் மூன்று நாடாளுமன்ற ஆசனங்கள் உண்டு. புளட் அமைப்பிடம் ஒரு நாடாளுமன்ற ஆசனம் உண்டு. விக்னேஸ்வரனின் கட்சியிடம் ஒரு நாடாளுமன்ற ஆசனம் உண்டு. மொத்தம் ஐந்து நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட ஆறு கட்சிகள் பொது வேட்பாளரை ஆதரிக்கின்றன. இவை தவிர ஐங்கரநேசனின் தமிழ்த் தேசிய பசுமை இயக்கம், அனந்தி சசிதரனின் ஈழத்தமிழர் சுயாட்சிக் கழகம் போன்றனவும் ஆதரிக்கின்றன. கூட்டிப் பார்த்தால் எட்டுக் கட்சிகள் பொது வேட்பாளருக்கு ஆதரவாக நிற்கின்றன. இக்கட்சிகளும் தமிழ் மக்கள் பொதுச்சபையும் இணைந்து ஒரு பொது வேட்பாளரை நிறுத்தும்போது அதுவும் தமிழ் வாக்குகளை உடைக்கும்.

மூன்றாவதாக, அனுர. அவருக்கு சிறு தொகுதி தமிழ் வாக்குகள் கிடைக்கலாம். அவரைப் போலவே ரணில் விக்கிரமசிங்கவுக்கும் படித்த ஆங்கிலம் பேசும் நடுத்தர வர்க்கத்தை சேர்ந்த ஒரு சிறு தொகுதியினர் வாக்களிக்கக்கூடும். எனவே கூட்டிக்கழித்துப் பார்த்தால் ஜனாதிபதி தேர்தலில் தமிழ் வாக்குகள் நான்கு திசைகளில் உடையும் வாய்ப்புகள் இப்போதைக்கு தெரிகின்றன.

ஜனாதிபதித் தேர்தல் ஒன்று நடக்குமாக இருந்தால் அது இந்த ஆண்டின் இறுதிக்குள் நடத்தப்பட வேண்டும். அதில் தமிழ் வாக்குகள் நான்கு தரப்புகளை நோக்கிச் சிதறும். இது தமிழ் அரசியலை எங்கே கொண்டு போய்விடும்?

ஜனாதிபதித் தேர்தல் இந்த ஆண்டு நடந்தால் அநேகமாக அடுத்தடுத்த ஆண்டுகளில் மாகாண சபைகளுக்கும் உள்ளூராட்சி சபைகளுக்கும் நாடாளுமன்றத்திற்கும் தேர்தல்கள் நடக்கும். குறிப்பாக ஜனாதிபதித் தேர்தலில் வென்ற கட்சியானது நாடாளுமன்றத் தேர்தலை நடத்தி தன்னுடைய பலத்தை மேலும் உறுதிப்படுத்த விளையும். எனவே ஜனாதிபதித் தேர்தலுக்குப் பின் ஒரு நாடாளுமன்றத் தேர்தல் நடக்கக்கூடிய வாய்ப்புகளே அதிகமாகத் தெரிகின்றன. அப்படி ஒரு தேர்தல் நடந்தால், ஜனாதிபதித் தேர்தலில் நான்குக்கு மேற்பட்ட தரப்புகளால் சிதறடிக்கப்பட்ட தமிழ் வாக்குகள் அடுத்துவரும் தேர்தலில் சிதறுமா அல்லது திரளுமா?

நிச்சயமாகத் திரளாது. சிதறும் வாய்ப்புக்களே அதிகம். எப்படியென்றால் ஜனாதிபதித் தேர்தலையொட்டி தமிழ் மக்களைத் திரட்டத் தவறினால் அடுத்த கட்டம் நாடாளுமன்றத் தேர்தலில் மட்டும் திடீரென்று திரட்டிவிட முடியாது. மக்களைத் திரட்டும் நடவடிக்கைகள் ஒரு தேர்தலில் மட்டும் செய்து முடிக்கக் கூடிய ஒரு செய்முறை அல்ல. அது ஒரு நீண்ட கால நடவடிக்கை. அதை அதன் சரியான வார்த்தைகளில் சொன்னால், தேசத்தைக் கட்டியெழுப்புவது. தமிழ்ப் பொது வேட்பாளரை முன்நிறுத்தும் தமிழ் மக்கள் பொதுச் சபையானது, அதைத்தான் கூறுகின்றது. தமிழ் மக்களை ஒரு தேசமாகக் கட்டி எழுப்ப வேண்டும் என்று.

இப்பொழுது தமிழ் வாக்குகள் சிதறிப் போய் உள்ளன. சிதறிக் கிடக்கும் தமிழ் வாக்குகளைத் திரட்டி, கூட்டிக்கட்டி ஒரு தேசமாக நிமிர்த்த வேண்டும் என்று தமிழ் மக்கள் பொதுச்சபை கேட்கின்றது.

தமிழ் மக்கள் இப்பொழுது வடக்காய் கிழக்காய் கட்சிகளாய், கொள்கைகளாய், தியாகிகள் துரோகிகளாய், சாதியாய் சமயமாய் இன்னபிறவாய் பிளவுண்டு போய் இருக்கிறார்கள். நவீன யாழ்ப்பாணத்துக்கு அடித்தளமிட்ட திருச்சபை நீதிமன்றத்தில் நிற்கின்றது. உள்ள கட்சிகளில் பெரியது நீதிமன்றத்தின் நிற்கின்றது. பிரபல ஆலய அறங்காவலர் சபைகள் நீதிமன்றத்தில் நிற்கின்றன. பழைய மாணவர் சங்கங்களுக்குள்ளும் மோதல். ஊர் சங்கங்களுக்குள்ளும் மோதல். புலம் பெயர்ந்த பரப்பிலும் ஐக்கியம் இல்லை. மயிலத்தமடு, குருந்தூர் மலை,வெடுக்குநாறி மலை போன்ற போராட்டப் பரப்புகளை விலத்திப் பார்த்தால், தமிழர்களே தமிழர்களோடு மோதிக் கொண்டிருக்கும் பரப்புகள்தான் அதிகம். கட்சியும் நீதிமன்றத்தில்திருச்சபையும் நீதிமன்றத்தில். அறங்காவல் சபைகளும் நீதி மன்றத்தில்.

இப்படிப்பட்ட ஒரு மக்கள் கூட்டத்தின் மத்தியில் இருந்து படித்த பொறுப்பான பதவிகளை வகித்த ஆளுமை மிக்க தொழிற்பிறன் மிக்க ஒரு பகுதியினர் தொடர்ச்சியாகப் புலம் பெயர்ந்து கொண்டிருக்கிறார்கள். இப்படியே போனால் ஒரு கட்டத்தில் ஆளில்லா ஊர்களில் விகாரைகளைக் கட்டுவது பிக்குகளுக்கும் படையினருக்கும் இலகுவாகிவிடும். தமிழ் பிரதிநிதித்துவம் சுருங்கிக் கொண்டே போய்விடும்.

இவ்வாறு சிதறிக்கொண்டு போகும், சிறுத்துக் கொண்டு போகும் ஒரு மக்கள் கூட்டத்தை ஜனாதிபதித் தேர்தல் என்ற ஒரு வாய்ப்பைப் பயன்படுத்தி சேர்த்துக் கட்டத்தவறினால் அடுத்த ஆண்டு என்ன நடக்கும்? இந்த ஆண்டின் தொடக்கத்தில் ஒரு கட்சிக்குள் நடந்த தேர்லானது தமிழ் மக்கள் கேவலமான விதங்களில் சிதறிப்போய் இருக்கிறார்கள் என்பதனை நிரூபித்தது.இந்த ஆண்டின் இறுதியில் நடக்கக்கூடிய ஒரு ஜனாதிபதித் தேர்தல் எனப்படுவது, தமிழ் மக்கள் தோல்விகரமான விதங்களில் சிதறிப் போய் இருக்கிறார்கள் என்ற செய்தியை வெளிக் கொண்டு வருமாக இருந்தால் அதன் விளைவுகள் எப்படி அமையும்?

# மூன்றாவது முறை பதவியேற்கும் பாரத பிரதமர் மோடி தமிழர் அரசியல் தீர்வுக்கு தலைமையேற்க வேண்டும் — ஈ.பி.டிபியின் ஊடக பேச்சாளர் ரங்கேஸ்வரன்!

இலங்கை செய்திகள் Sri Lanka News

பு. கஜிந்தன்




பாரத தேசத்தை மூன்றாவது முறையாக பொறுப்பேற்கும் பிரதமர் நரேந்திர மோடி அரசுக்கு வாழ்த்துக்களை தெரிவிப்பதுடன் தமிழர்களின் அரசியல் உரிமைப் பிரச்சினைக்கு தீர்வுகாண முழுமையாக தலைமையேற்று பங்களிக்க வேண்டும் எனவும் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் ஊடக பேச்சாளர் ஐயாத்துரை சிறீரங்கேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் ஊடக அமையத்தில் இன்றையதினம் ஊடகவியலாளர்களை சந்தித்த அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையில் தமிழ் மக்களுக்கான அரசியல் உரிமை மறுக்கப்பட்டதால் அகிம்சை போராட்டம் பின்னர் ஆயுதப் போராட்டமாக வலுப்பெற்று பின்னர் இந்திய இலங்கை ஒப்பந்தத்துடன் இலங்கை தமிழர்களுக்கான ஓர் அரசியல் தீர்வை நோக்கி நகர்வதற்கான மாகாண ஆட்சி முறைமை கொண்டுவரப்பட்டதுடன் ஆயுதப்போராட்டமும் முடிவுக்கு வந்தது. இருந்தும் துரதிஸ்டமாக வன்முறைகள் தொடர்ந்தகொண்டிருந்தது.

பின்னர் பன்னாட்டு சக்திகள் நாட்டின் உள் விவகாரங்களில் மத்தியஸ்தம் வகித்தும் பேரழிவுடன் வன்முறை அஸ்தமித்துப்போனது.

தமிழர்களுடைய அரசியல் உரிமை பிரச்சினைக்கு நிரந்தர தீர்வம் எட்டப்படவில்லை. ஆயினும் இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் அடிப்படையில் கொண்டுவரப்பட்ட 13 ஆவது அரசியலமைப்பு திருத்தத்தின் அடிப்படையில் மாகாண சபை ஆட்சிமுறையே மிஞ்சியது.

இருந்தும் காணி பொலிஸ் அதிகாரங்கள் மத்திய அரசினால் மீளப்பெறப்பட்ட நிலையிலும் இணைந்த வடக்கு கிழக்கை ஜே.வி.பி.யினர் தமிழர்கள் ஒரு நிலத் தொடர் அலகாக வாழ்வதை தடுப்பதற்காக உச்ச நீதிமன்றம் சென்று வழக்க தாக்கல் செய்து பின் இணைந்த வடக்கு கிழக்கு மாகாணங்கள் தனித்தனியாக பிரிக்கப்பட்டன.

அவ்வாறாக இருந்த சூழலில் ஜனநாயக முறைப்படி மாகாண சபை தேர்தல்களும் நடத்தப்பட்டு ஆட்சி அதிகாரம் மக்கள் பிரதிநிதிகளிடம் கையளிக்கப்பட்டது. ஆனால் தமிழ் மக்களுடைய அரசியல் தீர்வு தொடர்ந்தும் தீர்க்கமான முடிவின்றியே இருந்துவருகின்றது.

இந்த சூழ்நிலையில் மூன்றாவது முறையாக பாரத தேசத்தை பொறுப்பேற்கும் பாரதிய ஜனதா கட்சி தலைமையிலான நரரேந்திர மோடி அரசு இலங்கைத் தமிழர்களுடைய அரசியல் தீர்வு விடயத்தில் தலைமையேற்று முழுமையாக பங்காற்ற வேண்டும்.

இலங்கை தொடர்பான அரசியல் பொருளாதாரம் பாதுகாப்பு நலன்சார்ந்து இந்தியாவே இருந்து வருகின்றது. இருப்பினும் புரையோடிப்போயுள்ள தமிழர்களது அரசியல் தீர்வு விடயத்தில் 1983 இனக்கலவரம்முதல் இன்றைய பொருளாதார நெருக்கடி வரையும் இந்தியாவே தமிழ்களுக்கு பக்கபலமாக இருந்தவருகின்றது.

அதேபோன்று தற்போது பதவியேற்கும் பாரத பிரதமர் மோடி தமிழ் மக்களது அரசியல் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வை எட்ட முழுமையாக பங்காற்ற வேண்டும் எனவும் அவர் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# சாதனை மாணவி சாந்தை பகுதி வஜீனாவை நேரில் சென்று வாழ்த்திய வடக்கு பொலிஸ் மா அதிபர்!



வெளியாகிய 2023 ஆம் ஆண்டுக்கான காப்பத உயர்தர பரீட்சை பெறுபவர்களின் அடிப்படையில் கலைப்பிரிவில், வஜீனா பாலகிருஷ்ணன் அவர்கள் மாவட்ட நிலையில் முதலாம் இடத்தையும் அகில இலங்கை ரீதியாக 32வது இடத்தையும் பெற்று சாதனை படைத்துள்ளார்.



இவர் பொருளாதார ரீதியாக மிகவும் பின்தங்கிய கிராமமான சாந்தை பகுதியில் வசித்து வந்துள்ளார். இவரது குடும்பமும் வறுமைக் கோட்டிற்கு உட்பட்ட ஒரு குடும்பமாக காணப்படுகின்றது. கல்வி கற்பதற்கு கூட அவரது வீட்டில் ஒரு மேசை இருந்திருக்கவில்லை. இவ்வாறான குடும்பப் பின்னணியிலேயே குறித்த மாணவி சாதனையை நிகழ்த்தியுள்ளார்.

இந்நிலையில் அவருக்கான பாராட்டு விழா இன்றையதினம் சாந்தை சனசமூக நிலையத்தில் இடம்பெற்றது. அந்த வகையில் வடக்கு மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் திரு. திலக் சி.ஏ. தனபால அவர்கள் குறித்த பகுதிக்கு நேரில் சென்று தமது வாழ்த்துக்களையும், பாராட்டுக்களையும் தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாண சிரேஷ்ட பொலிஸ் மா அதிபர் அவர்கள் புதிதாக நியமனம் பெற்று வடக்கு மாகாணத்திற்கு வந்துள்ளார். அவர் தனது பதவிக்கு அப்பால் அங்கிருந்த மக்களுடன் மிகவும் சகஜமாக பழகுவதை அவதானிக்க முடிந்தது.

# பல்கலைக்கழக பட்டத்தை "பாடை"யில் கட்டி வேலையில்லா பட்டதாரிகள் யாழ்ப்பாணத்தில் முன்னெடுத்த கவனயீர்ப்பு

பு. கஜிந்தன்



பல்கலைக்கழக பட்டத்தை பாடையில் கட்டி வேலையில்லா பட்டதாரிகள் யாழ்ப்பாணத்தில் கவனயீர்ப்பு போராட்டமொன்றை முன்னெடுத்தனர்.

வடக்கு மாகாண வேலையில்லா பட்தாரிகள் சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ் மாவட்டச் செயலகத்திற்கு முன்னாள் இன்று காலை கவனயீர்ப்பு போராட்டம் மேற்கொள்ளப்பட்டது.

பட்டம் வீட்டில் பட்டதாரிகள் நடு ரோட்டில், ஒரே ஒரு பரீட்சையில் பறந்து போனது பல பரீட்சை எழுதிப் பெற்ற பட்டம், வேண்டும் வேண்டும் நீதி வேண்டும், எமக்கான வாழ்க்கையை நாம் எப்போது வாழ்வது, படிப்பிற்க்கும் போராட்டம் வேலைக்கும் போராடுவதா, எல்லோருக்கும் பாரபட்சமின்றி வேலைகளை வழங்க வேண்டும். படித்ததக்கு கூலிதொழிலா கடைசி வரைக்கும், படித்தவர்கள் இந்த நாட்டின் சாபக்கேடுகளா?, பல வருட கனவு வெறும் கனவாகவே போய்விடுமா ?, படித்தும் பரதேசிகளாக திரிவதா? என கோஷங்கள் எழுப்பப்பட்டதுடன் அனைத்து பட்டதாரிகளுக்கும் பாரபட்சமின்றி வேலை வாய்ப்பை வழங்க வேண்டுமென வலியுறுத்தி போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.



மேலும் தமது கோரிக்கைகளை அரசாங்கம் விரைந்து நிறைவேற்ற வேண்டுமென்றும் இல்லையேல் தொடர்ந்து தாம் பாரிய போராட்டங்களை நடாத்தவுள்ளதாகவும் தெரிவித்தனர்.



# யாழ்ப்பாணம் கன்னாதிட்டி காளிகோயில் ஆலயத் கும்பாபிஷேக நிகழ்வில் நகைகள் திருடிய பெண் கைது!



யாழ்ப்பாண மாநகர கன்னாதிட்டி காளிேகாயில் கோபுர கும்பாபிஷேக நிகழ்விற்கு வந்த அடியவர்களின் தாலிக்கொடி மற்றும் சங்கிலி என்பவற்றறை திருடியவர் 1 மணித்தியாளத்தில் கைது செய்யப்பட்டுள்ளார்.

10-06-2024 அன்று, கன்னாதிட்டி காளிகோயில் கும்பாபிஷேக நிகழ்வில் அடியவர்கள் பல கலந்து கொண்டவேளை திருடர்களின் கைவரிசையில் இருவரது தங்க ஆபரணங்கள் திருடப்பட்டன.

இந்நிலையில் யாழ்ப்பாண மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜெகத் விஷாந்த தலைமையிலான யாழ் மாவட்ட பொலிஸ் புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில், கன்னாதிட்டி காளிகோயில் இந்து இளைஞர்களின் ஒத்துழைப்புடன் 27 வயதுடைய பெண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த பெண்ணை பொலிஸ் நிலையத்தில் வைத்து விசாரித்தபொழுது பெண்ணின் உள் உடுப்பில் இருந்து தாலிக்கொடி, சங்கிலி, பென்ரன் என்பன மீட்கப்பட்டன.

கைது செய்யப்பட்ட பெண் கொழும்பு வெல்லம்பிட்டியவை சேரந்தவர் எனவும் வவுனியா பூந்தோட்டத்தில் தற்பொழுது வசிப்பவர் என பொலிஸார் தெரிவித்தனர். மேலதிக விசாரணைகளின் சந்தேகநபரை யாழ்ப்பாணம் நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# சுழிபுரம் விக்டோரியா கல்லூரிக்கு பேருந்தினை வழங்கிய எதிர்க்கட்சி தலைவர் சஜித்!

எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச அவர்கள் விஜயம் மேற்கொண்டு யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்து பல்வேறு பகுதிகளிலும் நிகழ்வுகளில் பங்குபற்றி வருகின்றார்.

அந்தவகையில் 12-06-2024 அன்றையதினம் சுழிபுரம் விக்டோரியா கல்லூரிக்கு பேருந்து ஒன்றினை வழங்கி வைத்துள்ளார். இந்த பேருந்தானது சுமார் 5 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில் வழங்கி வைக்கப்பட்டது.

மாணவர்களின் நலன் கருதி பேருந்து ஒன்றினை வழங்குமாறு பாடசாலை சமூகத்தினர் எதிர்க்கட்சித் தலைவரிடம் நேரடியாக கோரிக்கை ஒன்றினை முன்வைத்தனர். அந்தவகையில் இன்றையதினம் இந்த பேருந்து வழங்கி வைக்கப்பட்டது.

வழக்கம்பரை அம்மன் ஆலயத்தில் பேருந்துக்கான பூஜை வழிபாடுகள் என்பன இடம்பெற்றன. அதன்பின்னர் மாணவர்களை ஏற்றி, எதிர்க்கட்சித் தலைவர் பாடசாலை வரை பேருந்தை செலுத்திச் சென்றார்.

இந்த நிகழ்வில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, ஐ.ம.ச வடக்கு மாகாண இணைப்பாளர் உமாச்சந்திரா பிரகாஷ், கட்சியின் உறுப்பினர்கள், கல்லூரியின் அதிபர் திருமதி. சுலபாமதி, பாடசாலையின் ஆசிரியர்கள், மாணவர்கள், பழைய மாணவர்கள், பெற்றோர் என பலரும் கலந்துகொண்டனர்.

இலங்கை செய்திகள் Sri Lanka News

# அனலைதீவு கடற்றொழிலாளர்களை இலங்கைக்கு அழைத்து வர நடவடிக்கை

## உறவினரிடம் அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு!

காலநிலை சீர்கேடு மற்றும் இயந்திரக் கோளாறு போன்றவை காரணமாக தமிழகத்தில் கரையொதுங்கிய அனலைதீவு கடற்றொழிலாளர்களை இலங்கைக்கு அழைத்து வருவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.



அனலைதீவு கடற்பரப்பில் இருந்து கடந்த ஜூன் மாதம் 10 ஆம் திகதி மாலை 5.00 மணியளவில் கடற் கடற்றொழிலுக்கு சென்ற குறித்த இருவரும் கரை திரும்பாத காரணத்தினால் பதற்றம் ஏற்பட்டிருந்ததுடன், அனலைதீவு கடற்பரப்பெங்கும் கடற்படையினர் மற்றும் கடற்றொழிலாளர்களால் தீவிர தேடுதல் முன்னெடுக்கப்பட்டு வந்த நிலையில், தேடப்பட்டுவந்த இருவரும் தமிழக கடற்பரப்பில் கரையொதுங்கிய தகவல் கிடைக்கப்பெற்றது.



இந்நிலையில் குறித்த இருவரது குடுப்பத்தினர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை சந்தித்து இருவரையும் இலங்கைக்கு அழைத்துவர நடவடிக்கை எடுத்து தருமாறு கோரிக்கை விடுத்துள்ள நிலையில், கடற்றொழில் அமைச்சரினால் சம்மந்தப்பட்ட அதிகாரிகள் மூலம் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

# போக்குவரத்து கண்காணிப்பு கடமையில் ஈடுபடும் மாணவர்களுக்கு வவுனியா – உலுக்குளம் பொலிஸார் விசேட பயிற்சி

(13-06-2024)



வவுனியாவில் பாடசாலை நேரத்தில் போக்குவரத்து கண்காணிப்பு கடமையில் ஈடுபடும் மாணவர்களுக்கு உலுக்குளம் பொலிசாரால் விசேட பயிற்சி வழங்கும் நிகழ்வு ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

வவுனியா, சூடுவெந்தபுலவு பகுதியில் அமைந்துள்ள அல் இக்பால் மகா வித்தியாலய மாணவர்களுக்கு குறித்த பயிற்சி திட்டம் பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்டது.

குறித்த பாடசாலை முன்பு காலை மற்றும் பாடசாலை நிறைவடையும் நேரம் என்பவற்றில் போலீசாருடன் இணைந்து போக்குவரத்து கண்காணிப்பு மற்றும் வீதிப் பாதுகாப்பு கடமையில் மாணவர்களையும் ஈடுபடுத்தும் வகையில் தெரிவு செய்யப்பட்ட 10 மாணவர்களுக்கு குறித்த பயிற்சி பொலிசாரால் வழங்கப்பட்டதுடன், மாணவர்கள் வீதிப் பாதுகாப்பு கடமையில் ஈடுபடும் போது அணிவதற்கான சீருடைகளும் இதன் போது பொலிசாரால் வழங்கி வைக்கப்பட்டது.



பாடசாலையின் முதல்வர் ஏ.கே.உபைத் அவர்களின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் உலுக்குளம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி உள்ளிட்ட பொலிஸ் உத்தியோகத்தர்கள், போக்குவரத்து பொலிசார், பாடசாலையின் ஆசிரியர்கள், கல்வியற் கல்லூரி ஆசிரிய மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.


கொழும்பில் கட்டிடங்கள் இரண்டும் காணியும் விற்பனைக்கு!

Property with Two Buildings For Sale in Colombo

For Sale:

Land with 17 Perch Prime Commercial/Residential Property with Two Buildings in the Heart of Colombo

Location:

Colombo-5 facing main Havelock Road.

Boasting a prime location and easy access to key amenities, this property is ideal for residential or commercial purposes.

This prime investment opportunity includes two buildings bordering Colombo-7, a 3-story building facing the main road and a 4-story building.

For more details and to schedule a viewing, please contact:

Rajeev: (416) 727-2325
+9477168 3728 (LK)
or visit: bit.ly/68col







OM NAMO NARAYANA

125 வருட பாரம்பரிய காண்டம் நாடி ஜோதிடம்

N. P. ராஜசேகர்

Now In: 16 TREELINE COURT MARKHAM
L3S 3T8 CANADA
001 416 904 6278

அனைத்து நாடுகளில் இருந்தும் தொடர்பு கொள்ளலாம்

1வது காண்டம்: ஆண் வலது பெண் இடது கை பெருவிரல் ரேகை அல்லது ஜாதகத்தை கொண்டு ஜாதகம். பெயர் தாய், மனைவி, குழந்தைகள், சகோதர, சகோதரிகள் பொதுவான பலன் கூறுவது மற்றக் காண்டங்களை எடுக்க இந்தக் காண்டத்தை முதலில் அவசியம் எடுக்க வேண்டும்.

2வது காண்டம்: பணம், கண், குடும்பம், கல்வி, வாக்கு அதிர்ஷ்டகர்கள் முதலியவைகளைக் கூறுவது.

3வது காண்டம்: சகோதர, சகோதரிகளின் எண்ணிக்கை அவர்களால் ஏற்படும் நன்மை தீமைகளைக் கூறுவது.

4வது காண்டம்: தாயார், மனை, நிலங்கள், வாகனம் வாழ்க்கையில் அடையும் சுகங்கள் மற்றும் மகிழ்ச்சிகளைக் கூறுவது.

5வது காண்டம்: குழந்தைகளின் பிறப்பு. புத்திரர்களால் ஏற்படும் நன்மைகள் குழந்தைகள் இல்லாததற்குக் காரணமும் கூறுவது.

6வது காண்டம்: வாழ்க்கைகளில் ஏற்படும் விரோதி, வியாதி, கடன், வழக்கு, எதிரிகளால் ஏற்படும் தொல்லைகள் முதலியவைகளைக் கூறுவது.

7வது காண்டம்: திருமண வாழ்க்கை, திருமணக்காலம், திருமணத்தைப் பற்றிய சில அடையாளக் குறிப்புகள் திருமணக் காலத்தைக் கடந்த காரணம், பொதுவான பலன்களும், திருமணம் ஆகியிருந்தால் கணவன் (அ) மனைவியைப் பற்றி கூறுவது.

8வது காண்டம்: ஆயுள்கால நிர்ணயம், நடுநடுவே ஏற்படும் கண்டம் விபத்து முதலியவைகளைக் கூறுவது.

9வது காண்டம்: தகப்பனார், செல்வம், யோகம், ஆலயதரிசனம், தர்மம், குருவினிடத்து உபதேசம் பெறுதல் முதலியவைகளைக் கூறுவது.

10வது காண்டம்: தொழில், வியாபாரம், உத்தியோகம், எந்த வியாபாரம் அல்லது தொழில் செய்தால் அதிக நன்மை கிடைக்கும் என்பதைக் கூறுவது.

11வது காண்டம்: இலாபம் எந்தெந்த வகையில் கிடைக்கும் என்பதையும், 2வது திருமணம் அதனால் அடையும் நன்மைகளையும் கூறுவது.

12வது காண்டம்: செலவு எவ்வகையில் ஏற்படும் என்பதையும், மோட்சம் அடுத்த பிறவியில் பிறக்கும் இடம், வாழும் தன்மை வெளிநாட்டுப்பயணம் முதலியவைகளையும் கூறுவது.

பரிகார காண்டங்கள்

13வது சாந்தி காண்டம்: முற்பிறவியில் பிறந்த இடம், செய்த நன்மை, தீமை அதனால் தற்போது அனுபவிக்கும் கஷ்டங்கள் அதை நீக்குவதற்கு உரிய பரிகாரமும் முதலியவைகளைக் கூறுவது.

14வது தீட்சை காண்டம்: மந்திரம், எந்த மந்திரத் தாயத்து செய்து அணிந்து கொண்டால் தன்டைய காரியமும் குடும்ப காரியமும் வெற்றியடையும் என்பதைக் கூறுவது.

15வது ஔஷத காண்டம் : வியாதிகளுக்கு எந்த மருந்து அல்லது மூலிகை சாப்பிடலாம் என்பதையும், சாப்பிடும் வகைகளையும் பத்திரங்களையும் விபரமாகக் கூறுவது.

இவையன்றியில் ஞான காண்டமும், திசாபுத்தி காண்டமும், பிரச்சினை காண்டமும், மகாசிவ வாக்கியமும் உள்ளது குறிப்பு : ஜாதகம் அல்லது பிறந்த குறிப்பு உள்ளவர்கள் அதை கொண்டு வருவது நலம்.

இலங்கை செய்திகள் Sri Lanka News

# யாழ்ப்பாணத்தில் தமிழ் ஊடகவியலாளர் இல்லத்தின் மீது தாக்குதல்

- நடராசா லோகதயாளன்

இலங்கையில் தமிழ் ஊடகவியலாளர்கள் அச்சுறுத்தலுக்கு உள்ளாவது தொடர்கதையாகி வருகிறது. அவர்கள் பாதுகாப்பு படையினரால் விசாரணைகளுக்கு அழைக்கப்படுவது, அவர்களின் உபகரணங்கள் பறிக்கப்படுவது எல்லாம் வாடிக்கையாகியுள்ளது.

அவ்வகையில் 13-06-2024 வியாழக்கிழமை சுமார் 12:30 மணியளவில் யாழ்ப்பாணம் அச்சுவேலியில் இருந்து செயல்படும் ஹிரு ஊடகத்தின் செய்தியாளரான தம்பித்துரை பிரதீபன் என்பவரின் இல்லத்தின் மீது இனம் தெரியாத குழுவினர் தாக்குதல் மேற்கொண்டுள்ளனர்.

அதிகாலை வேளை தமிழ் செய்தியாளர் ஒருவரின் இல்லம் தாக்கப்பட்டுள்ளது அங்கு மக்களிடையே ஒரு அச்ச உணர்வையும் கவலையையும் ஏற்படுத்தியுள்ளதாக கூறப்படுகிறது.

மோட்டார் சைக்கிளில் வந்த ஐந்து பேர்கொண்ட குழுவினரால் நடத்தப்பட்ட இத்தாக்குதலல் ஊடகவியலாளரின் மோட்டார் சைக்கிள், முச்சக்கர வண்டி என்பவற்றுடன் வீடும் எரிந்து சேதமடைந்துள்ளது. அதிகாலை நேரத்தில் வீட்டிற்கு வந்த காடையர்கள் வீட்டிற்குள் பெட்ரோல் குண்டை வீசியிருக்கலாம் என்று நம்பப்படுகிறது.

தனது வீட்டின் ஒரு பகுதியாக சிறிய கடை ஒன்றையும் அவரது குடும்பத்தினர் நடத்தி வருகின்றனர். அந்த கடையும் அடித்து நொறுக்கப்பட்டுள்ளது.

இத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் அச்சுவேலிப் பொலிஸாரிடம் மேற்கொண்ட முறைப்பாட்டனையடுத்து பொலிஸார் மேலதீக விசாரணைகளில் ஈடுபட்டுள்ளனர்.







# யாழ்ப்பாணத்தில் கனடா துணைத் தூதரகத்தை திறக்க இந்து மதத்தலைவர்கள் வேண்டுகோள்





கனடா துணைத்தூதரகத்தை வடக்கில் நிறுவி, மக்களுக்கு உதவவேண்டும் என நல்லை ஆதீனம் மற்றும் ஆறு. திருமுருகன் ஆகியோர் கனேடியத் தூதுவரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கனடா நாட்டுத்தூதுவர் இந்துசமயத் தலைவர்களை நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனத்தில் சந்தித்து கலந்ருரையாடினார் இதன்போதே மேற்படி கோரிக்கை முன் வைக்கப்பட்டது.

இதன்போது நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன், ஆன்மீகச்சுடர் ரிஷி தொண்டுநாதன் சுவாமிகள் ஆகியோருடன் நாட்டின் இன்றைய சூழ்நிலை தொடர்பாக கலந்துரையாடினார்.

நல்லை ஆதீன முதல்வர் கனடாநாட்டில் வாழும் எம்மக்களைக் கௌரவமாக அங்கு வழிநடத்துவதற்கு நன்றி கூறியதோடு இந்த நாட்டில் நிலவும் இனப்பிரச்சனைத் தீர்வு தொடர்பாக கனடா நாடு இலங்கை அரசுடன் பேசவேண்டும் என்பதனை வலியுறுத்தினர்.

கனடா துணைத்தூதரகத்தை வடக்கில் நிறுவி, மக்களுக்கு உதவவேண்டும் எனவும், கனடா தூதுவராலய விசா அலுவலகம் வடக்குப் பகுதியில அமையவேண்டிய அவசியத்தையும் விளக்கினர். தொடர்ந்து போரில் இறந்தவர்களுக்கு மனிதநேய அடிப்படையில் வழிபாடு செய்யும் உரிமையினையும் எடுத்துரைத்தனர்.

# "ஈழத்தை ஏற்படுத்த வேண்டும்" மதுரை ஆதீனம் பாரதப் பிரதமர் மோடியிடம்கோரிக்கை

இலங்கையில் எஞ்சியிருக்கும் தமிழர்கள் பாதுகாப்பாக இருக்க வேண்டுமென்றால் ஈழம் உருவாக வேண்டும் என்று மதுரை ஆதீனம் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

தமிழ்நாட்டு முன்னணி சைவ மடங்களில் ஒன்றான மதுரை ஆதீனம் தென் இந்தியாவில் இருக்கும் சைவ மடங்களில் மிகவும் பழமையானது என்று கருதப்படுகிறது.

அந்த மடத்தின் 293ஆவது குருமகா சன்னிதானம் ஸ்ரீலஸ்ரீ ஹரிஹர ஞானசம்பந்த தேசிக பரமாச்சாரிய சுவாமிகள் இந்திய நாடாளுமன்றத்திற்கு நடைபெற்ற தேர்தல் முடிவுகள் வெளியாகி மீண்டும் பிரதமராக மூன்றாவது முறையாக நரேந்திர மோடி பதவியேற்ற அடுத்த நாள் ஆலய நகரான மதுரையில் செய்தியளர்களை சந்தித்த போதே "ஈழம் அமைக்கப்பட வேண்டும்" என்ற கருத்தை வெளியிட்டார்.

"ஈழத்திலிருக்கின்ற தமிழர்களை கொஞ்சநஞ்சம் இருக்கின்ற மக்களை பாதுகாக்க தமிழீழத்தை ஏற்படுத்த வேண்டும்".

தமிழக மத மற்றும் அரசியல் பரப்பில் பெரும் செல்வாக்கும் ஆளுமையும் செலுத்தும் மதுரை ஆதீனத்தின் இந்த கருத்து சமூக ஊடகங்களில் பரந்தளவில் பெரிய வரவேற்பை பெற்றுள்ளது.

இந்திய நாடாளுமன்றத்திற்கு நடைபெற்ற தேர்தல் முடிவுகள் குறித்து கருத்து வெளியிட்ட அவர், சிலர் வென்றது குறித்து தான் மிகவும் வருத்தமடைவதாக கூறினார்.

"அன்றைய தினம் இலங்கையிலே லட்சக்கணக்கான மக்களை கொன்று குவித்தவர்களும் வெற்றி பெற்றுவிட்டார்களே என்ற வருத்தம் தான் எனக்கு இருக்கிறது. அதனால் தான் அவர்களால் மத்தியில் ஆள முடியவில்லை".

அவர் நேரடியாக அப்படி வென்றவர்கள் யார் என்பதை கூறாவிட்டாலும், அது திமுக-காங்கிரஸ் கூட்டணியின் சார்பில் வெற்றி பெற்றவர்களைத் தான் குறிக்கிறது என்பதை அறிய முடிகிறது என்று உள்ளூர் செய்தியாளார்கள் கூறிகிறார்கள்.

இலங்கையிலுள்ள தமிழர்களுக்கு பிரதமர் நரேந்திர மோடி வீடுகளை கட்டிக்கொடுத்துள்ளார் என்று தெரிவித்த ஹரிஹர ஞானசம்பந்த தேசிக பரமாச்சாரிய சுவாமிகள், "வெற்றி பெற்ற நரேந்திர மோடிக்கு இரண்டு கோரிக்கைக்ளை வைக்கிறேன். அன்று இந்திரா காந்தி கச்சத்தீவை கொடுத்துவிட்டார். இன்றைய தினம் மீனவர்கள் மீன்பிடிக்க முடியவில்லை. படகுகள் அழிக்கப்பட்டன, மீன் வலைகள் அறுக்கப்பட்டன. இதற்கெல்லாம் காரணம் கச்சத்தீவுதான். கச்சத்தீவு நம்மிடம் இருந்தால் அங்கு மீன்வளம் அதிகமாக கிடைக்கும். ஆக கச்சத்தீவை மீட்டு நம்முடைய தமிழ்நாட்டுடன் இணைக்க வேண்டும். ஈழத்திலே இருக்கின்ற தமிழர்களை கொஞ்சநஞ்சம் இருக்கும் மக்களை பாதுகாக்க தமிழீழத்தை ஏற்படுத்த வேண்டும். இந்த இரண்டு கோரிக்கைகளையும் நம்முடைய பாரதப் பிரதமரிடம் வைக்கின்றேன்".

நடைபெற்ற பொதுத் தேர்தலில் தமிழ்நாட்டு மக்கள் அனைத்து கட்சியினருக்கு வாக்குகளை அளித்துள்ளார்கள் என்றும் அவர் தெரிவித்தார்.

"இலங்கை தமிழர்களை கொன்றது யார்? இராணுவத்தை அனுப்பியது யார்? அது உங்களுக்குத் தெரியும். அது யார் என்று நான் சொல்லமாட்டேன். தமிழக மக்கள் எடுத்த முடிவில் ஒரு குறை. இலங்கைத் தமிழர்களை கொன்றவர்களை ஆதரித்தது வருத்தம்".

அண்மையில் முடிந்த இந்திய நாடாளுமன்ற தேர்தலில், தமிழ்நாட்டில் இருக்கும் 39 தொகுதிகளிலும் திமுக-காங்கிரஸ் வேட்பாளர்களே வெற்றி பெற்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

தான் மீண்டும் இந்தியப் பிரதமரை சந்திக்கும் வாய்ப்பு இருப்பதாகவும், அப்போது இந்த இரண்டு கோரிக்கைகளையும் அவரிடம் வைப்பேன் என்றும் அவர் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.



தமிழ்நாட்டில் திருவாவடுதுறை ஆதீனம், தருமபுர ஆதீனம், குன்றக்குடி ஆதீனம், தொண்டை மண்டல ஆதினம், பேரூர் ஆதீனம், பொம்மபுர ஆதீனம் என்று சுமார் 20 சைவ மடங்கள் மற்றும் மடாதிபதிகள் உள்ளனர்.

எனினும், அவற்றில் அரசியல் மற்றும் சமூக செயற்பாடுகளில் மதுரை ஆதீனகர்த்தர்களே முன்னணியில் இருந்துள்ளனர். அவ்வகையில் அவர்களது கருத்து மிகவும் கூர்மையாக கவனிக்கப்படும்.

தமிழையும் சைவத்தையும் வளர்த்துப் பேணிப் பாதுகாப்பதில் தமிழ்நாட்டிலுள்ள ஆதீனங்கள் மற்றும் மடங்களுக்கு பெரும் பங்குள்ளது.

கடந்த ஆண்டும் (2023) இந்திய நாடாளுமன்றத்தின் புதிய கட்டடம் திறக்கப்பட்ட போது, தமிழ்நாட்டு மடாதிபதிகள் நந்தியின் உருவம் பொறித்த செங்கோல் ஒன்றை பிரதமர் நரேந்திர மோடியிடம் கையளித்தனர். அது இப்போது நிரந்தரமாக சபாநாயகர் ஆசனத்திற்கு அருகில் வைக்கப்பட்டுள்ளது.

மதுரை ஆதீனத்திற்கு பிரதமர் மோதிக்குமான நெருக்கம் அனைவரும் அறிந்ததே. நாடாளுமன்ற தேர்தல் பிரச்சாரத்தின் போது மதுரை வந்திருந்த மோதி அங்கு வாகன பவனி ஒன்றை மேற்கொண்டிருந்தார். அப்போது அவரை சந்தித்து வாழ்த்துத் தெரிவிக்க சாலையோரங்களில் கூடியிருந்த மக்களுடன் ஆதீனமும் நின்றிந்தார். இதை கண்ட மோதி தனது வாகனத்தை நிறுத்தச்சொல்லி, ஆதீனத்தை அருகில் அழைத்து அவரை வணங்கினார். இருவருக்குமிடையில் அப்போது சுருக்கமன உரையாடல் இடம்பெற்றது. அப்போதும் ஈழ மக்களின் நலன்களை பிரதமர் முன்னெடுக்க வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்ததாக கூறினார்.

இப்போது தேர்தல் முடிந்து புதிய அரசு பதவியேற்றுள்ள நிலையில், தமிழீழம் அமைக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை அவர் வலியுறுத்தியுள்ளார்.

அவர் மோடியை விரைவில் புதுடில்லியில் சந்திப்பார் என்று உள்ளூர் செய்தியாளர்கள் கூறுகின்றனர். பிரதமரை சந்திப்பதற்கான திகதியை அவர் எதிர்நோக்கி காத்திருக்கிறார் என்றும் அவர்கள் கூறுகின்றனர்.

தென்னிந்தியாவிலேயே மிகவும் பழைய சைவ மடமாக மதுரை ஆதீனம் கருதப்படுகிறது. அதற்கு 1300 வருட வரலாறு உள்ளது என்று ஆய்வாளர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

ஆலயங்களின் பராமரிப்பு, கல்வி கலாசாலைகளை நிறுவி அறிவுப்புரட்சியை உருவாக்கியது, பழந்தமிழ் காப்பியங்கள் மற்றும் ஓலைச்சுவடிகளை சேகரித்து அவற்றை நூல்வடிவில் புதுபித்தது, திருமுறை ஓதலை பரவச் செய்தது ஆகியவற்றில் தமிழ்நாட்டின் சைவ மடங்களின் பங்கு அளப்பரியது.

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# 50 ஆண்டு காலப் புனிதமான பணிசெய்து வரும் உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்திற்கு அபகீர்த்தி ஏற்படுத்தும் வகையில் செயற்பட்டு வரும் "மோசடிப் பேர்வழி" கள் தொடர்பாக அவதானமாக இருங்கள்

**தாயகத்தில் உள்ள கல்வியாளர்களையும் பொதுமக்களையும் வேண்டி நிற்கும் உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் "உண்மையான" செயற்குழு உறுப்பினர்கள்**

"கடந்த 50 ஆண்டு காலமாக உலகெங்கும் கிளைகளை அமைத்து தமிழ் மொழிக்கும் பண்பாட்டுக்கும் மற்றும் இளைய தலைமுறையினருக்காகவும் புனிதமான பணிசெய்து வரும் உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்திற்கு அபகீர்த்தி ஏற்படுத்தும் வகையில் ஆங்காங்கே சட்டவிரோதமான முறையில் செயற்பட்டு வரும் சில குழுக்கள் தொடர்பாக உலகெங்கும் வாழும் தமிழ் மக்களுக்கும் குறிப்பாக எமது சமூகத்தின் அறிவுத் தளத்தில் கம்பீரமாக நின்று கொண்டிருக்கும் கல்வியாளர்களுக்கும். அறியத்தரும் வகையில் இந்த அறிக்கையை கனடாவில் தலைமையகத்தைக் கொண்டு இயங்கும் உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் செயற்குழு வெளியிடுகின்றது. எனவே யாழ்ப்பாணப் பல்கலைகழகத்தில் எமது அனுமதியில்லாமலும் சட்ட விரோதமாகவும் எதிர்வரும் யூன் மாதம் 14ம் திகதி தொடக்கம் 16ம் திகதி வரை யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் உள்ள "கைலாசபதி கலையரங்கில் ஒரு மாநாடு நடைபெறவுள்ளதாக அறிவிக்கும் துண்டுப் பிரசுரம் ஒன்றை வெளியிட்டுள்ள. ஜேர்மனி வாழ் மாவை சோ. தங்கராசா உட்பட பலரது "முகமூடிகளை" பார்த்து ஏமாந்து விடாமல் இருக்குமாறும் கனடாவில் அரச அங்கீகாரம் பெற்று சட்டபூர்வமாக இயங்கும் எமது உலகத்தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் தற்போதைய செயற்குழு கேட்டுக்கொள்கின்றது".

இவ்வாறு உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் செயலாளர் நாயகம் ஜேர்மனி வாழ் துரை கணேசலிங்கம். துணைத் தலைவர் கனடா வாழ் சிவா கணபதிப்பிள்ளை மற்றும் சர்வதேச ஊடகப் பொறுப்பாளர் ஆர்.என். லோகேந்திரலிங்கம் ஆகியோர் கூட்டாக வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மிகவும் அவசரமான சூழ்நிலையில் வெளியிடப்படும் இந்த அறிக்கைக்கு முக்கியத்துவம் கொடுத்து இலங்கையிலும் மற்றும் உலகெங்கும் உள்ள ஊடக நிறுவனங்கள் இந்த அறிக்கையை மக்கள் மத்தியில் கொண்டு செல்ல உதவ வேண்டும் என்றும் மேற்படி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி அவசர அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது: கனடாவில் சட்டபூர்வமாக கனடிய மத்திய அரசாங்கத்தில் பதிவு செய்து இயங்கிவரும் உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் தலைமையகத்தின் செயற்பாடுகளுக்கு விரோதமாக ஆங்காங்கே கூட்டங்களை நடத்துவதும், பொய்ப் பிரச்சாரங்களைச் செய்வதும் தற்போதும் சில குழுக்கள் மேற்கொண்டு வரும் "அற்பத்தனமான" செயற்பாடுகள் என எமது கவனத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. எனவே அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க கனடாவைத் தலைமையகமாகக் கொண்டு இயங்கும் "உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் தலைமையகம் தற்போது துரிதமான செயற்பாடுகளில் இறங்கியுள்ளது என்பதை நாம் பகிரங்கமாக அறியத்தருகின்றோம்.

இந்த அறிக்கையோடு இணைக்கப்பட்டுள்ள இரண்டு பிரசுரங்களில் ஒன்று எதிர்வரும் யூன் மாதம் 14ம் திகதி தொடக்கம் 16ம் திகதி வரை யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் உள்ள "கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளதாக அறிவிக்கும் துண்டுப் பிரசுரம் ஒன்று.


உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம்
INTERNATIONAL MOVEMENT FOR TAMIL CULTURE

மற்றையது இந்த மாநாடு என்ற போர்வையில் கபடம் நிறைந்த உள்நோக்கம் கொண்டவரான ஜேர்மனி வாழ் "மாவை சோ. தங்கராசா உட்பட சிலர் யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தின் துணைவேந்தரையும் இந்த மாநாட்டோடு இணைத்து "சட்டவிரோதமாக" உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் பெயரைப் பயன்படுத்துவதாக உலகத்தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் துணைத் தலைவரான கனடா வாழ் சிவா. கணபதிப்பிள்ளை அவர்கள். செயலாளர் நாயகம் ஜேர்மனி வாழ் துரை கணேசலிங்கம் அவர்கள் உட்பட மேலும் சிலராகிய நாம் ஆட்சேபனையும் கண்டனமும் தெரிவிக்கின்றோம்.

இங்கு காணப்படும் இரண்டாவது பிரசுரம் மேற்குறிப்பிட்ட ஜேர்மனி வாழ் "மாவை சோ. தங்கராசா அவர்களை அவர் வகித்த பதவியிலிருந்து நீக்கும் வகையில் 2019ம் ஆண்டு எம்மால் அவருக்கு எழுதப்பெற்ற பதவி நீக்கக் கடிதம்.

அந்த கடிதம் அனுப்பப்பட்டதற்கு காரணம் உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் பொருளாளராக செயற்பட்டு வந்த மாவை சோ. தங்கராசா நிதி தொடர்பான விடயங்களில் தவறுகள் இழைத்ததாலும் சரியான முறையில் கணக்குகளை காட்டாமல் காலம் கடத்தியமைக்காகவும் மேலும் உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் பெயரையும் அதன் இலட்சணையையும் (லோகோ) பாவித்து தொடர்ச்சியாக பல மோசடிகளில் ஈடுபட்டு வந்தமைக்காக அவர் பதவியிலிருந்து நீக்கப்பட்டாலும் அவருக்கு கால அவகாசம் வழங்கப்பெற்றது.




ஆனால் அவர் உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் கனடாவில் இயங்கும் தலைமையகத்திற்கு எதிரான செயற்படும் வகையில் பல வருடங்களாக செயற்பட்டு வருகின்றார். அத்துடன் எதிர்வரும் யூன் மாதம் 14ம் திகதி தொடக்கம் 16ம் திகதி வரை யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் உள்ள "கைலாசபதி கலையரங்கில்" நடைபெறவுள்ளதாக அறிவிக்கும் துண்டுப் பிரசுரம் ஒன்றில் காணப்படும் விபரங்களின் படி உலகெங்கும் வாழும் பல முக்கியமான தமிழ் அன்பர்களையும் ஏமாற்ற முனைந்துள்ளார்.

குறிப்பாக யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தின் தற்போதைய துணைவேந்தர் உயர் திரு பேராசிரியர் ஸ்ரீ சற்குணராஜா மற்றும் தமிழ்நாட்டைச் சேர்ந்த தமிழ்த் தொண்டர் வி.ஜி. சந்தோசம் மற்றும் மறைந்த ஈழத் தமிழர்களின் தலைவர் அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம் அவர்களின் புதல்வர் இலண்டன் வாழ் அ.காண்டீபன் உட்பட சிலரை இந்த துண்டுப் பிரசுரத்தில் அடக்கி அவர்களும் தன்னோடு "துணை" நிற்கின்றார்கள் என்ற மாயையை ஏற்படுத்த முனைகின்றார் இந்த ஏமாற்றுப் பேர்வழி" ஜேர்மனி வாழ் சோ. தங்கராசா.

எனவே கனடாவில் தலைமையகத்தை கொண்டியங்கும் உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கமானது அதன் தற்போதைய செயலாளர் நாயகம் ஜேர்மனி வாழ் துரை கணேசலிங்கம் அவர்களின் வழிகாட்டலிலும் கனடா வாழ் துணைத் தலைவர் சிவா. கணபதிப்பிள்ளை அவர்களின் தலைமையிலும் துரிதமான நடவடிக்கைகளில் இறங்கியுள்ளது என்ற செய்தியை நாம் உகெங்கும் வாழும் இயக்கத்தின் அபிமானிகளுக்கு அறியத்தர விரும்புகின்றோம்.

எமது தாயகத்தில் அமைந்துள்ள நம் தமிழர்களின் உயர்கல்விக்கு அடையாளமாகத் திகழும் யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தையும் அதன் உப வேந்தரையும் மேலும் பேராசிரியர் பெருமக்களையும் பல்கலைக் கழக மாணவர்களையும் ஏமாற்றும் வகையில் செயற்பட்டு வரும் ஏமாற்றுப் பேர்வழி" ஜேர்மனி வாழ் சோ. தங்கராசாவையும் அவரோடு துணைநிற்கும் ஏனைய "கோடரிக் காம்புகளையும்" யாழ்ப்பாண பல்கலைக் கழகச் சமூகம்" புறக்கணிக்க வேண்டும் என கனடாவில் தலைமையகத்தைக் கொண்டியங்கும் உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் "உண்மையான"தும் கனடிய அரசால் அங்கீகரிக்கப்பட்டதுமான நிர்வாக சபை உறுப்பினர்களான நாம் வேண்டிக் கொள்கின்றோம் என்பதை அனைவருக்கும் தெரியப்படுத்தும் முகமாகவே இந்த அறிக்கை வெளியிடப்படுகின்றது.

உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தோடு தொடர்ச்சியாக இயங்கிவரும் அனைவரும் இதைப் புரிந்து கொள்ள வேண்டுமென கனடாவில் தலைமையகத்தைக் கொண்டியங்கும் உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் முக்கியஸ்தர்கள் வேண்டுகின்றனர் என்பதையும் நாம் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

இந்த அறிக்கை மூலம் நாம் முக்கியமான சில விடயங்களையும் இங்கு குறிப்பிட்டு காட்டவேண்டிய நிலைக்கும் தள்ளப்பட்டுள்ளோம்.

50 ஆண்டு காலப் புனிதமான பணிசெய்து வரும் உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்திற்கு அபகீர்த்தி ஏற்படுத்தும் வகையில் செயற்பட்டு வரும் ஜேர்மனி வாழ் மாவை சோ. தங்கராசா போன்றவர்களின் சட்ட விரோத செயற்பாடுகளை மக்கள் நிராகரிக்க வேண்டும்.

உலகத் தமிழ்ப்பண்பாட்டு இயக்கத்தின் செயற்பாடுகளுக்கு அபகீர்த்தி ஏற்படுத்தியும் இழிவான செயல்களில் தொடர்ச்சியாக ஈடுபட்டும் அரசியல் இலாபம் தேடி நிற்பவர்கள் ஒரு நாள் எமது புனிதமான அமைப்பை சிதைத்து விடுவார்கள் என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

குரும்ப சிட்டி இரா. கனகரத்தினம் போன்ற "சிற்பி"களால் உருவாக்கப்பெற்று மறைந்த மலேசிய பேராசிரியர் இரா.ந. வீரப்பன், அமரர் பேராசிரியர் சாலை இளந்திரையன் ஜேர்மனி வாழ் துரை கணேசலிங்கம், தமிழ்நாடு வாழ் வா.மு. சேதுராமன், கனடா வாழ் எஸ். துரைராசா. சிவா. கணபதிப்பிள்ளை தென்னாபிரிக்கா வாழ் மிக்கிச் செட்டி போன்றவர்களால் "உயிர்" கொடுக்கப்பெற்று இன்னும் நிலைத்து நிற்கும் உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தை சிதைக்கவென செயற்பட்டு வரும் "மாவை சோ. தங்கராசா போன்றவர்களை புலம்பெயர் நாடுகளில் உள்ள தமிழன்பர்களும் கண்டிக்க வேண்டும்

இங்ஙனம்,
துரை கணேசலிங்கம்
செயலாளர் நாயகம் - உலகத் தமிழ் பண்பாட்டு இயக்க தலைமையகம் - கனடா

சிவா கணபதிப்பிள்ளை
துணைத் தலைவர் - உலகத் தமிழ் பண்பாட்டு இயக்க தலைமையகம் - கனடா

ஆர். என். லோகேந்திரலிங்கம்
சர்வதேச ஊடகப் பொறுப்பாளர்
உலகத் தமிழ் பண்பாட்டு இயக்க தலைமையகம் - கனடா

# 30th Anniversary Grand Sale

SALE! SALE!!! SALE!! SALE! SALE!!! SALE!! SALE! SALE!!! SALE!! SALE!

S&S Since 1994

# SAMY & SONS

Wholesalers & Retailers



# GRAND SALE

## JUNE. 1ST TO JULY. 01ST

- ☑ Reliable
- ☑ Trustworthy
- ☑ Friendly

**Textiles, Jewellery, Gift Items & Fancy Goods**
**Express Money Transfer,**
**Pawn Broker, Etc.**

- ☑ Quality
- ☑ Quantity
- ☑ Discounts

## BLOWOUT SALE EVERYTHING MUST GO







Preethi Eco Plus 3pcs







### EACH $7.00

Saree Blouses,
Saree Underskirts,
Senorita Bras,
Saarams, Skirts,
T-Shirts,
And Many More!

### NEW ARRIVALS

Pattus, Cut Works,
Bridal Soft Silks.
Sequins, &
Cotton Sarees,
Special Salwars
Fancy Lengha Suits,
Kurtha Blouses,
Kurtha Suits,
and many more!
**All At Unbelievable Blowout Prices.**

### EACH $12.00

Kurtha Tops,
Kurtha Shirts (Men),
Denim Pants,
Dress Pants,
Shirts(Men),
Fancy Frocks(Kids),
Salwars (All Sizes),
**Milk Cooker,**
**Appa Chatti,**
**Puttu Kudam,**
**Archunai Basket,**
**Kundu Dosa Chatti,**
**Coconut Scrapper.**

**Steamer $29.00**
**Banana Leaf Plate $3.50**
**3 Set Satti $18.00**
**Silver or Brass Thattus,**
**and more!**



Many More Items on Sale:

**OPEN 7 Days**
10:00am
9:00 pm
DOOR BUSTER
First 25 Customers Get A Free Rice Cooker If Purchase Is Over $300 (Clothing Items)

**Fancy Items From 50¢**
**Tel: 416-298-1598**
**Cell: 647-239-SAMY (7269)**
1884 Kennedy Road (at Ellesmere)
Scarborough, Ontario M1P 2L8
www.samyandsons.com Email: samyandsons@gmail.com

DOOR BUSTER
First 25 Customers Get Free HOT BOX If Purchase Is Over $150 (Clothing Items)

அன்றும், இன்றும், என்றும் ஒரே குடையின் கீழ் சாமி அன்ட் சன்ஸ்

# தமிழ் பொது வேட்பாளரும் சுமந்திரனின் கலக்கமும்



**“அரசியல் நிகழ்ச்சிக்காக மக்கள் சிவில் சமூகத்தினரைத் தெரிவு செய்து அனுப்பவில்லை. எங்களைத்தான் தெரிவு செய்திருக்கின்றார்கள் என்று சுமந்திரன் கூறுகின்றார். ரணிலுக்கு சஜித்துக்கு, அநுரவுக்கு அவர்களது அழுக்காடைகளை தோய்க்கவோ, சலுகைகளைப் பெறவோ, நீதி அமைச்சு. வெளிநாட்டு அமைச்சுப் பதவிகளுக்கு பேரம் பேசவோ உங்களை தமிழ் மக்கள் தெரிவுசெய்யவில்லை. அதுமட்டுமல்ல இப்போது துரோகிப் பட்டம் கட்டுவது மிக இலகு. அதற்கு இன்றைக்குப் பெறுமதியே இல்லாமல் போய்விட்டது என்றும் சுமந்திரன் கூறுகின்றார். மானம் உள்ளவனுக்குத்தான் தனது கௌரவத்துக்கு பாதிப்பு ஏற்பட்டால் கோபம் வரும். கற்புள்ளவளுக்குத்தான் தனது கற்பை இழிவு படுத்தினால் கொலைவெறி வரும். நாணயம் உள்ளவனுக்குத்தான் தனது நேர்மையை சந்தேகித்தால் ஆத்திரம் வரும். தேசப்பற்றுள்ளவனுக்குத்தான் தன்னை துரோகி எனக்கூறினால் சினம் ஏற்படும் அந்த வகையில் இவை எதுவுமே சுமந்திரனுக்கு ஏற்படாது”** ------------------------------ **- கே. பாலா**

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் பொது வேட்பாளர் களமிறக்கம் என்ற கோஷம் தொடர்பில் வடக்கு, கிழக்கிலுள்ள தமிழ் சிவில் அமைப்புக்கள், தமிழ் மக்கள் மத்தியில் ஆதரவும் எதிர்பார்ப்பும் எதிர்பார்த்ததை விடவும் அதிகரித்து வரும் நிலையில் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் பொது வேட்பாளர் என்ற விடயத்தை எதிர்க்கும் இலங்கை தமிழரசுக்கட்சியின் சுமந்திரன் அணியும் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான தமிழ் தேசிய மக்கள் முன்னணியும் பகிரங்கமாகவே தமிழ் பொதுவேட்பாளர் கோஷத்தை தோற்கடிக்கும் முயற்சியில் இறங்கியுள்ளனர்.

ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் பொது வேட்பாளர் களமிறக்கம் ஏன்? அதன் அவசியம், அவசரம், அரசியல், அனுகூலம் என்ன என்பது தொடர்பில் தெளிவாக விளக்கமளித்து அதற்கு ஆதரவாக தமிழ் கட்சிகள், தமிழ் மக்களை ஓரணியில் திரட்டும் “கல்லில் நாருரிக்கும்” முயற்சியில் தமிழ் சிவில் சமூகம் வெற்றியடைந்து வரும் நிலையில் தான் இலங்கை தமிழரசுக்கட்சியின் “தனி ஒருவன்” ஆன சுமந்திரன் எம்.பி. “தமிழ் பொதுவேட்பாளர் என்ற கோமாளிக்கூத்துடன் எமக்கு உடன்பாடில்லை. இது ஒரு விஷப்பரீட்சை இதற்கெதிராக மக்கள் மத்தியில் இலங்கை தமிழ் அரசு கட்சி பிரசாரம்செய்யும் என விஷம் கக்கியுள்ளார்.

தமிழ் பொது வேட்பாளர் கோஷத்துக்கு எதிராக சுமந்திரன் எம்.பி. தரப்பால் ஏற்பாடு செய்யப்பட்ட “மக்கள் மன்றில் ஈழத் தமிழர் சுயநிர்ணய உரிமை பொது நிலைப்பாடும் பொது வாக்கெடுப்பும்” எனும் தலைப்பிலான அரசியல் கருத்துக் கள நிகழ்வு யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் அமைந்துள்ள தந்தை செல்வா கேட்போர் கூடத்தில் ஞாயிற்றுக்கிழமை மாலை நடைபெற்ற போதே சுமந்திரன் எம்.பி. இவ்வாறு விஷம் கக்கியுள்ளதுடன் தமிழ் பொது வேட்பாளர் கோஷத்தை தோற்கடிப்போம் என்றவாறாக சவாலும் விடுத்துள்ளார். இதில் உரையாற்றிய சுமந்திரன் எம்.பி. அரசியல் அனுபவம் உள்ள ஒருவர், ஜனாதிபதி சட்டத்தரணி என்ற தனது ஆளுமைகளை மறந்து சிறுபிள்ளைத்தனமான, கோமாளித் தனமான சில கருத்துக்களையும் வெளியிட்டுள்ளார்.

இன்றைய காலகட்டத்திலே தமிழ்ப் பொது வேட்பாளரை நிறுத்த வேண்டும் என்று சொல்லுகின்ற ஒரு தரப்பினர் தன்னோடு வந்து உரையாடியதாகவும் இப்படியாக ஒரு கூட்டத்தை ஒழுங்கு செய்திருக்கின்றேன் என்று கூறி அவர்களையும் இதில் பங்குகொள்ளுமாறு அழைத்திருந்ததாகவும் தாங்கள் கலந்துகொள்வதாக தனக்கு அவர்கள் வாக்குறுதி அளித்து விட்டு பின்னர் அவர்கள் பின்வாங்கியதாகவும் தங்களின் குழு இந்த நிகழ்வுக்குப்போகக் கூடாது எனத் தீர்மானமொன்றை எடுத்திருப்பதால் தங்களினால் வரமுடியாது என அவர்கள் கூறியதாகவும். இப்படி இவர்கள் ஒளித்து ஓடுவதற்கு என்ன காரணம் என்று தனக்குத் தெரியவில்லை எனவும் குறிப்பிட்டுருந்தார்.

அவர்கள் ஒரு குழுவாக எடுத்த தீர்மானத்திற்கு கட்டுப்படுகின்றார்கள். இது அவர்கள் தமது குழு மீதி வைத்துள்ள விசுவாசம். தமது முடிவில் உறுதியாக இருக்கும் ஒழுக்கம், ஒற்றுமைக்கு கொடுக்கும் மரியாதை. இது சுமந்திரன் எம்.பி.க்கு தெரியாதது பெரிய விடயம் அல்ல. ஏனெனில் தமிழரசுக்கட்சி மத்திய குழு எடுக்கும் எந்த முடிவுக்கும் கட்டுப்படாதவர் சுமந்திரன். ஜனாதிபதியுடனான சந்திப்பை தமிழரசுக்கட்சி புறக்கணிக்கின்றது என மத்திய குழு முடிவெடுத்து அறிவித்தால் அதை மீறி தனி ஒருவனாக சென்று அந்த சந்திப்பில் பங்கேற்பவர் சுமந்திரன் .தமிழரசுக்கட்சிக்குள்ளேயே பிளவுகளை ஏற்படுத்தி கட்சியை மரணத்தருவாயில் வைத்திருப்பதிலும் இவருக்கு பெரும்பங்குண்டு.

அவ்வாறானவருக்கு சிவில் சமூகத்தின் இந்த ஒற்றுமை, முடிவுக்கு கட்டுப்படும் ஒழுக்கம் புரியாதது ஒன்றும் புதினம் அல்ல.

தமிழ்ப் பொது வேட்பாளர் விடயம் ஒரு தேவையில்லாத வி‘ப் பரீட்சை என்று நான் கூறுகின்றேன். ஒரு வி‘ப் பரீட்சையில் நாங்கள் ஈடுபட்டு அசைக்கமுடியாத இந்த மக்கள் ஆணையை இல்லை என்று நிறுவுவதற்கு நாங்கள் முயற்சி செய்கின்றோமா? தமிழ் மக்களின் அரசியல் தலைவர்களாக அந்த விஷப் பரீட்சைக்கு நாங்கள் செல்லவேகூடாது என்பதுதான் என்னுடைய கருத்து. எங்கள் இருப்பையே இல்லாமல் செய்யப்போகின்ற ஒரு நிகழ்வு.

(தொடர்ச்சி 17ம் பக்கம்)



# மரண அறிவித்தல்



**தோற்றம்:**
02-07-1986

**மறைவு:**
11-06-2024

## திரு. அரவிந்த் சிவராஜசிங்கம்

**பிரான்ஸ் Paris ஐப் பிறப்பிடமாகவும், கனடா Montreal, Toronto ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கொண்ட அரவிந்த் சிவராஜசிங்கம் அவர்கள் 11-06-2024 செவ்வாய்க்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.**

அன்னார் சிவராஜசிங்கம் கணபதிப்பிள்ளை - கௌரி சிவராஜசிங்கம் தம்பதிகளின் அன்பு மகனும்,
சுதந்திரகரன் செல்வரத்தினம் - யசோ சுதந்திரகரன் ஆகியோரின் அன்பு மருமகனும்,
சயனிசா சுதந்திரகரன் (Nisa Karan) அவர்களின் அன்புக் கணவரும்,
ஆஷா சிவராஜசிங்கம் அவர்களின் அன்புச் சகோதரரும்,
மிதுன் குலேந்திரநாதன், சுபன்யா சுதந்திரகரன் ஆகியோரின் அன்பு மைத்துனரும்,
அனைலா மிதுன், அவேயா மிதுன் ஆகியோரின் ஆசை மாமாவும் ஆவார்.

**இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.**

---

Mr. Aravinth Sivarajasingam, born in Paris, France and lived in Montreal and Toronto, Canada, passed away peacefully on 11th June 2024.

He was the beloved son of Sivarajasingam Kanapathyppillai and Gowri Sivarajasingam.
Beloved son-in-law of Suthanthirakaran Selvaradnam and Yaso Suthanthirakaran.
Loving husband of Sayanisa Suthanthirakaran (Nisa Karan).
Beloved brother of Aasha Sivarajasingam.
Loving brother-in-law of Mithun Kulendranathan, and Subanya Suthanthirakaran.
Loving uncle of Anylaa Mithun and Aveyaa Mithun.

**We request our relatives, friends and families to accept this notice.**

---

***அன்னாரின் பூதவுடல் 16-06-2024 ஞாயிற்றுக்கிழமை காலை 9:00 மணி தொடக்கம் மாலை 3:00 மணி வரை Ajax Crematorium & Visitation Centre (384 Finley Ave, Ajax, ON L1S 2E3, Canada) இல் பார்வைக்காக வைக்கப்பட்டு, தொடர்ந்து மாலை 3:00 மணிக்கு ஈமைக்கிரியைகள் நடைபெற்று தகனம் செய்யப்படும்.***

**தகவல்: குடும்பத்தினர்**
**தொடர்புகளுக்கு:**
சிவா நாகமணி (மாமா): (647) 289-0091 | சுதந்திரகரன் (மாமா): (647) 230-0102


உங்கள் வீட்டை புதுப்பிக்க வேண்டுமா?
Legalize your basement now!
* Basements
* Bathrooms
* Kitchen
* Flooring
* Accent Walls
* Painting
* Custom Closets
Coverall Group Inc.
Contact: Siva
416-706-8160


லோகன் கணபதி | MPP Markham - Thornhill
உங்களை அன்புடன் அழைக்கிறோம்
June 27 ஆம் திகதி 2024 BBQ
வியாழக்கிழமை | 5 PM - 7 PM
முகவரி: 15 Simonston Blvd, Markham, ON (Simonston Park)
உங்கள் வருகையை பதிவு செய்ய
அழையுங்கள்: 905 305 1933
அல்லது இந்த QR code-ஐ scan செய்து
பதிவு செய்யவும்.
மின்னஞ்சல் அனுப்புவதற்கு:
logan.kanapathico@pc.ola.org
SCAN ME
அனுமதி இலவசம்: உணவு,
BBQ மற்றும், சிறுவர்
விளையாட்டுகள்

# தமிழ் பொது வேட்பாளரும், சுமந்திரனின் கலக்கமும்

(14ம் பக்கத் தொடர்ச்சி)



இதற்கு நாங்கள் இணங்கினால் இதுவரை காலம் வரைக்கும் எங்கள் உயிர் மூச்சு என்று சொல்கின்ற எங்கள் இறைமை, எங்களுக்கான சுயநிர்ணய உரிமை அனைத்தையும் இல்லை என்று நாங்கள் சொல்கின்றதான ஒரு செயற்பாடாகத்தான் இது இருக்கும் என்றும் சுமந்திரன் எச்சரிக்கின்றார்.

அப்படியானால் இதுவரை நடந்த ஜனாதிபதி தேர்தல்களில் தமிழ் மக்கள் சிங்கள வேட்பாளர்களுக்கு வாக்களித்து தங்களது இறைமையை, சுயநிர்ணய உரிமையை பாதுகாக்க முடிந்ததா? அல்லது தமிழர்களின் இருப்பையாவது தக்க வைக்க முடிந்ததா? தமிழ் பொது வேட்பாளர் என்பது விஷப்பரீட்சை என்றால் சிங்கள வேட்பாளர் என்பது சுமந்திரனைப் பொறுத்தவரையில் இனிப்பான பரீட்சையா? சிங்கள வேட்பாளர்களுக்கு இதுவரை ஆணை வழங்கிய தமிழ் மக்களுக்கு அவர்கள் கொடுத்ததுதான் என்ன?நீங்கள் கைகாட்டிய சரத் பொன்சேகாவுக்கும் மைத்திரி பால சிறிசேனவுக்கும் தமிழ் மக்கள் வாக்களித்து கண்ட பலன் என்ன? அல்லது நீங்கள் பெற்றுக்கொடுத்த தீர்வுகள்தான் என்ன? மைத்திரிபாலவுக்கு தமிழ் மக்களை வாக்களிக்க வைத்து எதிர்க்கட்சித்தலைவர் பதவியை பெற்றுக்கொண்ட உங்கள் பெரும் தலைவர் இரா. சம்பந்தன் தமிழ் மக்களுக்காக சாதித்த விடயம்தான் என்ன? வேலைவாய்ப்பற்ற தமிழ் பட்டதாரிகள் "ஜனாதிபதியுடன் பேசி எமக்கு வேலை வாய்ப்பு பெற்றுத்தாருங்கள்" எனக்கேட்டபோது "அரசிடம் உங்களுக்கு வேலை வாய்ப்புக் கேட்டால் அது இனப்பிரச்சினைக்கான தீர்வில் பாதிப்பை ஏற்படுத்தும்" என்று கூறியவரல்லவா உங்கள் பெருந்தலைவர்.

தேர்தல் என்பது அரசியல் செயற்பாடு.அத்தகைய அரசியல் செயற்பாடு அரசியல் தலைவர்கள், அரசியல் கட்சிகள் முன்னெடுக்க வேண்டிய விடயம். இதில் சிவில் சமூகத்துக்குப் பொறுப்பு இருக்கின்றது. அவர்கள் ஆலோசனை சொல்லலாம். அவர்களுடைய ஆலோசனை வரவேற்கத்தக்கது. ஆனால் இது ஒரு அரசியல் நிகழ்ச்சி. அந்த அரசியல் நிகழ்ச்சிக்காக மக்கள் சிவில் சமூகத்தினரைத் தெரிவு செய்து அனுப்பவில்லை. எங்களைத்தான் தெரிவு செய்திருக்கின்றார்கள். மக்கள் ஆணை எங்களுக்குத்தான் இருக்கின்றது. அந்தத் தீர்மானங்கள் எடுக்கின்ற பொறுப்பு எங்களுடைய கைகளில்தான் இருக்கின்றது. அதனை நாங்கள் விட்டுவிட முடியாது. அப்படி விட்டுவிட்டால் எங்களுடைய பொறுப்பை நாங்கள் உதாசீனம் செய்தவர்களாவோம் எனவும் சுமந்திரன் வாதிடுகின்றார்.

அரசியல் நிகழ்ச்சிக்காக மக்கள் சிவில் சமூகத்தினரைத் தெரிவு செய்து அனுப்பவில்லை. எங்களைத்தான் தெரிவு செய்திருக்கின்றார்கள் என்று சுமந்திரன் கூறுவது உண்மைதான். ஆனால் ரணிலுக்கு சஜித்துக்கு, அநுரவுக்கு அவர்களது அழுக்காடைகளை தோய்க்கவோ, சாமரம் வீசவோ, சலுகைகளைப் பெறவோ, விசுவாசம் காட்டவோ நீதி அமைச்சு. வெளிநாட்டு அமைச்சுப் பதவிகளுக்கு ஆசைப்படவோ அல்லது பேரம் பேசவோ உங்களை தமிழ் மக்கள் தெரிவுசெய்யவில்லை. அதுமட்டுமல்ல தமிழ் தேசிக்கூட்டமைப்புக்கு ஆதரவளிக்க வேண்டுமென பாராளுமன்றத்தேர்தல் காலங்களில் உங்களுக்காக தமிழ் மக்களிடம் பிரசாரம் செய்தவர்கள் சிவில் சமூகம்தான். உங்களுக்கு மக்கள் ஆணையை பெற்றுத் தந்ததில் சிவில் சமூகத்திற்கு பெரும் பங்குண்டு அதனை நீங்கள் மறந்து விடக்கூடாது. ஆனால் நன்றி மறப்பது உங்களுக்கு கைவந்த கலைதானே?

தமிழ் பொது வேட்பாளருக்கு எதிராக மக்களை விழிப்படையச் செய்ய வேண்டியது எங்களுடைய பொறுப்பு. நாங்கள் அதில் இருந்து ஒளிந்தோடப் போவதுமில்லை. அதற்காக உடனடியாகத் துரோகிப்பட்டம் கட்டிவிடுவார்கள். இப்போது துரோகிப் பட்டம் கட்டுவது மிக இலகு. அதற்கு இன்றைக்குப் பெறுமதியே இல்லாமல் போய்விட்டது. அவ்வாறு கட்டுவதானால் கட்டுங்கள். எதைச் செய்தாலும் பரவாயில்லை என்றும் சுமந்திரன் கூறுகின்றார்.

மானம் உள்ளவனுக்குத்தான் தனது கௌரவத்துக்கு பாதிப்பு ஏற்பட்டால் கோபம் வரும். கற்புள்ளவளுக்குத்தான் தனது கற்பை இழிவு படுத்தினால் கொலைவெறி வரும். நாணயம் உள்ளவனுக்குத்தான் தனது நேர்மையை சந்தேகித்தால் ஆத்திரம் வரும்.தேசப்பற்றுள்ளவனுக்குத்தான் தன்னை துரோகி எனக்கூறினால் சினம் ஏற்படும். அந்த வகையில் இவை எதுவுமே சுமந்திரனுக்கு ஏற்படாது என்பது தமிழ் மக்களுக்கு நன்கு தெரியும்.

சரி ஒரு தமிழ்ப் பொது வேட்பாளரை நிறுத்தினாலும் அதற்கு எதிராக நாங்கள் பிரசாரம் செய்ய வேண்டும். அதுஏன் என்று கேட்டால் அவர் படுதோல்வி அடைகின்றபோது இது எங்களுடைய அரசியல் நிலைப்பாடு அல்ல. அது யாரோ செய்கின்ற கோமாளிக் கூத்து என்று நாங்கள் சொல்லக் கூடியதாகஇருக்க வேண்டும். இது பிரதானமான தமிழ்க் கட்சிஒன்றைச் சார்ந்தவன் என்ற வகையில்நான் சொல்கின்றேன் எங்கள் கட்சியினருக்கும்தான். இதற்கு எதிராக மக்கள் மத்தியில் பிரசாரம் செய்ய வேண்டிய பாரியபொறுப்பு எங்களிடத்தே இருக்கின்றது என்கின்றார் சுமந்திரன்.

ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் பொது வேட்பாளர் வெற்றி பெறுவார் என்று சுமந்திரனுக்கு யார் சொன்னது? சில வேளைகளில் தமிழ் பொது வேட்பாளர் வெற்றி பெற்று விடுவார் என சுமந்திரன் அச்சமடைகின்றாரோ தெரியவில்லை. தமிழ் பொது வேட்பாளரை ஏன் நிறுத்த வேண்டும் என்பதற்கான தெளிவான விளக்கம் பல தடவைகள் பலராலும் வழங்கப்பட்டு விட்டது. அதனை விளங்கிக்கொள்ளும் அறிவு சுமந்திரனுக்கு இல்லையா அல்லது விளங்கிக்கொள்ள மறுக்கின்றாரா என்பது அவருக்கே வெளிச்சம்.

ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் பொது வேட்பாளர் என்ற கோஷத்தினால் சிங்கள ஜனாதிபதி வேட்பாளர்களை விடவும் சுமந்திரன் எம்.பி. தான் அதிக கலக்கமடைந்துள்ளார். இதற்கு இரு காரணங்கள் மட்டுமே இருக்க முடியும். ஒன்று சிங்கள ஜனாதிபதி வேட்பாளர்களில் யாரோ ஒருவரின் தூண்டுதலில் இவ்வாறு செயற்பட வேண்டும். இரண்டாவது தமிழ் பொது வேட்பாளர் நிறுத்தப்பட்டு தமிழ் மக்களின் வாக்குகள் தான் விரும்பும் சிங்கள வேட்பாளருக்கு செல்லாது விட்டால் அவருடன் தான் செய்து கொண்டுள்ள "எழுதப்படாத ஒப்பந்தம்" நிறைவேறாமல் போய் விடுமோ என்ற அச்சத்தில் தமிழ் பொது வேட்பாளரை எதிர்க்க வேண்டும்.


## ஸ்ரீலங்கா முன்னை நாள் தமிழ் பொலிஸ் அலுவலர் கழகம் (கனடா)
## Sri Lankan Ex-Tamil Police Officers' Club (Canada)

### ஸ்ரீலங்கா முன்னைநாள் தமிழ் பொலிஸ் அலுவலர் கழகத்தின் வருடாந்த ஒன்றுகூடலும், விளையாட்டுப் போட்டியும் 2024



**காலம் :**
ஜீலை 01, 2024 (திங்கட்கிழமை)
காலை 10:00 மணிக்கு

**இடம்:**
Neilson Park
1555 Neilson Road
(Neilson & Finch)

இவ் ஒன்றுகூடலில் சகல வயதினருக்கான விளையாட்டுப் போட்டிகளும், விசேட போட்டிகளாக கயிறு இழுத்தல், உதைபந்தாட்டம், கிறிக்கெற், தம்பதியர்களுக்கான போட்டிகள், வேகநடைப் போட்டி என்பன நடைபெற உள்ளன. பங்குபெற விரும்புவோர் மைதானத்தில் காலை 10 மணிக்கு தங்கள் பெயர்களைப் பதிவு செய்து கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம்.
இடைவேளையின் போது அனைவருக்கும் மதியபோசனமும், B.B.Q உம், குளிர்பானமும் வழங்கப்படும்.
வெற்றி பெறுபவர்களுக்கு பெறுமதிமிக்க பரிசுகள் வழங்கப்படும்.

இவ் ஒன்றுகூடலுக்கு கழக உறுப்பினர்கள், அவர்கள் குடும்பத்தினர், அன்பர்கள், ஆதரவாளர்கள் அனைவரும் திரண்டு வருகை தந்து ஒன்றுகூடலைச் சிறப்பிக்குமாறு நிர்வாக சபையினர் அன்புடன் கேட்டுக் கொள்கின்றனர்.
*Canada Day Celebration* மிகச்சிறப்பாக கொண்டாடப்பட இருக்கிறது.



மேலதிக தொடர்புகளுக்கு:
சாம். தர்மகுலசிங்கம் : 647 - 882 - 1050 கே.சிவபாலன் : 905 - 813 - 0605
எஸ். அரியதாஸ் : 416 - 321 - 5703 கே.மனோகரன் : 647 - 720 - 5627

Ontario - வில் அரசு அங்கீகாரம் பெற்ற

# KANAGAAMBIKAI
## Pawn Brokers





**30**
வருட சேவைகள்

**வாடிக்கையாளர்களின் வேண்டுகோளுக்கு இணங்க புதிய கிளை உதயம்!**

# கனகாம்பிகை

**உங்கள் பணத்தேவைகளுக்கு குறைந்த வட்டி வீதத்தில் தங்க நகை அடவு**

நம்பிக்கை, நாணயம், உத்தரவாதம், திறமையுடன் கூடிய
ஒரே கூரையின் கீழ்
உங்கள் தங்கத்திற்கு பணம் வாங்க கண்கம்பிகைக்கு வாங்க...

## Pawn Bank Inc.™
Your Satisfaction is Our Success

(Brimley & Eglinton)
2613, Eglinton Ave East,
Scarborough, ON M1K 2S2
416 269 7198

(Finch & MCCowan)
1571 Sandhurst Circle
Woodside Square Mall #159D,
Scarborough - M1V1V2
416 754 7198

இலங்கை செய்திகள்
Sri Lanka News

மன்னார் நிருபர்

# சிறப்பாக இடம்பெற்ற பேசாலை சென் மேரிஸ் வித்தியாலய ஆரம்ப பாடசாலையின் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி



**- எஸ்.ஆர். லெம்பேட்**
**(10-06-2024)**

மன்னார் பேசாலை சென் மேரிஸ் (ST-MARY'S VIDYALAYAM) வித்தியாலய ஆரம்ப பாட-சாலையின் 2024 ஆம் ஆண்டுக்கான வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி 10-06-2024 அன்று திங்கட்கிழமை மாலை பாடசாலை அதிபர் ஜே.எஸ்.வி.பீரிஸ் தலைமையில் இடம்பெற்றது.

குறித்த நிகழ்வில் பிரதம விருந்தினராக பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் மற்றும் விருந்தினர்களாக பேசாலை உதவி பங்குத்தந்தை அருட்தந்தை எஸ்.அல்பன் ராஜ் அடிகளார், மன்னார் வலயக்கல்வி பணிப்பாளர் செல்வி ஜி.ரி. தேவராஜா உட்பட பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



இதன் போது மாணவர்களின் பல்வேறு விளையாட்டு மற்றும் உடற்பயிற்சி நிகழ்வுகள் இடம் பெற்றது.

மேலும் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்கள் மற்றும் இல்லங்களுக்கான பரிசில்களும் விருந்தினர்களினால் வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.





# மன்னாரில் அதிபர்,ஆசிரியர் தொழிற்சங்கத்தின் ஏற்பாட்டில் பல்வேறு கோரிக்கைகளை முன் வைத்து ஆர்ப்பாட்டம் முன்னெடுப்பு




**- எஸ்.ஆர். லெம்பேட்**
**(02-08-2021)**

அதிபர், ஆசிரியர் தொழிற் சங்கத்தின் ஏற்பாட்டில் பல்வேறு கோரிக்கைகளை முன் வைத்து மன்னாரில் அதிபர்கள் மற்றும் ஆசிரியர்கள் இணைந்து 12-06-2024 அன்று புதன்கிழமை மதியம் 2 மணி அளவில் ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

மன்னார் மாவட்ட செயலகத்திற்கு முன்பாக ஆரம்பமான குறித்த ஆர்பாட்ட பேரணியாக வலயக்கல்வி பணிமனை வரை சென்றது.

வலயக்கல்வி பணிமனைக்கு முன்பு பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து அதிபர் ஆசிரியர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

குறிப்பாக 1996 ஆம் ஆண்டு தொடக்கம் காணப்படும் ஆசிரியர் அதிபர் சம்பள முரண்பாடுகளுக்கு உடனடியாக தீர்வினை வழங்க கோரியும், வறிய மாணவர்களுக்கு சலுகை அடிப்படையில் கற்றல் உபகரணங்களை அரசாங்கம் வழங்க முன்வர வேண்டும் எனவும், பாடசாலைகளில் பெற்றோர்களிடம் இருந்து பணம் அற விடுவதை நிறுத்த வேண்டும், போன்ற பல்வேறு கோரிக்கைகளை முன் வைத்து குறித்த ஆர்ப்பாட்டம் இடம் பெற்றது.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட அதிபர்கள் மற்றும் ஆசிரியர்கள் “இலவச கல்வியை உறுதி செய், ஆசிரியர் அதிபர் சம்பள முரண்பாட்டின் மிகுதி மூன்றில் இரண்டு பங்கை கொடு,கல்விக்கான ஒதுக்கீட்டை அதிகரி போன்ற பல்வேறு பதாகைகளை ஏந்தியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

குறித்த போராட்டத்தில் மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த அதிபர்கள் மற்றும் ஆசிரியர்கள் கலந்து கொண்டதோடு, குறித்த போராட்டத்திற்கு ஆதரவு வழங்கும் வகையில் இலங்கை ஆசிரியர் சேவை சங்கத்தின் பிரதிநிதிகள் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.



# தமிழ் ஹைக்கூ: மூன்றாவது ஹைக்கூ உலக மாநாடு — 2024

## மதுரையில் நடைபெற்ற ஒரு நாள் ஹைக்கூ திருவிழாவில் தமிழக அரசு கவிக்கோ அப்துல்ரகுமான் பெயரால் விருது வழங்க கோரிக்கை

சங்கம் வைத்து தமிழ் வளர்த்த பெருமைக்குரிய மதுரை மாநகரிலுள்ள உலகத் தமிழ்ச்சங்க அரங்கத்தில் 2024 ஜூன் 9 ஞாயிறன்று “தமிழ் ஹைக்கூ: மூன்றாவது உலக மாநாடு” நடைபெற்றது.

இந்த மாநாட்டை மதுரை உலகத் தமிழ்ச் சங்கம், தமிழ் ஹைக்கூ கவிதையாளர்கள் இயக்கம், இனிய நந்தவனம் மாத இதழ் ஆகியன இணைந்து நடத்தின. மதுரை மாநாட்டில் சிங்கப்பூர், மலேசியா, இலங்கை, கத்தார் ஆகிய நாடுகளைச் சேர்ந்த ஹைக்கூ கவிஞர்கள் கலந்துகொண்டனர்.

முதலாவதாக, பொய்யாப்புலவர் திருவள்ளுவர் சிலைக்கு மாலை அணிவிக்கப்பட்டது. பிறகு, ஓவியக் கண்காட்சியை ஓவியக்கவிஞர் அமுதபாரதி திறந்து வைத்தார்.

மாநாட்டிற்கு வரவேற்புக்குழு தலைவர் கவிஞர் சகா (எ) கஜேந்திரன் தலைமையேற்றார்.

செயலாளர் கவிஞர் மூரா அனைவரையும் வரவேற்றார். ரொட்டேரியன் டாக்டர் கே.சீனிவாசன், எழுத்தாளர் சுப்ரபாரதி மணியன், மகாகவி பாரதியாரின் கொள்ளுப்பேத்தி கவிஞர் உமாபாரதி ஆகியோர் மாநாட்டை முன்னிலை வகித்தனர்.

சேவை வரி மற்றும் கலால் சுங்கவரித் துறையின் உதவி ஆணையர் ஜி.வெங்கட்சுப்பிரமணியன், தமுஎகச அறம் கிளையின் தலைவர் அ.உமர் பாரூக் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். “ஹைக்கூ மாநாடு எதற்காக?” எனும் தலைப்பில் பேசிய மாநாட்டு ஒருங்கிணைப்பாளர் நந்தவனம் சந்திரசேகரன் உரையாற்றினார்.

தமிழ் ஹைக்கூ உலக மாநாட்டின் நோக்கம் குறித்து கவிஞர் மு.முருகேஷ் பேசுகையில், “இன்றைக்கு உலகின் திசைகளிலெல்லாம் பரவியிருக்கிற ஹைக்கூ கவிதைகள் தமிழிலும் இளைய கவிஞர்கள் பலராலும் ஆர்வத்துடன் எழுதப்படுகிறது. புதியவர்களுக்கு ஹைக்கூ பற்றிய புரிதலையும் தெளிவையும் உண்டாக்குவதோடு, தமிழ் ஹைக்கூவை உலக அளவில் கொண்டு செல்வதே இந்த மாநாட்டின் நோக்கம்” என்று கூறினார்.

“தூண்டில்” மாநாட்டுச் சிறப்பு மலரினை டாக்டர் கே.சீனிவாசன் வெளியிட, இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன ஆலோசகர் இலக்கியப் புரவலர் அ.ஹாசிம் உமர் பெற்றுக்கொண்டார். பின்னர், தமிழ் ஹைக்கூ கவிதையாளர்கள் இயக்கத்திற்கான இலட்சினையைப் (லோகோ) பற்றி கவிஞர் மு.முருகேஷ் அறிமுகம் செய்ய, ஓவியக்கவிஞர் ஆ.உமாபதி உருவாக்கிய இலட்சினையை ஓவியக்கவிஞர் அமுதபாரதி வெளியிட, இலக்கியப் புரவலர் அ.ஹாசிம் உமர் பெற்றுக்கொண்டார்.



பின்னர் நடைபெற்ற ஹைக்கூ வாசிப்பரங்கம் 1 & 2, ஹைக்கூ பகிர்வரங்கம், ஹைக்கூ அயலகப் பகிர்வரங்கங்களில் தமிழின் மூத்த - இளைய கவிஞர்கள் 70-க்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டனர்.

மாநாட்டில் கலந்துகொண்ட மலேசியாவைச் சேர்ந்த




ந.பச்சைபாலன், சிங்கப்பூரைச் சேர்ந்த கவிஞர்கள் டி.என்.இமாஜான், ஆதிரன், இலங்கையைச் சேர்ந்த கவிஞர் ஜலீலா முஸம்மில் ஆகியோரின் ஹைக்கூ படைப்பிலக்கியப் பணியினைப் பாராட்டி, “ஹைக்கூ பேரொளி” எனும் விருது வழங்கி கவுரவிக்கப்பட்டது.

மாநாட்டையொட்டி கவிஞர் கவிமுகில் நடத்திய ஹைக்கூ கவிதைப்போட்டிக்கான பரிசளிப்பும், மாநாட்டு ஹைக்கூ வாசிப்பரங்கில் சிறப்பான கவிதைகளைப் படித்த கவிஞர்களுக்கும், மாநாட்டில் காட்சிக்கு வைக்கப்பட்ட ஓவியத்திற்கு சிறந்த கவிதையெழுதிய கவிஞர்களுக்கான புத்தகப் பரிசுகளும் வழங்கப்பட்டன.

அதனைத் தொடர்ந்து கவிஞர் மு.முருகேஷ் ஒருங்கிணைப்பில் நாற்பது ஹைக்கூ நூல்களின் வெளியீட்டு நிகழ்வும் நடைபெற்றது.

கவிஞர் தங்கம் மூர்த்தி மாநாட்டு நிறைவுரையில் பேசும்போது, தமிழகத்தில் இன்றைக்கு எழுதப்பட்டு வரும் சிறப்பான பல ஹைக்கூ கவிதைகளை மேற்கோளாகச் சுட்டிப் பேசினார்.

வரவேற்புக்குழு பொருளாளர் கவிஞர் வெ.கிருஷ்ணவேணி நன்றியுரை ஆற்றினார்.

இந்த மாநாட்டில் மறைந்த கவிக்கோ அப்துல்ரகுமான் பெயரால் தமிழக அரசு ஆண்டுதோறும் சிறந்த ஹைக்கூ கவிஞர்களுக்கு விருதுகளை வழங்க வேண்டுமென்றும், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் ரூ.5 இலட்சம் வைப்பு நிதி செலுத்தி, ஹைக்கூ இருக்கையை உருவாக்க வேண்டுமென்றும், தமிழக அரசு நூலகங்களுக்கு கொள்முதல் செய்யப்படும் நூல்களில் ஹைக்கூ நூல்களும் வாங்க வேண்டும் என்கிற 3 தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

மாநாட்டில் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்ட ரொட்டேரியன் டாக்டர் கே.சீனிவாசன், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் ஹைக்கூ இருக்கை அமைப்பதற்கான வைப்புநிதி ரூ.5 இலட்சத்தை தானே நன்கொடையாக வழங்குவதாக மேடையிலேயே அறிவித்தார். ஹைக்கூ கவிஞர்களின் பலத்த கரவொலிகளோடு மாநாடு நிறைவுற்றது.

# ஊடகவியலாளர் த.பிரதீபன் வீட்டின் மீதான தாக்குதல் – யாழ் வடமராட்சி ஊடக இல்லம் கண்டனம்

ஊடகவியலாளர் த.பிரதீபன் வீட்டின் மீதான தாக்குதல் – யாழ் வடமராட்சி ஊடக இல்லம் கண்டனம்ஆயுத முனைகளால் பேச முடியாததை வாள் முனையிலும் பெற்றோல் குண்டுகளாலும் மௌனிக்கச் செய்ய முயற்சி! – ஊடகவியலாளர் த.பிரதீபன் வீட்டின் மீதான தாக்குதலுக்கு கண்டனம்!

ஊடகவியலாளர் தம்பித்துறை பிரதீபனின் வீட்டின் மீது நள்ளிரவில் அத்துமீறி நுழைந்து மேற்கொள்ளப்பட்ட வன்முறைத் தாக்குதல் மற்றும் உயிரச்சுறுத்தலை ஏற்படுத்தும் செயற்பாடானாது, ஆயுத முனைகளால் பேச முடியாததை வாள் முனையிலும் பெற்றோல் குண்டுகளாலும் பேசி மௌனிச்செய்யும் அடக்குமுறையின் வெளிபாடாகும். இதனை நாம் வன்மையாக கண்டிக்கின்றோம்.

வாள்கள் மற்றும் பெற்றோல் குண்டுகள் மூலம் ஊடகவியலாளர் த.பிரதீபனின் உயிருக்கு அச்சுறுத்தல் விடுத்தும் வீட்டில் இருந்த உடமைகளை எரித்து நாசப்படுத்திய தரப்பினர், சம்பவ இடத்தில் மூன்றாம் பாலினத்தவரின் பெயரில் துண்டுப் பிரசுரத்தை வீசிச் சென்றுள்ளதன் மூலம் அவர்கள் மீது பழியை போட்டுவிட்டு கவனத்தை திசைதிருப்பும் நடவடிக்கையாகவே பார்க்கமுடிகிறது.

குறித்த வன்முறை தாக்குதல் சம்பவத்திற்கு பின்னால் பாரிய சதியொன்று புதைந்துள்ளதை நாம் அவதானிக்கின்றோம். கடந்த இரு மாதங்களாக நாட்டின் ஜனாதிபதியின் வடக்கிற்கான விஜயத்தின் போதான நிகழ்வுகளுக்கு ஊடகவியலாளர் த.பிரதீபனுக்கு ஜனாதிபதியின் பாதுகாப்பு பிரிவினரால் தொடர்ச்சியாக அனுமதி மறுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.


கடந்த காலங்களில் தமிழ் ஊடகத்துறையின் மீதான நேரடி மற்றும் மறைமுக தாக்குதல் சம்பவங்கள், படுகொலைகள், உயிரச்சுறுத்தல் நடவடிக்கைகள் மற்றும் விசாரணை கெடுபிடிகள் என்பன இன்றும் அதேவடிவத்தில் தொடர்ந்து வருகின்ற நிலையில் இவ்வாறான வன்முறைக் கும்பல்களின் மூலம் ஊடகவியலாளர்களை மௌனிக்கச் செய்யும் எத்தனிப்பானது மிக மிக ஆபத்தான அனுகுமுறையாகும்.

தமிழர்களின் உரிமைகள் மறுக்கப்பட்டு இருப்பும் கேள்விக்குறியாக்கப்பட்டு வரும் இன்றைய சூழமைவில் தமிழர்கள் எதிர்கொள்ளும் அடக்குமுறைகளையும், நெருக்கடிகளையும் வெளிக்கொணரும் ஒரே வழிமுறையாக ஊடக பரப்பு இருந்து வருகிறது. இவ்வாறான நிலையில் நிகழ்ந்துள்ள இத்தாக்குதலானாது ஊடக சுதந்திரத்தின் மீதான பாரிய அச்சுறுத்தலாகும். இச் செயற்பாட்டினை தனியே குறித்த ஒரு ஊடகவியலாளருக்கு எதிரான உரிமை மீ-றலாக கடந்து சென்றுவிட முடியாது.

யுத்தம் இடம்பெற்ற காலப்பகுதியில், பல்வேறு வடிவங்களில் ஊடகவியலாளர்கள் மீது மேற்கொள்ளப்பட்டு வந்த அடக்குமுறையானது புதிய புதிய வடிவங்களில் இன்றும் தொடர்ந்தவண்ணமேயுள்ளது. இவ்வாறு உயிர்ப்பலியெடுப்புகள், காணாமல்போகச் செய்தல்கள் உள்ளிட்ட பல்வேறு நெருக்கடிகளுக்கு முகம்கொடுத்தவாறே தமிழ் ஊடகத்துறை தமிழ் மக்களின் உரிமைக்குரலாக ஓங்கி ஒலித்து வருகிறது. அதனையும் நசுக்கி தமிழர்களது குரலை மௌனிக்கச் செய்யும் விதமாக ஊடகத்ததுறை மீதான இவ்வாறான தலையீடுகளை நாம் வன்மையாக கண்டிப்பதோடு, இதுபோன்ற அடக்குமுறை செயற்பாடுகள் உடன-டியாகவே தடுத்து நிறுத்தப்பட்டு ஊடக சுதந்திரத்தை உறுதிசெய்ய சம்பந்தப்பட்ட தரப்பினர் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் யாழ் வடமராட்சி ஊடக இல்லம் வலியுறுத்துகின்றது.

# ”கனடிய அரசாங்கம் புதிய இனவெறி எதிர்ப்பு உத்தியை அறிமுகம் செய்கின்றது. இதன் மூலம் மாற்றங்களைக் கொண்டு வரும் அமைப்புகளை அறிமுகப்படுத்துகிறது”

## கனடாவின் பன்முகத்தன்மை, உள்ளடக்கம் மற்றும் மாற்றுத்திறனாளிகள் நலன்களுக்கு பொறுப்பான அமைச்சர் கமல் கேரா,தெரிவிப்பு



பன்முகத்தன்மை சார்ந்த கொள்கையே கனடாவை வடிவமைத்துள்ளது மற்றும் தொடர்ந்து வடிவமைத்து வருகிறது. 2015 ஆம் ஆண்டு முதல், கனடிய அரசாங்கம் பன்முகத்தன்மை மற்றும் உள்ளடக்கத்தில் உறுதியாக உள்ளது, இதன் மூலம் கனடாவையும் உலகையும் ஒரு சிறந்த இடமாக மாற்றுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. முன்னேற்றம் ஏற்பட்ட போதிலும், நாடு முழுவதும் உள்ள பல்வேறு சமூகங்களைச் சேர்ந்த பலர் இனவாதத்தால் பாதிக்கப்பட்டுள்ளனர். கனடாவில் உள்ள பலருக்கு இனவாதப் போக்கை சமாளிப்பதுஏற்றுக்கொள்ள முடியாத உண்மையாகவே உள்ளது.

கனடாவில் இனவெறி மற்றும் பாகுபாடுகளுக்கு எதிரான மத்திய அரசின் தலைமையை வலுப்படுத்தும் நோக்கோடு கனடாவின்பன்முகத்தன்மை, உள்ளடக்கம் மற்றும் மாற்றுத்திறனாளிகள் நலன்களுக்கு பொறுப்பான அமைச்சர் கமல் கேரா,அவர்கள் கனடாவின் புதிய இனவெறி எதிர்ப்பு உத்திகள் மற்றும் அதனை நடைமுறைப்படும் அமைப்புகள், இவற்றை உள்ளடக்கிய கனடாவின் இனவெறி எதிர்ப்பு வியூகத்தை கடந்த சனிக்கிழமை 8ம் திகதி வெளியிட்டார். ரொறன்ரோ நகரில் உள்ள பொது அமைப்பு ஒன்றின் தலைமை அலுவலகத்தில் இந்த நிகழ்வு இடம்பெற்றது

அவர் அங்கு உரையாற்றுகையில் “கனேடிய சமூகத்தில் உள்ள பழங்குடி மக்கள், கறுப்பின, இன மற்றும் மத சிறுபான்மை சமூகங்களின் முழு சமூக மற்றும் பொருளாதார பங்கேற்பை முறையான இனவெறி மற்றும் பாகு-பாடு தொடர்ந்து கட்டுப்படுத்துகிறது. இனவெறி மற்றும் பாகுபாடு பொதுவான மதிப்புகளை பாதிப்படையச் செய்கிறது, அத்துடன் நடைமுறையில் உள்ள ஏற்றத்தாழ்வுகளை இன்னும் ஆழத்துக்குக் கொண்டு செல்கிறது. மற்றும் கனட-ாவில் உள்ள தனிநபர்களின் அன்றாட வாழ்க்கையில் பேரழிவு தரும் விளைவு-களை ஏற்படுத்துகிறது, மேலும் அந்த தாக்கங்கள் தலைமுறைகள் தலைமுறைக-ளாக தொடர்ந்து செல்வதை நாம் உணரவும் முடிகிறது”

கனடாவின் புதிய இனவெறி-எதிர்ப்பு உத்தியானது, 70 க்கும் மேற்பட்ட கூட்டாட்சி முன்முயற்சிகளை உள்ளடக்கியது, இதன் மூலம் கனடாவின் மத்திய அரசு தற்போது இயக்க முறைமையை மாற்றுவதையும் சமூகங்களுக்குள் ஆதரவான தாக்கத்தை வளர்ப்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது. இந்த திட்டத்தின் அடிப்படையில் சமூகங்களுக்கான மானிய நிதியாக $70 மில்லியன் நிதி ஒதுக்கீடும் இதில் அடங்கும்” என்றார்

அங்கு செய்தியாளர் கேட்ட கேள்விகளுக்கு பதிலளிக்கையில் ”இனவெ-றியை எதிர்த்துப் போராடுவதில் நிபுணர்களாக சமூகங்களை ஆதரிக்கும், முழு கூட்டாட்சி பொதுச் சேவைக்கும் இனவெறி-எதிர்ப்பு கட்டமைப்பை நி-றுவுதல் அவசியம் என்பதை எமது அரசு உணர்ந்துள்ளது. இதன் மூலம் புதிய பொறுப்புக்கூறல் நடவடிக்கைகளை வழங்குதல், கூட்டாட்சி இனவெறி எதிர்ப்பு செயலகத்தை வலுப்படுத்துதல் மற்றும் மாகாணங்கள், பிரதேசங்கள் மற்றும் சர்வதேச பங்காளிகளுடன் மிகவும் நெருக்கமாக பணியாற்றுவதன் மூலம் இனவெ-றியின் தாக்கத்தைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரலாம்” என்றும் அமைச்சர் தெரிவித்தார்

அங்கு உரையாற்றிய கனடாவின் பழங்குடியினர் மற்றும் -சுதேசிகள் சார்ந்த உறவுகளுக்கு பொறுப்பானஅமைச்சர் கௌரவ கேரி ஆனந்தசங்கரி அங்கு உரையாற்றுகையில்

”கனடாவில் அதன் புதுப்பிக்கப்பட்ட இனவெறி எதிர்ப்பு மூலோபாயத்தின் மூலம் இனவெறியை ஒழிப்பதற்கான அதன் முயற்சிகளை இரட்டிப்பாக்கும் அரசாங்கத்தின் ஒரு பகுதியாக இருப்பதில் நான் பெருமைப்படுகிறேன். வெறுப்பு மற்றும் அமைப்பு ரீதியான இனவெறி எங்கிருந்தாலும், எது எப்படி இருந்தாலும், இந்த நாட்டில் உள்ள பழங்குடியினர் மற்றும் , கறுப்பின மற்றும் இனவாதத்தை எதிர்கொள்ளும் மக்களின் வாழ்வில் உண்மையான மாற்றத்தை ஏற்படுத்துவதற்கும், எது சரியா-னது என்பதற்கும் பாதுகாப்பாக நாங்கள் இருப்போம்.” என்று உறுதியளித்தார். இங்கு காணப்படும் படங்கள் அங்கு எடுக்கப்பெற்றவையாகும்

This article written by LJI Journalist Mr. Ganesh for Uthayan




இலங்கை செய்திகள் Sri Lanka News

மன்னார் நிருபர்

# மன்னாரில் 2 ஆம் கட்ட காற்றாலை மின் உற்பத்தி, கணிய மணல் அகழ்வு குறித்து மாவட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் வாத பிரதி வாதம்

- எஸ்.ஆர். லெம்பேட் (12-06-2024)

மன்னார் மாவட்டத்தில் 2 ஆம் கட்டமாக முன்னெடுக்கப்படவுள்ள காற்றாலை செயற்றிட்டம் மற்றும் கனிய மணல் அகழ்வு களுக்கு எதிராக புதன்கிழமை (12) மன்னார் மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்ற மன்னார் மாவட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் பல்வேறு தரப்பினரால் எதிர்ப்புக்கள் முன் வைக்கப்பட்டது.

எனினும் மாவட்ட ஒருங்கிணைப்பு குழுவினால் எவ்வித அனுமதியும் வழங்கப்படாமல் முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகளிற்கு எதிராக மக்களே நடவடிக்கை எடுக்க வேண்டும் மன்னார் மாவட்ட ஒருங்கிணைப்பு குழு தெரிவித்துள்ளது.

மன்னார் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு கூட்டம் மாவட்ட அரசாங்க அதிபர் க. கனகேஸ்வரனின் நெறிப்படுத்தலில் அபிவிருத்தி குழுவின் தலைவரான இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான் தலைமையில் குறித்த கூட்டம் இடம் பெற்றது.

இதன் போது பாராளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், சாள்ஸ் நிர்மலநாதன், கே.திலீபன் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர். இதன் போது பல்வேறு விடையங்கள் குறித்து ஆராயப்பட்டது.

குறிப்பாக மன்னார் தீவு பகுதியில் 2வது கட்டமாக முன்னெடுக்கப்படவுள்ள காற்றாலை மின் உற்பத்தி மற்றும் கனிய மணல் அகழ்வு குறித்து கலந்துரையாட பட்ட போது பல்வேறு தரப்பினரால் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது.



மன்னார் மாவட்ட பிரஜைகள் குழு மீனவ அமைப்புகள் மற்றும் பொது அமைப்புக்களின் ஒன்றியம் ஆகியவை எதிர்ப்பை தெரிவித்தனர்.

மன்னார் தீவு பகுதிக்குள் கணிய மணல் அகழ்வு அல்லது ஆராய்ச்சி நடவடிக்கைகள் இனி இடம் பெற கூடாது என பல முறை தெரிவிக்கப்பட்ட போதும்,குறித்த அகழ்வு தொடர்பாக அபிவிருத்திக்குழு கூட்டத்தில் கதைக்கப்பட்டமைக்கு எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது.



மேலும் கடந்த அபிவிருத்தி குழு கூட்டத்தின் போது காற்றாலை மின் செயற் திட்டம் தொடர்பாக ஜனாதிபதியிடம் பேசுவதாக பாராளுமன்ற உறுப்பினர் தெரிவித்த போதும் இதுவரை எவ்வித முயற்சிகளும் முன்னெடுக்கப்பட வில்லை என விசனம் தெரிவித்துள்ளனர்.

மன்னார் தீவில் கணிய மணல் அகழ்வு முன்னெடுக்கப்பட கூடாது என்பதே அனைவரினதும் கோரிக்கை.எனினும் கணிய மணல் அகழ்வை முன்னெடுக்கும் நிறுவனத்தை அழைத்து கலந்துரையாடியமை யை ஏற்றுக் கொள்ள முடியாது என பாராளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்தார்.

குறித்த விடயத்தை திரும்ப திரும்ப கதைப்பதில் அர்த்தம் இல்லை.

அதற்கான அனுமதியை மாவட்ட ஒருங்கிணைப்பு குழு வழங்காத நிலையில், கொழும்பில் அனுமதி வழங்குவதாக இருந்தால் இந்த மன்னார் மாவட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டம் எதற்கு? என்றும் அவ்வாறு கொழும்பில் அனைத்திற்கும் அனுமதி வழங்கினால் இனிமேல் மன்னார் மாவட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தை நடத்துவதில் அர்த்தம் இல்லை என்றும், இனிமேல் நடத்த வேண்டாம் என்றும் அவர் பகிரங்கமாக கோரிக்கை விடுத்தார்.

மேலும் பல்வேறு விடயங்கள் குறித்து ஆராயப்பட்டது.குறித்த கூட்டத்தில் திணைக்கள தலைவர்கள், முப்படையினர், பிரதேச செயலாளர்கள், வட மாகாண திணைக்கள அதிகாரிகள் என பலர் கலந்து கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இலுப்பைக்கடவை சோழமண்டல குளத்தின் கீழ் பயிர் செய்கையில் ஈடுபடும் காணியற்ற ஏழை விவசாயிகளுக்கு ஆவணங்களை உடன் வழங்குங்கள் – ஜனாதிபதிக்கு அவசர கடிதம்

- எஸ்.ஆர். லெம்பேட் (13-06-2024)

மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள இலுப்பைக்கடவை சோழமண்டல குளத்தின் கீழ் கடந்த 30 ஆண்டுகளாக காணியற்ற நூறு ஏழை விவசாயிகள் பயிர் செய்கையில் ஈடுபட்டு வருகின்றனர். இவர்களுக்கு இதுவரை காணிக்குரிய ஆவணங்கள் எதுவும் வழங்கப்படவில்லை.

எனவே எதிர்வரும் 16 ஆம் திகதி மன்னார் மாவட்டத்திற்கு வருகை தருவதற்கு முன்னதாக அவர்களுக்கு காணி வழங்கும் உத்தரவை வழங்கி விட்டு வருகை தருமாறு மன்னார் மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியம் ஜனாதிபதியிடம் அவசர கோரிக்கை விடுத்துள்ளனர்.

இவ்விடயம் தொடர்பாக மன்னார் மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றிய தலைவர் வி.எஸ். சிவகரன் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு வியாழக்கிழமை (13) அவசர கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

குறித்த கடிதத்தில் மேலும் குறிப்பிடுகையில், கடந்த 30 ஆண்டுகளாக மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள இலுப்பைக்கடவை சோழமண்டல குளத்தின் கீழ் காணியற்ற நூறு ஏழை விவசாயிகள் பயிர் செய்கையில் ஈடுபட்டு வருகின்றனர்.

இவர்களுக்கு இதுவரை காணிக்குரிய ஆவணங்கள் எதுவும் வழங்கப்படவில்லை. நான்கு ஜனாதிபதிகளிடம் கோரிக்கை விடுத்தும் இதுவரை நடைபெறவில்லை. எதிர்வரும் 16 ஆம் திகதி ஜனாதிபதி மன்னார் மாவட்டத்திற்கு வருகை தர இருப்பதாக அறிகிறோம்.

எனவே மன்னார் மாவட்டத்திற்கு வருகை தருவதற்கு முன்னதாக இவர்களுக்கு காணி வழங்கும் உத்தரவை வழங்கி விட்டு வருமாறு கேட்டுக் கொள்கிறோம்.

காணி சீர்திருத்த அதிகார சபை லஞ்சம் வாங்குபவர்களுக்கு மட்டும் காணி வழங்கி வருகிறது. பல ஆண்டுகளாக பல வழிகளிலும் வேண்டுகை விடுத்தும் அதிகாரிகள் செவி சாய்ப்பதாக இல்லை. தங்களுக்கும் ஏற்கனவே மூன்று தடவை கடிதம் எழுதியிருந்தோம். அதனால் எந்தப் பயனும் ஏற்படவில்லை. இந்த நாட்டில் சமூக சம நீதி என்பது எந்த விடயத்திலும் நடைமுறைப்படுத்திய தாகத் தெரியவில்லை. இலஞ்சமும் ஊழலும் வியாபித்துள்ளது.




அதனால் தான் இந்த நாடு இவ்வளவு மோசமான பொருளாதார நெருக்கடிக்குள் மீள முடியாமல் சிக்கித் தவிக்கிறது. எனவே மன்னாருக்கு வருவதற்கு முன்னர் இக்காணி வழங்குவதற்குரிய அனுமதியை அதிகாரிகளுக்கு வழங்கி விட்டு வருமாறு கேட்டுக் கொள்வதோடு, இந்த காணி வழங்குவதில் எந்த விதமான சட்ட ரீதியான தடைகளும் இல்லை.

குறிப்பாக வனத்திணைக்களத்தினதோ, வனவிலங்குகள் திணைக்களத்தினதோ, தொல்பொருள் திணைக்களத்தினதோ இல்லை. அலுவலக நிர்வாக நடைமுறைகளுக்கு அமைவாக சகல ஆவணங்களும் பல வருடங்களுக்கு முன்பே காணி சீர்திருத்த அதிகார சபையிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.

ஆகவே இதற்கு தாங்கள் உடனடியாக தகுந்த நடவடிக்கை எடுப்பீர்கள் என்று நம்புகின்றோம்.என குறித்த கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

## வீணாவின் கவிக்கணை

எத்தனை சுமைகள்
எத்தனை தடைகள்
அனைத்தையும் தாண்டி
வந்திடு மனமே,
உன் உழைப்பிற்கும்
விலையுண்டு,
உன் தன்னம்பிக்கைக்கும்
மதிப்புண்டு,
ஓர் நாள் மாறும்
எல்லா துன்பமும்,
இனிதே மறைந்திடும்
எல்லா துயரும்!

TRADITIONAL CHINESE
ACUPUNCTURE THERAPY

| | |
|---|---|
| எல்லாவிமான வலிகளுக்கும் | All Pain & Aches, Arthritis |
| ஆஸ்மா, பீனிசம், ஒவ்வாமை | Asthma, Sinusitis, Rhinitis Allergies |
| மனத்தளர்ச்சி, தலைவலி aches | Stress, Migraine & All Types of Head- |
| நீரிழிவு நோய், வயிற்றுவலி | Diabetes, Gastric Pain, Ulcer |
| மாதவிடாய் சம்மந்தமானவையும் | Menstruation |
| உடற்பருமன் குறைத்தல் | Weight Loss |

முதலான சகலவிதமான நோய்களுக்கும்


Mrs. K. Vasanthakumar
Acupuncturist (R.A.C)
தொடர்புகொள்ளவும்.

(416) 754-4024

5200 Finch Ave., East -- Suit #349
Scarborough, ON M1S 4Z5



மேலதிக தகவல்களுக்கு:
திருமதி. வசந்தா நடராசன் B.A.
(416) 332-0269
vasantha@rogers.com



# ஈழத்துத் திருக்கோயில்கள்

வரலாறும் மரபும் 1099

## பொன்னம்பலவாணேஸ்வரர் ஆலயம் கொழும்பு

**நண்பர்களே!**

**எனது பெயர் கொண்ட முகநூலில் (Facebook) ஒவ்வொரு வாரமும் இந்துமதம் கூறுவதென்ன? மற்றும் தேடல் என்ற தலைப்பில் பல்வேறு விடயங்கள் பற்றி எழுதி வருகின்றேன். வாசித்தறிந்து உங்கள் கருத்துக்களை வெளியிடுங்கள்.**

**நன்றி.**

" கைப்போது மலர்தூவிக் காதலித்து வானோர்கள்
முப்போது முடிசாய்த்துத் தொழநின்ற முதல்வனை
அப்போது மலர்தூவி ஐம்புலனு மகத்தடக்கி
எப்போது மினியானை யென்மனத்தே வைத்தேனே."

கொழும்பு, கொச்சிக்கடையில் காணப்படும் பொன்னம்பலவாணேஸ்வரர் ஆலயத்தின் நித்திய, நைமித்திய பூசைகள், எவ்வித இடையூறுமின்றி தனது சந்ததியினரால் நடத்தப்படவேண்டும் என, திரு.அருணாசலம் பொன்னம்பலமுதலியார் விரும்பினார். அதற்கேற்றமுறையில் அக்காலத்திலே நாத்தாண்டியா என்னும் இடத்தில், ஆயிரம் ஏக்கர் தென்னந்தோட்டத்தை வாங்கி, கோயிலுக்குத் தருமசாசனம் செய்து வைத்தார். அத்தோடு கொழும்பு மாநகரில் தொடர்கடைகளைக் கட்டி, அவற்றிலிருந்து கிடைக்கும் பணத்தின் மூலம், ஆலயத்தை சிறப்பாக நிருவகிக்க வகை செய்தார்.

யாத்திரை நிமித்தமாக இலங்கையிலும், இந்தியாவிலிருந்தும் கொழும்பை நாடிவரும் யாத்திரகர்கள் தங்குவதற்குச் சிரமப்பட்டனர். இதனைக் கருத்திற் கொண்ட முதலியார் அவர்கள், யாத்திரிகர்கள் எவ்வித சிரமமுமின்றித் தங்கும்வகையில், அன்னதான மடமொன்றைக் கட்டினார். அத்தோடு அமையாது மடத்திலே தங்குவோருக்குமட்டுமன்றி அங்குவரும் ஏழைகளுக்கும் உணவும், உடையும் அளித்தார். இவ்வாறான பணிகளோடு பல சமூகப்பணிகளையும் திரு. அருணாசலம் பொன்னம்பல முதலியார் அவர்கள் ஆற்றியுள்ளார்கள்.

அன்றுதொட்டு இன்றுவரை தமிழ் சமூகத்தை அடிமைப்படுத்திக் கொண்டிருக்கும் சீதனக் கொடுமையால், தமிழ்ப்பெண்களில் பலர் திருமணம் செய்து கொள்ள முடியாத நிலை காணப்பட்டது. ஏனைய சமூகங்களிலும் ஏழ்மை காரணமாக பெண்கள் திருமணம் செய்வதில் பல்வேறு பிரச்சினைகள் காணப்பட்டன. இவ்வாறான அனைத்து சமூத்தைச் சேர்ந்த திருமணமாகாத கன்னிப் பெண்களுக்கு, தனது செலவிலே திருமணம் செய்து வைத்தார்.

இந்துக்கள் மரணமடைந்தால் பெரியவர்களாயின் அவர்களது உடலைத் தகனம் செய்து, புண்ணியதீர்த்தங்களிலோ, சமுத்திரங்களிலோ கரைத்தால் அவர்களது ஆன்மா ஈடேற்றம் காணும் என்ற நம்பிக்கை உள்ளது. அக்காலத்திலே கொழும்புப் பிரதேசத்திலே வாழ்ந்த இந்துக்கள் இறந்தால், அவர்களது பூதவுடலைத் தகனம் செய்வதற்குரிய மயானம் காணப்படவில்லை. இக்காரணத்தினால் உடல்களைப் புதைப்பது வழக்கமாகக் காணப்பட்டது. இந்நிலையைப் போக்க ஒரு காணியை விலைக்கு வாங்கி, பூதவுடல்களைத் தகனம் செய்வதற்குரிய மயானத்தையும், கிரியைகள் நடத்தவதற்குரிய மடத்தையும்,
திரு. அருணாசலம் பொன்னம்பல முதலியார் அவர்கள் கட்டுவித்தார்கள். இவ்வாறான கைங்கரியங்களினால் முதலியார் அவர்கள் இன்றுவரை அனைத்துச் சமூகங்களினாலும் நினைவுகூரப்படுகின்றார்.

இப்பெரியார் 1887 ஆம் ஆண்டு இறைபதம் அடைந்தார். தாம் இறப்பதற்குமுன்னர் தன்னால் ஆரம்பித்து சிறப்பாக நடத்திவந்த சமூகப்பணிகளையும், ஆலயத்தையும் தொடர்ந்தும் சிறப்பாக நிர்வகிக்க, தனது சந்ததியில் வரும் மூத்த ஆண் வம்சத்திற்கு சட்டப்படியான அதிகாரத்தை வழங்கி சாசனமும் செய்து வைத்தார். இவரின் மறைவுக்குப் பின்னர் இவரது மூத்த மகனாகிய திரு.பொன். குமாரசாமி அவர்கள், 1905 ஆம் ஆண்டுவரை, கொச்சிக்கடை பொன்னம்பலவாணேஸ்வரர் ஆலயத்தை சிறப்பாக நிர்வகித்து வந்தார். இவர் காலமானபின்னர், திரு.அருணாசலம் பொன்னம்பல முதலியாருடைய இரண்டாவது மகனான, திரு. பொன். இராமநாதன் அவர்கள் தந்தைவழி நின்று கோயிலையும், தந்தையார் விட்டுச் சென்ற சமூகப் பணிகளையும் தொடர்ந்து பராமரித்து வந்தார்.

தந்தையார் கல்லும், சுண்ணாம்பும், செங்கற்களும் கொண்டு கொச்சிக்கடை பொன்னம்பலவாணேஸ்வரர் கோயிலைக் கட்டியிருந்தார். இதனை மாற்றி கருங்கற் கோயிலாக இக்கோயிலைக் கட்ட, திரு.பொ.இராமநாதன் அவர்கள் முயற்சிகள் செய்ததோடு அமையாது, 1907 ஆம் ஆண்டு, கருங்கற்கோவிற்பணியை ஆரம்பித்தார். இக்கோயிலைக் கட்டுவதற்கான ஸ்தபதிகளும், சிற்பிகளும், தேர்ந்த கட்டிடக் கலைஞர்களும், இந்தியாவிலிருந்து அழைத்து வரப்பட்டனர். ஆலயம் எழுப்புவதற்கான கருங்கற்களை, வியாங்கொடையிலிருந்து தருவித்தார். திரு. பொ. இராமநாதன் அவர்கள், சிவதோத்திரங்களை பண்ணுடன் பாட வல்லவராக விளங்கியுள்ளார்.

ஆலயத்திருப்பணிவேலைகள் நடைபெறும் வேளைகளில் அவ்விடத்திற்குச் சென்று, வேலைகளை நேரில் பார்வையிடுவது இவரது வழக்கம். சிற்பங்களை உருவாக்கும் சிற்பிகளுக்கு அருகிலே சென்று, பண்ணுடன் சிவதோத்திரங்களை பாடி, தெய்வீகமான சூழலை உருவாக்கும் வழக்கம் இவரிடம் காணப்பட்டது. இக்கோயிலில் அழகிய, கலைநுணுக்கம் வாய்ந்த தெய்வத்திருவுருவங்கள் வடிக்கப்பட, இவரது செயற்பாடுகளும் காரணமாக அமைந்தன. ஐந்து வருடங்களாக நடைபெற்ற கோயிற் திருப்பணி வேலைகள், 1912 ஆம் ஆண்டு நிறைவேறியது.

இதனைத் தொடர்ந்து 21.11.1912 ஆம் ஆண்டு, கொச்சிக்கடை பொன்னம்பலவாணேஸ்வரர் கோயில் குடமுழுக்குப் பெருவிழா மிகச் சிறப்பாக நடந்தேறியது. இக்கோயில் திராவிட கட்டிடக்கலை சார்ந்ததாகக் காணப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. அன்றைய கணக்கின்படி இருபது லட்சத்திற்கும் மேல் செலவு செய்து பொன்னம்பலவாணேஸ்வரர் திருக்கோயில் கட்டப்பட்டது. தற்கால மதிப்பில் பல நூற்றுக்கணக்கான கோடிகளை இது எட்டும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இன்றைய சூழ்நிலையில் கொழும்பு மாநகரில், இவ்வாறான ஒரு திருக்கோயிலைக் கட்டுவதென்பது மிகவும் கடினமான காரியமாகும்.

*வளரும்...*

## தந்தையரை வணங்கி வாழவைப்போம் (நிலை மண்டில ஆசிரியப்பா)

---

*தாயார் எமக்குத் தந்தார் உடலினை
சேயாய் எம்மை தாங்கினார் தந்தை
மாதா மாதம் பத்துச் சுமந்தார்
தாதா தோளில் பிரியமாய் ஏந்தினார்
எட்டுத் திங்களில் எட்டடி வைத்து
எட்டி நடக்க ஏற்றம் காட்டினீர்
மூன்று வயதில் முச்சொல் சொன்னீர்
நான்கு வயதில் நடனம் கற்பித்தீர்
மூச்சிலும் பேச்சிலும் முழுமையாய் நின்றீர்
மூச்சு உள்ளவரை மூர்த்தியாய்ப் போற்றுவோம்
ஐந்து வயதில் அணைத்துச் சென்றுமே!
புந்தி புகட்டப் பள்ளியில் சேர்த்தீர்
எண்ணும் எழுத்தும் ஏற்றநல் பாடலும்
கண்ணை விழித்துக் கருத்துடன் கற்பித்தீர்
கல்வியும் கலைகளும் கற்க வைத்தீர்
வல்லடி நெருங்கா விழிபோல் காத்தீர்
தன்னலம் கருதாத் தவமாய்த் தாங்கினீர்
உன்னத வாழ்வுக்கு உரமாய் இருந்தீர்
பருவ வயதில் பண்பான பெண்ணை
விருப்புடன் எமக்கு விவாகம் செய்திட
பகல் இரவாய்ப் பாடுபட்ட தந்தையை
அகக்கையில் வைத்து அருமையாய்த் தாங்குவோம்
தந்தை என்போர் தசையுடல் அல்லரே!
பந்தம் என்ற பசையால் ஆனவர்
தந்தையர் தினமல்ல தரணியில் வாழ்வரை
சிந்தை நமக்குச் சிறப்புடன் இருந்தால்
ஆடி அமாவாசை அல்ல அறுதிவரை
நாடிகள் நமக்கு நன்றாய் இயங்குவரை
உயிருடன் இருந்தால் உசிதமாய்க் காப்போம்
உயிரிழந்தால் ஆயுள் உள்ளவரை வணங்குமே!*

---

***ஆக்கம் ... பாவலர் மார்க்கம் சந்திரன்***
***(416) 844-7453***

## யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற தேசிய மக்கள் சக்தி – இலங்கைத் தமிழரசுக் கட்சி சந்திப்பில் பேசப்பட்டது என்ன?



இலங்கைத் தமிழரசுக் கட்சியினருக்கும் தேசிய மக்கள் சக்தியினருக்கும் இடையில் விசேட சந்திப்பு ஒன்று யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது.

யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்த அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தி குழுவினர், மாவை சேனாதிராஜா தலைமையிலான தமிழ் அரசுக் கட்சியினரைச் சந்தித்துக் கலந்துரையாடினர்.

யாழ். மார்டின் வீதியிலுள்ள தமிழரசுக் கட்சியின் தலைமை அலுவலகத்தில் 13-06-2024 மதியம் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

இதன்போது ஜனாதிபதித் தேர்தல் உட்பட பல சமகால அரசியல் நிலைமைகள் தொடர்பான விடயங்கள் கலந்துரையாடப்பட்டன.

இந்தச் சந்திப்பில் தமிழ் அரசுக் கட்சி சார்பில் அதன் தலைவர் மாவை சேனாதிராஜா, சிரேஷ்ட துணைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம், நிர்வாகச் செயலாளர் எஸ்.எக்ஸ். குலநாயகம், ஊடகப் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினர், ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் ஆகியோர் கலந்துகொண்டிருந்தனர்.

தேசிய மக்கள் சக்தி சார்பில் அதன் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க மற்றும் அந்தக் கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான பிமல் ரத்நாயக்கா, இராமலிங்கம் சந்திரசேகர் உட்படப் பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

இதேவேளை, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி குழுவினர் தமிழ் அரசுக் கட்சியினரைச் சந்தித்துக் கலந்துரையாடியிருந்த நிலையிலேயே இன்று தேசிய மக்கள் சக்தியினரும் தமிழ் அரசுக் கட்சியினரைச் சந்தித்துள்ளமை அரசியலில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.


CANADA KANTHASWAMY TEMPLE
Presents
FREE ENTRANCE AND PARKING
கனடா கந்தசுவாமி கோவில்
வாகனத்தரிப்பிட திறந்தவெளித்திடலில்
JUNE 22 - 23
Exclusive Television Partners
Exclusive Radio Partners
TSN EXPRESS & TTR TRANSPORT
இன்
KAARTHIKEYAN FEST
கார்த்திகேயன் விழா
2024
CO-Presented By
Powered By
A1 MASTER COUNTERTOPS INC.
SEVENOTES
LOCATION :
733 BIRCHMOUNT RD,
SCARBOROUGH
M1K 1R5.
Production by
SV MEDIA
விளம்பரம் மற்றும் வர்த்தகச்சாவடி
MUTHU
+14162000792
GOWRY
+16472336129
THANA
+16478892710
Playback Singer
Rohith Jayaraman
Vijay TV Super Singer
Chinmayi
ZEE Tamil
Maathulani
Swiss Singer
Amirtha
Playback Singer
Vidhyashankar
Eelam singer
kandappu jeyanthan


CANADA KANTHASWAMY TEMPLE
Presents
விளம்பரம்
மற்றும்
வர்த்தகச்சாவடி
தொடர்புகளுக்கு
MUTHU
+14162000792
THANA
+16478892710
GOWRY
+16472336129
KAARTHIKEYAN FEST
கார்த்திகேயன்
விழா
JUNE
22 - 23
2024
கனடா கந்தசுவாமி கோவில்
வாகனத்தரிப்பிட திறந்தவெளித்திடலில்
FREE ENTRANCE AND PARKING
Location : Canada Kanthaswamy Temple Society, 733 Birchmount Rd, scar, M1K1R5.

# இவ்வார ராசிபலன்

**14-06-2024 வெள்ளி தொடக்கம் 20-06-2024 வியாழன் வரையும்**




**மேஷம்:** விரும்பிய பொருள் சேரும் வாரம். வாய்ப்புக்கள் தேடி வரும். பிள்ளைகளால் சந்தோஷம் கூடும். போட்டிகள் அதிகமாகும். கல்வியில் அக்கறை தேவை. இடமாற்றம் உண்டு. மனைவி உறவு சீராகும். கருத்து வேறுபாடுகள் அகலும். புதிய வாய்ப்புக்களை எதிர்பார்க்கலாம். தன வரவில் தடங்கல் உண்டு. தொழில் அபிவிருத்தி உண்டாகும். பொருளாதார மேன்மை உண்டு. குடும்பத்தில் அமைதி பெருகும். உள்ளம் மகிழும். சந்தர்ப்ப சாதகம் உண்டு. ஆரோக்கியம் அதிகரிக்கும். உத்தியோக உயர்வு உண்டு. வாழ்வில் வளம் உண்டு. வியாபார மேன்மை உண்டு. விரும்பிய பொருள் சேரும். காரியம் கை கூடும். ஆபரணச் சேர்க்கை உண்டு. சந்தோஷம் பெருகும். மாணவர் பாராட்டுப் பெறுவர். அரசியலில் புகழ் கூடும். அரசு வழி ஆதாயம் உண்டு. புதிய வாய்ப்பு தேடி வரும். உணவு விடுதி லாபம் தரும். பிணிகள் அகலும். பிரயாணம் ஏற்படும். பிள்ளைகளால் மதிப்பு உயரும். பொருளாதாரம் சிறப்பு தரும். வசந்தம் தேடி வரும். பெருமைகள் பெருகும். அரசியலில் புகழ் கூடும். வீண் பழி அகலும். சஞ்சலம் மறையும். மனைவியின் அன்பு அதிகரிக்கும். மற்றவர் தொல்லை குறையும். ஜவுளித் தொழில் உயர்வு தரும். கலைத்தொழில் திருப்பம் தரும். கல்வியில் மந்த நிலை காணப்படும். பணியாட்களால் தொல்லை ஏற்படும். வாகனச் செலவு உண்டு. வருமானத்தடை ஏற்படும். வாய்ச்சொல் பலன் தரும். இனிய தகவல் வந்து சேரும். புதிய வாய்ப்புத் தேடி வரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: அனுமன், அதிர்ஷ்ட எண்: 3,9,2,4
அதிர்ஷ்ட நிறம்: சாம்பல் நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: P,R




**ரிஷபம்:** வார்த்தைகளில் நிதானத்தை கடைப்பிடிக்கும் வாரம். ஆக்கம் அதிகரிக்கும். மற்றவரால் பாராட்டப்படுவீர்கள். உடல்நலம் சீராகும். புதிய பதவிகள் கிட்டும். பணியில் உயர்வு உண்டு. இடமாற்றம் உண்டு. பொருள் வரவு திருப்தி தரும். வாய்ப்புக்கள் கூடி வரும். குடும்ப அன்யோன்யம் கூடும். பொறுப்புக்கள் கூடும். சிறப்புக்கள் சேரும். எதிர்ப்புக்கள் அடங்கும். பிரார்த்தனை நிறைவேறும். பித்தளைத் தொழில் லாபம் தரும். சுபிட்ஷங்கள் பெருகும். கடன் கொடுப்பவராக இருப்பீர்கள். உங்களால் நிறைய ஆத்மாக்கள் வாழ வேண்டி வரும். சமுதாயப் பிரச்சனைகள் அகலும். வீட்டில் சந்தோஷம் நிலவும். மன அமைதி உண்டாகும். மனதில் குழப்பங்கள் தீரும். சுமூக சீர்நிலை உண்டாகும். மனதில் உள்ள பாசம் வெளிப்படும். பெற்றோர்களால் பாராட்டுப் பெறுவீர்கள். புகழ் கூடும். புண்ணிய ஸ்தல பயணம் ஏற்படும். மன உற்சாகம் கூடும். உடல் உபாதை தோன்றும். தொழில் வழி தொல்லை குறையும். ஆயுள் விருத்தி அதிகரிக்கும். விருந்தினர் வருகை உண்டு. குழந்தைகளால் அல்லல் ஏற்படும். குடும்பச் செலவு அதிகரிக்கும். மனை வாங்கும் யோகம் உண்டு. நோயிலிருந்து பூரண குணமடைவீர்கள். வாய்ப்பேச்சில் நிதானம் தேவை. சேய் நலம் கூடும். குடும்ப சேமிப்பு உயரும். வீண் வம்பு விலகும். குடும்பச் சண்டைகள் முற்றிலும் அகன்றுவிடும். செயல்களில் கவனம் தேவை. வியாபாரத்தில் நன்மை உண்டு. மருத்துவச் செலவு குறையும்.

வழிபட வேண்டிய தெய்வம்: கருட பகவான், அதிர்ஷ்ட எண்: 5,3,2,1
அதிர்ஷ்ட நிறம்: காவிநிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: N,L




**மிதுனம்:** உறவுகளால் பெருமை சேரும். தனவரவு பெருகும். உணவு பிரியம் ஏற்படும். பாராட்டுப் பெருகும். உடல் நலம் திருப்தி தரும். பணவரவு தாமதமாகும். உடல்சோர்வு ஏற்படும். புதிய தொழில் அமையும். இனிய தகவல் வந்து சேரும். பழைய நண்பர் சந்திப்புக் கிட்டும். இனிய காதல் உருவாகும். எளிமையை விரும்புவீர்கள். மாலை நேரப் பிரார்த்தனை மன அமைதி தரும். தன்னம்பிக்கை துளிர்விடும். எதிர்பார்ப்புக்கள் குறையும். இன்னல்கள் அகலும். குடும்ப அன்யோன்யம் அதிகமாகும். பிள்ளைகள் கல்வி மேம்படும். தோல்விகள் விலகும். கட்டிடத் தொழில் லாபம் தரும். பெரிய மனிதர்களை சந்திப்பீர்கள். சிறிய இடையூறு ஏற்படும். வாகன அபிவிருத்தி உண்டாகும். எண்ணிய காரியம் கைகூடும். மாணவர்களுக்கு படிப்பில் அக்கறை தேவை. அரசு வழி ஆதாயம் உண்டு. புதிய வாய்ப்பு தேடி வரும். உணவு விடுதி லாபம் தரும். பிரயாணம் ஏற்படும். பிள்ளைகளால் மதிப்பு உயரும். குழப்பங்கள் நீங்கும். ஆபரணச் சேர்க்கை உண்டு. சுபகாரியம் கைகூடும். விரும்பிய பொருள் சேரும். வியாபார மேன்மை உண்டு. வாழ்வில் வளம் உண்டு. ஆரோக்யம் அதிகரிக்கும். முடிவுகள் சாதகமாகும். முயற்சிகள் பலன் தரும். கால்நடையால் பலன் உண்டு. வெற்றிகள் குவியும். வாகனச் செலவு ஏற்படும். புதிய நட்பு உருவாகும். எதிரிகளால் ஏற்றம் உண்டு. எதிர்பார்த்த தொழில் லாபம் தரும். நன்மைகள் அதிகரிக்கும். குடும்ப கௌரவம் உயரும். கமிஷன் தொழில் லாபம் தரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: சிவபெருமான், அதிர்ஷ்ட எண்: 6,4,3,1
அதிர்ஷ்ட நிறம்: சிகப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: B,J




**கடகம்:** பிரியமானவர்களின் சந்திப்புக் கிட்டும் வாரம். பிள்ளைகளால் பெருமை சேரும். கணவன், மனைவி அன்யோன்யம் கூடும். நிம்மதி பெருகும். குழந்தைகளால் குதூகலம் கூடும். வழக்கு வெற்றித் தரும். பயணம் ஆதாயம் தரும். தொழில் வழி தொல்லைக் குறையும். சுய பலம் கூடும். தன்னம்பிக்கை அதிகமாகும். சிறிய இடையூறு ஏற்படும். மாணவர் திறமை பளிச்சிடும். தந்தையால் நலம் பெருகும். அறிவாற்றல் பளிச்சிடும். மற்றவரால் பாராட்டுப் பெறுவீர்கள். உடல் நலம் சீராகும். நற்காரியங்களால் கீர்த்தி பெருகும். புதிய பதவிகள் கிட்டும். பணியில் உயர்வு உண்டு. இடமாற்றத்தால் நன்மை தரும். பொருள் வரவு திருப்தி தரும். வாய்ப்புக்கள் கூடி வரும். பழையக்கடன் வசூலாகும். பெரிய மனிதர்களை சந்திப்பீர்கள். வாகன அபிவிருத்தி உண்டு. வழக்குகளால் தொல்லை உண்டு. எந்திர தொழிலால் லாபம் உண்டு. நல்லோர் நட்பு கிட்டும். வெளியூர் பயணம் ஏற்படும். மறைமுக எதிர்ப்பு அதிகமாகும். பக்குவமான பேச்சு அவசியம். மன உற்சாகம் கூடும். பணவரவு சேரும். உடல் உபாதை தோன்றும். சுபச்செய்தி வரும். வியாபாரம் விரயம் கூடும். உத்தியோக கவனம் தேவை. கடன் தொல்லை குறையும். உடன் பிறந்தவரால் ஆதாயம் உண்டு. கூட்டுத்தொழில் மோசடி ஏற்படும். அன்னதானம் செய்வதால் அதிர்‘டம் கூடும். புகழ்ச்சி அதிகரிக்கும். வீண் வம்பு விலகும். நோய், நொடிகள் அகலும். சேமிப்பு உயரும். பேச்சில் நிதானம் நல்லது. தங்க நகைகள் சேரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: கந்தப்பெருமான், அதிர்ஷ்ட எண்: 6,9,5,1
அதிர்ஷ்ட நிறம்: குங்கும கலர், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: R,Q



ஒரு மனிதனை யார் கைவிட்டாலும் ஆன்மீகம் கைவிடாது!
என்ற உறுதியோடு உங்கள் 'ராஜயோகம்'
"ஜோதிட மகரிஷி"
Dr. K. RAM.Ph.D (USA)
தொடர்புக்கு: 0091-9840160068
9940431377





**சிம்மம்:** பிரபல்ய வாய்ப்பு அமையும் வாரம். கணவன், மனைவி கருத்து வேறுபாடுகள் அகலும். தொல்லைகள் ஒழியும். சுயநலம் கூடும். உங்களின் தனித்தன்மை வெளிப்படும். முயற்சிகள் பலன் தரும். தெய்வீக ஈடுபாடு அதிகரிக்கும். ஸ்திரச் சொத்து சேரும். காதல் கைகூடும். நிர்வாகத்தில் நிதானம் தேவை. வியாபாரத்தில் விருத்தி ஏற்படும். அரசு வகையில் ஆதாயம் உண்டு. உறவினர்களால் ஆதாயம் உண்டு. குடும்ப ஒற்றுமை அதிகரிக்கும். முயற்சிகள் வெற்றி தரும். தொல்லைகள் அகலும். நிதி நிலைமை சீராகும். நல்லோர்களின் நட்பு கிட்டும். போட்டிகள் குறையும். விடாமுயற்சி அவசியம். புதிய முதலீடுகள் தவிர்க்கவும். சுபச்செலவு கூடும். பொறுப்புகள் அகலும். வேலைப்பளு அதிகரிக்கும். ரியல் எஸ்டேட் தொழில் லாபம் தரும். கமி‘ன் தொழில் கவனம் தேவை. கடன் சுமை குறையும். பூர்வீகச் சொத்து வந்து சேரும். கூட்டுப்பிரார்த்தனை மாற்றம் தரும். வழிபாடு மாற்றம் தரும். உடல்சோர்வு ஏற்படும். அலைச்சல் அதிகமாகும். பணப்பிரச்சனை தீரும். வியாபாரம் சிறக்கும். மேலதிகாரியின் பாராட்டுக் கிட்டும். இடமாற்றம் நன்மை தரும். நிதிப் பற்றாக்குறை நீங்கும். புதிய எண்ணம் நிறைவேறும். வழக்குகள் சாதகமாகும். சிறப்புக்கள் சேரும். வெறுப்புக்கள் அகலும். திடீர் பயணம் ஏற்படும். எதிர்ப்புக்கள் விலகும். அற்புத வாய்ப்புகள் கிட்டும். ஆலோசனை பலன் தரும். அணிகலன் சேரும். சுபகாரியம் கைகூடும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீ அண்ணாமலையார், அதிர்ஷ்ட எண்: 7,9,5,1
அதிர்ஷ்ட நிறம்: வெண்பட்டு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: P,S




**கன்னி:** வீண் விரயங்கள் குறையும் வாரம். காரிய வெற்றி காண்பீர்கள். கணவன், மனைவி ஒற்றுமை கூடும். ஆபரணச் சேர்க்கை உண்டு. பயணம் அனுகூலம் தரும். பணவரவு உண்டு. பங்குச்சந்தை லாபம் தரும். ஆரோக்கியத்தில் கவனம் தேவை. விவாக முயற்சி வெற்றியைத் தரும். உடல் உபாதை நீங்கும். உறவினரால் பணவிரயம் உண்டு. பாதிப்புக்கள் அகலும். ஆடம்பர எண்ணம் அதிகரிக்கும். முயற்சிகள் பலன் தரும். மங்களச் செய்தி வரும். கமி‘ன் தொழில் லாபம் தரும். மருத்துவச் செலவு உண்டு. பொன், பொருள் சேர்க்கையுண்டு. பொருளாதாரம் உயரும். வேற்று மனிதரால் லாபம் உண்டு. வேலை வாய்ப்புக் கூடும். நிம்மதியாக இருப்பீர்கள். திருத்தமான முடிவு ஏற்படும். தடுமாற்றம் ஏற்படும். வருத்தங்கள் மறையும். நண்பர்களால் நன்மை உண்டு. காதல் கசக்கும். நல்லோர்களின் நட்பு கிடைக்கும். மனக்கசப்பு நீங்கும். புதிய தொழில் வாய்ப்புக்கள் பெருகும். இடமாற்றம் ஏற்படும். மனைவியின் அன்பு அதிகரிக்கும். பழையக்கடன் அடையும். திறமைகள் வெளிப்படும். ஏற்றுமதி தொழிலில் லாபம் கிடைக்கும். ஆதாயம் பெருகும். பெற்றோர் உடல்நிலையில் கவனம் தேவை. திருமண முயற்சி பலன் தரும். உறவினர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும். அரசு வழியில் கவனம் தேவை. பொது விஷயங்களில் நாட்டம் ஏற்படும். விளையாட்டுத் துறையில் வெகுமதி கிடைக்கும்.

வழிபட வேண்டிய தெய்வம்: மாரியம்மன், அதிர்ஷ்ட எண்: 9,7,6,5
அதிர்ஷ்ட நிறம்: கிளிப்பச்சை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: I,M




**துலாம்:** பணவரவு அதிகரிக்கும் வாரம். முக்கிய எண்ணங்கள் நிறைவேறும். கல்வியில் அக்கறை தேவை. இடமாற்றம் உண்டு. மனைவி உறவு சீராகும். கருத்து வேறுபாடுகள் அகலும். பழைய நண்பர்களை சந்திப்பீர்கள். கலைஞர்களுக்கு வாய்ப்பு வரும். கணவன், மனைவி வாக்குவாதம் ஏற்படும். பழைய பாக்கி வசூலாகும். திடீர் பயணம் உற்சாகம் தரும். பங்குச்சந்தையில் லாபம் கிடைக்கும். நாவடக்கம் தேவை. வாக்குவாதத்தை தவிர்ப்பது நல்லது. பயணங்களால் பணம் கரையும். நினைத்த காரியம் நிறைவேறும். காதலர்களுக்கு மனக்கசப்பு ஏற்படும். நீண்ட நாள் பிரச்சனை முடிவுக்கு வரும். அரசியல் ஆதாயம் தரும். உறவினர் வழியில் செலவுகள் உண்டு. வியாபாரத்தில் லாபம் அதிகரிக்கும். பிரிந்த குடும்பம் ஒன்று சேரும். கோரிக்கைகள் நிறைவேறும். தொழில் அபிவிருத்தி உண்டாகும். அலைச்சல் அதிகரிக்கும். பொருளாதார மேன்மை உண்டு. குடும்பத்தில் அமைதி பெருகும். சந்தர்ப்ப சாதகம் உண்டு. ஆரோக்கியம் அதிகரிக்கும். உத்தியோக உயர்வு உண்டு. வாழ்வில் வளம் உண்டு. சந்தோஷம் பெருகும். நிர்வாகச் செலவுகள் கூடும். உடல் உஷ்ணம் வந்து போகும். அச்சுத்தொழில் ஆதாயம் தரும். உடன்பிறப்புகளால் நன்மை உண்டு. தேக ஆரோக்கியம் மிளிரும். பிள்ளைகளால் சந்தோஷம் கூடும். ஆபரணச் சேர்க்கையுண்டு. விரும்பிய பொருள் சேரும். வாழ்வில் வளம் சேரும். திருப்புமுனைகளை சந்திப்பீர்கள்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஏழுமலை, அதிர்ஷ்ட எண்: 1,5,6,9
அதிர்ஷ்ட நிறம்: நீலம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: L,N




**விருச்சிகம்:** தன்னடகத்தோடு செயல்படும் வாரம். புதிய வாய்ப்பு வரும். கல்விச்செலவு உண்டு. உறவினர் வருகை உண்டு. உலோகத் தொழில் உயர்வு தரும். இடமாற்றம் ஏற்படும். குடும்பப் பாசம் கூடும். முயற்சிகள் பலன் தரும். முடிவுகள் சாதகமாகும். உறவுகளால் நன்மை உண்டு. நண்பரால் செலவு உண்டு. அரசியலில் புகழ் கூடும். அரசு வழி ஆதாயம் உண்டு. உணவு விடுதி லாபம் தரும். பிரயாணம் ஏற்படும். உன்னதமான காலம். பிள்ளைகளால் மதிப்பு உயரும். பொருளாதாரம் சிறப்பு தரும். பொறுப்புக்கள் கூடும். புதிய நட்பு உருவாகும். மனைவி உடல் நலம் பாதிக்கும். உறவினரால் பாதகம் உண்டு. திடீர் கடன் உருவாகும். காரிய தாமதம் ஏற்படும். உத்தியோக அலைச்சல் உண்டு. பழைய நட்பு பலன் தரும். புதிய வாய்ப்புக்களை எதிர்பார்க்கலாம். தன வரவில் தடங்கல் உண்டு. லஷ்மி கடாட்ஷம் பெருகும். இன்னல்கள் அகலும். குடும்ப வளர்ச்சி அடையும். பிள்ளைகள் கல்வி மேம்படும். கால்நடைகளால் பலன் உண்டு. காதலில் மோதல் உண்டு. ஆதலால் கவனம் தேவை. உணவு பிரியம் அதிகரிக்கும். பாராட்டுப் பெருகும். புதிய தொழில் அமையும். உத்தியோகத்தில் உயர்வு ஏற்படும். காரியம் இழுபறியாகும். பழிச்சொல் தேடி வரும். முயற்சி பலன் தரும். நண்பர்கள் கவனம் தேவை. ஜவுளித்தொழில் உயர்வு தரும். வீண் பழி அகலும். சஞ்சலம் மறையும். மனைவியின் அன்பு அதிகரிக்கும். மற்றவர் தொல்லை குறையும். உடல் உஷ்ணம் வந்து போகும். பொருளாதாரம் உயர்வு பெறும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீ தேவி, அதிர்ஷ்ட எண்: 1,4,5,7
அதிர்ஷ்ட நிறம்: மஞ்சள், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Y,D

(தொடர்ச்சி 25 பக்கம்)

# கடந்தவையும் கடப்பவையும் – (100)

செஞ்சோற்றுக்கடன் மறவாச் செம்மல்கள் - சொன்னபடி
வந்துநிற்க உடன் ஏறிச்சென்றதுவும் அவர்களின் வண்டியில்த்தான்

அடர்த்தியான நிழல் மரங்கள் உள்ள இடம் - அங்கு
தொடர்ச்சியாகத் தெரிந்ததந்த நீண்ட கிடுகுக்கொட்டகைகள்

அரையளவு கற்சுவர் அதைத் தொடர்ந்து கிடுகு
நிரைநிரையாய் நின்றசனம் மூட்டை முடிச்சுக்களை - நீண்ட

மேசையிலே எடுத்துவைக்க வரிப்புலி உடையணிந்தோர் - அதிகம்
பேசாது பிரித்தவற்றைச் சோதித்தார்

எங்களையும் அப்படியே சோதனை செய்துவிட்டு - அங்கு
வந்துநின்ற பார ஊர்திகளில் ஏறும்படி அனுப்புகிறார்

நின்ற வரிசைப்படி ஏறென்று சொன்னாலும் இடையிடையே
எங்கிரிந்தோ வந்து புகுவோரும் அதிகம் அங்கு

வெய்யில் ஏற ஏற வாய்ச்சொல்லின் வீரியமும் அதிகமாக - இனி
செய்வது என்னவென தெரியாதோர் வினவுகிறார் மற்றவரை

சரியாகப்பதில் சொல்ல யாருக்கும் தெரியாத புதுப்பயணம் - இப்போ
தெரிந்ததனால் தெளிவாகச் சொல்லுகிறேன் அனுபவம்தான்

புளியங்குளம், அங்கிருந்து ஊர்தியிலே ஏற்றிச்சென்று
இடைவழியில் விடும்போது அதிலிந்து நடக்கவேனும்

ஓமந்தை போலும் அது அங்கிருந்து நடக்கும்போது
ஏனிந்த வருகையென நினைக்கத்தோன்றும் - அப்போ

மெத்தப்பெரும்காடுஅது, உச்சி வெய்யில் வேறு
தீர்த்தக்கரை தோற்றுப் போகும் சனக்கூட்டம் - அங்கு

சின்னவர்கள் பெரியவர்கள் பேதமின்றி எல்லோரும்
முன்னும் பின்னுமாய் நின்று நின்று நடந்துபோக

முட்கம்பிவேலி கொண்ட பெரும்பரப்பு அதில் மறிப்பு
அங்கு உள்ளேபோகச் சிறுகடவை, தள்ளுப்பட்டால் முள்கீறும் -
அவ்விடத்தில்

நீட்டிய துவக்கொடு அம்மையாரின் ஆட்கள்
காட்டினார்கள் கையை இன்றில்லை உள்ளேயென்று

ஒன்றுமே புரியாது நின்றுவிட்டு மறுபடியும்
முன்பிருந்த இடத்திற்கே நடைப்பயணம்

பசியும் தாகமும் வாட்டிவதைக்க கண்ணிருட்ட
எரியும் உடலங்கள் அணிவகுத்து வருவதுபோல் - சுட்டெரிக்கும்

வெம்மையில் உடலும் உள்ளமும் பொசிங்கிப்போக - மீண்டும்
அவ்விடத்தை வந்தடைந்து ஓய்வொன்றை எடுத்துக்கொண்டோம்

அடுத்தநாள் மறுபடியும் சோதனை முதற்கொண்டு
அடுத்தடுத்து முதல்நாள் நடந்ததெல்லாம் வரிசையாக
முட்கம்பிச் சிறுபாதை திறந்தபோதும் எல்லோரும்
உட்செல்ல முடியாத நிலையங்கு

'பல்கலை மாணவர்கள் முன்வரலாம்' என்றார்கள்
நல்லதொரு ஆதாரம் பல்கலை அடையாள அட்டை

என்னிடமும் இருந்ததுதான் யாழ் பல்கலை அடையாள அட்டை
முன்னுக்குப் போபவர்கள் தெற்குக்குப் போபவர்கள்

வடக்கிற்கு உரியது சரிவருமோ தெரியாது - சும்மா
கிடப்பதைக் காட்டுவோம் எனவெண்ணிக் காட்டிடவே

ஒருகதையும் கேட்காமல் அனுப்பினார்கள் முன்னுக்கு - வந்தவரில்
ஒருவரும்தான் சொந்தமென்று அங்கில்லை

இளைஞர்களும் யுவதிகளும் மட்டும் தான் - ஆனாலும்
நிறையப்பேர் இருந்தார்கள் அவ்விடத்தில் - அப்போ

பெரிதாகப் பயமேதும் இருக்கவில்லை - பின்னாள் போல்
மரியாதை இல்லாது நடத்தியதும் காணாமல் ஆக்கியதும்

பெரிதாக நடக்கவில்லை என்பதால்த்தான்......

(தொடரும்)


-- உமா மோகன் -- மொன்றியால் - கனடா --

# இவ்வார ராசிபலன்

(24 பக்கத் தொடர்ச்சி)




**தனுசு:** அதிர்ஷ்ட வாய்ப்புக்கள் உருவாகும் வாரம். கையிருப்புகள் அதிகமாகும். கல்வி மேன்மை தரும். புதிய முயற்சி பலன் தரும். இனிய எண்ணம் உதயமாகும். பழையக்கடன் ஒழியும். வாழ்க்கை வசதி பெருகும். அந்தஸ்து அதிகமாகும். நினைத்தது நிறைவேறும். அரசாங்க அனுகூலம் உண்டு. நிர்வாகத் திறமை அதிகரிக்கும். தன்னம்பிக்கை கூடும். சந்தோஷம் கூடும். ஆண்களுக்கு ஆதாயம் உண்டு. கலைத்தொழில் திருப்பம் தரும். கல்வியில் மந்த நிலை ஏற்படும். பணியாட்களால் தொல்லை உண்டு. வாகனச்செலவு உண்டு. வருமானத் தடை உண்டு. வாய்ச்சொல் பலன் தரும். புதிய வாய்ப்பு தேடி வரும். பழைய நண்பர் சந்திப்பு கிட்டும். இனிய காதல் உருவாகும். எளிமையை விரும்புவீர்கள். எள் தானம் ஏற்றம் தரும். மற்றவர்கள் ஆலோசனையை தவிர்க்கவும். நினைத்த தொழில் அமையும். நினைத்தபடி திருமணம் நடக்கும். ஏற்றமான தருணம் அமையும். இனிப்பானச் செய்திகள் வரும். தொழிலில் முதலீடு உண்டாகும். போட்டிகள் நீடிக்கும். புத்திரர் வழியில் கவலை ஏற்படும். தேவைகள் அதிகரிக்கும். எதிரிகளால் ஏற்றம் உண்டு. விளையாட்டுச் சிந்தனைகள் மேலோங்கும். புதிய பொருள் சேரும். பழைய நட்பினால் பலன் கிடைக்கும். உத்தியோக அலைச்சல் உண்டு. காரிய தாமதம் உண்டு. உறவினரால் பாதகம் உண்டு. தொழிலில் ஒப்பந்தங்கள் குவியும். அரசியல்வாதிகளுக்கு அற்புதமான காலம். வரவுகள் பெருகும். அந்நிய தேசப் பயணம் உண்டு. காதலர் ஒற்றுமை மேலோங்கும்.
வழிபட வேண்டிய தெய்வம்: சுக்ர பகவான், அதிர்ஷ்ட எண்: 3,9,4,1
அதிர்ஷ்ட நிறம்: காவிநிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: C,P




**மகரம்:** வாழ்க்கையில் உதாரணமாக திகழும் வாரம். விரக்திகள் மறையும். வீடு, மனை யோகம் உண்டு. சிக்கனம் தேவை. கல்வியில் ஆர்வம் கூடும். கடன் வசூலாகும். சாதனையை படைப்பீர்கள். வியாபாரத்தில் கவனம் தேவை. மற்றவர்களால் அனுகூலம் உண்டு. உடல் ஆரோக்கியம் கூடும். வியாபாரம் லாபம் தரும். உறவினர்களால் உதவி கிட்டும். மாணவர்கள் உற்சாகம் கூடும். மனைவியின் அன்பு அதிகரிக்கும். மங்களச்செய்தி வரும். வார்த்தைகளில் நிதானம் தேவை. சாதகமான வாய்ப்பு உருவாகும். வெகுமதி பெருகும். பேச்சில் நிதானம் தேவை. நியாயம் ஜெயிக்கப் போராடுவீர்கள். இடமாற்றத்தால் நன்மை உண்டு. எதிர்பார்த்த பதவி உயர்வு கிட்டும். மாணவர்களுக்கு மகிழ்ச்சி கூடும். புதிய கடன் வாங்க நேரிடும். மேலதிகாரியின் பாராட்டுக் கிட்டும். வெளியூர் பயணம் உண்டு. தந்தை உடல் நலனில் கவனம் தேவை. ஆனந்தம் குடிக்கொள்ளும். புத்தி சாதுர்யம் பெருகும். நட்பு வட்டம் விரிவடையும். மனதில் மகிழ்ச்சி கூடும். இல்லத்தில் அமைதி பெருகும். சுபகாரியம் நடந்தேறும். கலைஞர்களுக்கு ஒப்பந்தங்கள் குவியும். திட்டமிட்ட காரியங்கள் வெற்றி முகமாகும். மன ஆரோக்கியம் சிறக்கும். பணத்தேவைகள் பூர்த்தியாகும். கோதுமை தானம் தாய் நலம் சேர்க்கும். தேகப்பலம் கூடும். சுமூகமான சூழ்நிலை பெருகும். மன மகிழ்ச்சி அதிகரிக்கும். நீண்ட நாளைய நோய் விலகும்.
வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீ கபாலீஸ்வரர், அதிர்ஷ்ட எண்: 5,9,4,3
அதிர்ஷ்ட நிறம்: ஊதா, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: H,L




**கும்பம்:** உண்மையான நன்மைகளை சந்திக்கும் வாரம். பிரியமானவர்களை சந்திப்பீர்கள். வாகனங்களில் முதலீடு உண்டாகும். குடும்பத்தில் அமைதி நிலவும். சொந்த பந்தங்களால் உதவி உண்டு. சேமிப்பு வளரும். மனநிறைவு உண்டு. கலைஞர்களுக்கு புகழ் கூடும். மாணவர்களுக்கு சாதகமான காலம். வியாபாரம் வெற்றி தரும். முயற்சிகளில் தாமதம் ஏற்படும். உத்தியோகத்தில் உயர்வு உண்டு. பறவைகளுக்கு உணவளித்து பலன் பெறலாம். பணப்பற்றாக்குறை நீங்கும். குடும்பத்தினர்களின் அனுசரிப்பு கிட்டும். பெரியோர்களின் வாழ்த்து கிடைக்கும். உடன்பிறப்புக்களின் உதவி கிட்டும். மதிப்பும், மரியாதையும் உயரும். பணவரவு திருப்தி தரும். பொது வாழ்வில் புகழ் கூடும். உடல்நலம் சிறக்கும். புதிய கடன் வாங்க நேரிடும். கணவன், மனைவி அன்யோன்யம் அதிகரிக்கும். மனக்குழப்பங்கள் தீரும். மங்கையருக்கு திருமணம் கை கூடும். பொருளாதார நிலை உயரும். தொட்ட காரியம் ஜெயமாகும். செயல்பாட்டில் தீவிரம் கூடும். உரிய நேரத்தில் உதவிகள் கிடைக்கும். புதிய முதலீடுகளில் கவனம் தேவை. ஞாபகத்திறன் அதிகரிக்கும். சுபகாரியம் கை கூடும். வினோதமான எண்ணங்கள் பூர்த்தியாகும். உழைப்பில் கவனம் தேவை. பங்குச்சந்தை லாபம் தரும். வார்த்தைகளில் நிதானம் தேவை. வழக்குகள் சாதகமாகும். வாகன மாற்றம் உண்டு.
பூர்வீகச் சொத்துக்கள் கிடைக்கும். புதிய நட்பு ஏற்படும்.
வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீகாமதேனு, அதிர்ஷ்ட எண்: 8,3,5,1
அதிர்ஷ்ட நிறம்: செந்நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: O,R




**மீனம்:** பெண்களால் ஆதாயம் கிடைக்கும் வாரம். வாகன மாற்றம் உண்டு. பூர்வீகச் சொத்துக்கள் கிடைக்கும். புதிய நட்பு ஏற்படும். உறவினர் வருகை உண்டு. மறைமுக எதிர்ப்புக்கள் மாறும். வஸ்திர தானம் வளம் சேர்க்கும். வாழ்த்துக்கள் கிட்டும். அரசுத்துறையில் ஆதாயம் கிடைக்கும். சகோதர வழியில் கவனம் தேவை. தர்ம சிந்தனை மேலோங்கும். கல்வியில் ஆர்வம் கூடும். காதலர்கள் தம்பதியாவார்கள். இனம் புரியா சந்தோஷம் குடிக்கொள்ளும். ஆலோசனைகளால் ஆதாயம் உண்டு. கொடுத்த வாக்கை காப்பாற்றுவீர்கள். ஊக்கம் அதிகரிக்கும். விருப்பமான வாய்ப்பு கூடி வரும். குதூகலம் சேரும். பழையக்கடன் தீரும். பங்குத்தொழில் கவனம் தேவை. பொன், பொருள் சேரும். ஆடம்பர எண்ணம் அதிகரிக்கும். மங்களச் செய்தி வரும். காதல் எண்ணம் ஏற்படும். திருமண வாய்ப்புக்கள் கூடி வரும். பிள்ளைகளால் பெருமை சேரும். மகிழ்ச்சியான செய்திகள் வரும். வளமான வாழ்வு அமையும். ஆடம்பர எண்ணம் உருவாகும். உலோகத்தொழில் லாபம் தரும். வாகனச்செலவு ஏற்படும். வழக்குகள் சாதகமாகும். தாய்நலனில் கவனம் தேவை. வியாபாரம் சிறக்கும். பிரார்த்தனையில் ஆர்வம் அதிகரிக்கும். கர்ம வினைகள் அகலும். பொன்னான நேரங்களாக அமையும். கட்டிடத்தொழில் லாபம் தரும். உறவினரால் முன்னேற்றம் உண்டு. நன்மைகள் உண்டாகும். பிறர்க்கு உதவி செய்வதால் நன்மை உண்டாகும். வருமானம் கைகூடி வரும். பாதகம் விலகும். புதிய வாய்ப்பு வரும். பாவங்கள் போக்கும்.
வழிபட வேண்டிய தெய்வம்: ஆதிசேஷன், அதிர்ஷ்ட எண்: 4,8,9,1
அதிர்ஷ்ட நிறம்: இளம்பச்சை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: K,U

# The Late Thiyagarajah Paramanantharajah (Para) 100th Birthday



Picture taken in 1961

Official delegate of the Govt. of Sri Lanka to the Food and Agricultural Organizations of the United Nations - T. Paramanantharajah



Birth 11.06.1924

Death 13.12.1984



Picture taken in 1966

Mr. T. Paramanantharajah with his family soon after being elected as Ward member Kopay.



Picture taken in 1967

Mr. T. Paramanantharajah is taken in a procession by the people of Kopay after his election as Chair man of Kopay Village Council.



Picture taken in 1961

**Official delegate of the Govt. of Sri Lanka World Fishing: F.A.O. of United Nations - Chatham House London**

## மனிதருள் மாமனிதன்

அமரர் தியாகராஜா பரமானந்தராஜா மக்கள் சேவையின் இன்பம் கண்ட ஒரு தலைவன். தனது அறிவையும், ஆற்றலையும் எல்லோருக்கும் பயன்படுத்திப் பல ஆக்கபூர்வமான அபிவிருத்தித் திட்டங்களை கோப்பாய்க்கிராம சபைத் தலைவராக இருந்த சில ஆண்டுகளுக்குள் நிறைவேற்றி கோப்பாய் கிராமத்தை ஒரு சிறு நகரமாக்கினார் என்றால் மிகையாகாது.

இவர் எமது ஒப்புயர்வற்ற தமிழர் தலைவனாகவும், அரசியல் தீர்க்கதரிசியாகவும், சட்டமேதையுமான அமரர் ஜீ.ஜீ.பொன்னம்பலம் கைத்தொழில், மீன்பிடி அபிவிருத்தி மந்திரியாக இருந்த காலத்தில் மீன்பிடி அபிவிருத்தி உத்தியோகத்தராகக் கடமையாற்றினார். அக்காலத்தில் இவருக்குத் திரு. பொன்னம்பலமவர்களுடன் ஏற்பட்ட தொடர்பினால் அன்னாரின் வாழ்க்கையே மறுமலர்ச்சி பெற்றது.

கைத்தொழில் மீன்பிடி மந்திரியாக இருந்த அமரர் பொன்னம்பலத்திற்கு அவருடைய அபிவிருத்தித் திட்டங்களை அமுல் செய்ய நம்பிக்கையும், பேராற்றலும் செயற்திறனும் வாய்ந்த அமரர் பரமானந்தராஜா அபிவிருத்தி உத்தியோகத்தராகக் கிடைத்தமை யாழ். மீனவர் செய்த தவப்பயனேயாகும்.

இக்கால கட்டத்தில்தான் யாழ். மீனவரின் இன்னல்கள் ஒவ்வொன்றாக மறையத் தொடங்கின. நைலோன் வலை, நவீன இயந்திரமீன்பிடி வள்ளங்கள் தொடக்கம் வீடமைப்புத் திட்டங்கள் வரை பெற்றுக்கொடுக்கப்பட்டன. திரு. பரமானந்தராஜாவின் சேவை மேலும் விரிவடையச் செய்ய அவருக்குப் புலமைப் பரிசிலும் கிடைத்தது.

காலப்போக்கில் இவர் அமரர் ஜீ. ஜீ. அவர்களின் கொள்கைகளை ஏற்று அ. இ. த. காங்கிரசின் இணைக்காரியதரிசியாக மிக்க திறமையுடன் பணியாற்றினார். இவர் ஒரு சட்டத்தரணியில்லாதபோதும், தான் மேற்கொள்ளும் விஷயங்களை ஒரு ராணி அப்புக்காத்துக்குரிய வாக்குச் சாதுரியத்துடன் வாதிடும் ஆற்றல் பெற்றிருந்தார்.

அன்னாரின் சேவையை சிறப்பாகக் கோப்பாய் கிராம மக்களும், பொதுவாக யாழ். மீனவர் சமுதாயமும் என்றென்றும் மறக்கமுடியாது.

**கி. அம்பலவாணர்**
**Former Govt. Employee**

---

**M.SIVASITHAMPARAM**
President, Tamil United Liberation Front,
(T.U.L.F)

Tel: 809 Karaveddi

Karaveddi East,
Karaveddi,
Sri Lanka,
4th January 1985

**Mr. T. Paramanantharajah - A GIANT AMONG MEN**

In human life, two events are certain - birth and death. One cannot influence the manner of birth. But one can shape the manner of death by life he led. Mr.Paramanantharajah lived and died, serving God by serving his fellow - men. The large crowd at his funeral is a ample testimony of his selfless service to his people.

He caught public attention when he was Fisheries inspector. The plight of fishermen in Jaffna was a pitiable one in those days. They braved the high seas but they lived in eternal poverty Mr.Paramanantharajah set out to change the pattern of life of fisherman. He was mainly instrumental in obtaining modern fishing gear for Jaffna's fishermen. Outboard motors and nylon nets were given liberally to fisherman in Northern Province. Housing-Schemes and other welfare schemes were started by him to make fishermen live comfortably. Others followed but Paramanantharajah was a pioneer.

His work as Fisheries inspector brought him into close contact with the great Tamil leader Mr.G.G.Ponnambalam. Mr.Ponnambalam with his infinite skill and love for Jaffna man planned a new life for Jaffna's fishermen. Mr.Paramanantharajah executed those plans most efficiently. In due course, Mr.Paramanantharajah accepted the political leadership of Mr.Ponnambalam and joined the All Ceylon Tamil Congress. He served Mr.Ponnambalam with loyalty and efficiency as Joint Secretary of All Ceylon Tamil Congress.

In politics, he brought the same skill and dedication as in Public Service. Naturally his prime concern was Kopay. Agrateful people of Kopay elected him as their Village Council Chairman.

He was not a lawyer but he argued Customs Cases and Fisheries Cases withe the eloquence and skill of any queen's Counsel.

His death is a greater loss to our Tamil nation. It is an irreparable loss to his wife and children. But it will be some consolation to them to know that their grief is shared by many who looked upon him as a family member. He appropriately named his house 'Cavery' for like the beautiful Indian River, his house was a haven to many.

May his soul rest is peace.

**M.Sivasithamparam**
**Former President - TULF**

---

## அமரர் பரமானந்தராஜா

நாவன்மையுடனும், அன்போடிணைந்த சமூகசேவையாலும் கவரக்கூடிய வியத்தகு ஆற்றல்படைத்த இம்மனிதர் அமரத்துவம் அடைந்து பலவருடம் கடந்து விட்டது. சிலர் நம்மை அரசியற்துறையில் பிரபல்யப்படுத்துவற்கு சமூகசேவையில் ஈடுபடுவார்கள். ஆனால் அரசியலில் மிக இளமைக்காலத்தில் புகுந்துள்ள இம்மனிதர் மக்களுக்கு தான் செய்யக்கூடிய சமூகப்பணியை நிறைவேற்றுவதற்கு அரசியல் நுட்பதிட்பங்களைப் பயன்படுத்தினார். இவரின் அரசியற் சாணக்கியத்தை நன்கு புரிந்த கோப்பாய் மக்கள் இவரை கிராமசபைத் தலைவராகத் தேர்ந்தெடுத்தார்கள். இவர் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சியினராய் அக்கட்சியின் அக்கட்சியின் இணைக்காரியதரிசியாகவிருந்து கடமையாற்றுகையில் கட்சித்தலைவரான அமரர் ஜி. ஜி. பொன்னம்பலத்துக்கும் அக்கட்சிக்கும் இறுதிவரை விசுவாசமாகவிருந்தார். கிராமசபைத்தலைவராய் இவர் இருந்து தமது கிராமத்திற்குட் பலதரப்பட்ட வசதிகளை மக்களுக்கு ஏற்படுத்திக் கொடுத்து தனது பூரண சேவையை அளித்தார். நன்றி உணர்ச்சியால் உந்தப்பட்ட அம்மக்கள் தமது அன்பையும் பாசத்தையும் இவரின் இறுதி அஞ்சலியில் காட்டுவதற்கு பல இன்னல்களும் பதட்டமும் நிறைந்த கால கட்டத்தையும் பார்க்காமல் பெருமளவில் வந்தனர்.

"பரமானந்தராஜா விளையாட்டு அரங்கம்" என்று நாமம் சூட்டப்பட்ட மைதானம் அவர்கள் இப்பெரிய மனிதர் மீது வைத்திருந்த மதிப்பின் சின்னமாகத் திகழ்கிறது. இவர் தனது நலன்புரிச்சேவைகளை கிராமத்துடன் மட்டுப்படுத்தினாரல்லர். இவர் பாராளுமன்ற அங்கத்துவப் போட்டியில் தம்மை ஈடுபடுத்தாவிட்டாலும் இவரின் பாராளுமன்ற உறுப்பினரின் சேவையாகவே பெரிதும் கருதப்பட்டு, இவர் இவ்வாறான பதவிக்கே தகுதி படைத்தவர் என்றும் கணிக்கப்பட்டிருந்தவர்

இவர் அரசியற்துறையைப் போலவே பொதுநிர்வாகச் சேவையிலும் மீன்பிடி இலாகாவில் விஸ்தரிப்பு உத்தியோகத்தவராகவும், ஆலோசகராகவும் இருந்து குடாநாட்டு மீன்பிடித்தொழிலாளரின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த ஈடிணையற்ற சேவையாற்றியுள்ளார். அபாயம் சூழ்ந்த உழைப்பூதியத்தைக் கொண்டுள்ள மீனவத் தொழிலாளரின் கஷ்டங்களைக் குறைப்பதற்கு புதிய முறைகளை அறிமுகப்படுத்தியும், நவீன கருவிகளைப் பெற்றுக்கொடுப்பதில் முன்னோடியாகக் திகழ்ந்தார். இவர்களது வள்ளங்கள் தென்னிந்திய சுங்க அதிகாரிகளினால் கைப்பற்றப்பட்டபோதெல்லாம், அவற்றை மீட்டுக்கொடுப்பதற்கு புயல் நிறைந்த கடலிலும் அஞ்சா நெஞ்சுடனும் உற்சாகத்துடனும் எண்ணற்ற தடவை பிரயாணம் செய்திருக்கிறார் என்ற இவரின் மனித சக்தி அப்பாற்பட்ட சக்திதான் என்னே!

இவர் பொதுநிர்வாக சேவையிலிருந்த பொழுது சர்வதேச ரீதியில் அமைந்துள்ள உணவு விவசாய ஸ்தாபன கூட்டங்களுக்கு நாட்டின் பிரதிநிதியாய் பங்குபற்றியதிலிருந்து பெற்ற அனுபவங்களைப் பயன்படுத்தி நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் மீன்பிடித்தொழிலாளரின் நலனுக்காக உழைத்தார்.

**E. சபாலிங்கம்**
**Former Principal of Jaffna Central College**

---



"It is the action, not the fruit of the action that's important. You have to do the right thing. It may not be in your power, may not be in your time, that there'll be any fruit. But that doesn't mean you stop doing the right thing. You may never know what results come from your action. But if you do nothing, there will be no result." - Mahathma Gandhi

Your Ever Loving Children - **Siva Para Sivananthan** | **Nala Kumar** | **Esa Para Esananda** | **Ganesh Para Ganeshananda**

# MORTGAGE
# FINANCIAL SOLUTIONS

- RESIDENTIAL
- CONSTRUCTION
- COMMERCIAL
- VACANT LAND
- INDUSTRIAL




**RESIDENTIAL- COMMERCIAL**

- **Purchase**
  - Builder Purchase
  - MLS Purchase
  - Private Purchase
- **Refinance**
- **Renewal**
- **Equity line of Credit**

Contact Us Today

**NESAN**
*Subramaniam*
**416-908-5656**

Office: 416-660-5656
Fax: 647-351-3099
Toll: 1-844-878-2721

1585 Markham Rd, Unit #406,
Toronto, ON. M1B 2W1
Canada

www.nesan.ca

**WE DEAL WITH ALL BANKS**

**Powered By**

MORTGAGE ALLIANCE
RightBroker=RightMortgage
Mortgage Agent level 1 Licence # M15001465
Mortgage Alliance, Brokerage #10330

Scotiabank
TD Canada Trust
NATIONAL BANK
RFA
FIRST NATIONAL FINANCIAL LP
Manulife
Desjardins
MCAP
HOME TRUST
EQUITABLE BANK
radius financial
RMG mortgages







26ம் ஆண்டில்...
26 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
உதயன்

இவ்விடத்தில் விளம்பரம்

செய்ய எங்களுடன்

தொடர்பு கொள்ளவும்.

உதயம் 1471 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday June 14, 2024




# "ஈழத்தை ஏற்படுத்த வேண்டும்" மதுரை ஆதீனம் பாரதப் பிரதமர் மோடியிடம் கோரிக்கை

இலங்கையில் எஞ்சியிருக்கும் தமிழர்கள் பாதுகாப்பாக இருக்க வேண்டுமென்றால் ஈழம் உருவாக வேண்டும் என்று மதுரை ஆதீனம் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியிடம் கோரிக்கை விடுத்துள்ளார். தமிழ்நாட்டு முன்னணி சைவ மடங்களில் ஒன்றான மதுரை ஆதீ-னம் தென் இந்தியாவில் இருக்கும் சைவ மடங்களில் மிகவும் பழமையானது என்று கருதப்படுகிறது. (தொடர்ச்சி 11ம் பக்கம்)

## Canadian Heritage Ministry Officials discussed with National Ethnic Press and Media Council's Members

# கனடிய மரபுரிமை அமைச்சு அதிகாரிகள் கனடிய பல்கலாச்சாரப் பத்திரிகையாளர் கழக உறுப்பினர்களை சந்தித்தனர்





Four Senior Officials from Canadian Heritage Ministry were in Toronto to discuss with National Ethnic Press and Media Council's Board of Directors and Members, about the Govt Funding to the Members of the Council, on June 10th, 2024, at the Toronto City Hall- Meeting Room No: 2.

Mr. Thomas Saras, President of the NEPMC made the welcome remarks to commence the meeting and to welcome the Officials from the Ministry.

The discussion was very productive and very useful to the members. The Officials from the Ministry, listened to the members' questions and gave useful and important information to proceed with their Funding Applications.

மேற்படி சந்திப்பின் மூலம் கனடாவில் இந்த பத்திரிகையாளர்கள் கழகத்தில் உறுப்பினர்களாக உள்ள சுமார் 300 உறுப்பினர்கள் பயன் பெறும் வகையிலும் அவர்களுக்குரிய நிதி ஒதுக்கீடுகளை பெற்றுத் தரவும் அவர்கள் ஆலோசனைகளை வழங்கினர்

**By. LJI Journalist Ganesh**

# தமிழரசுக் கட்சி சுமந்திரன் அணி பொது வேட்பாளருக்கு எதிராக உழைத்து வருவதில் தென்னிலங்கை மீதான விசுவாகம் தெரிகின்றது



தமிழ்ப் பொது வேட்பாளர் என்ற விடயம் தமிழ் அரசியலில் அடுத்த கட்ட வளர்ச்சியை அடைய தொடங்கிவிட்டது.ஒரு பக்கம் தமிழ் மக்கள் பொதுச்சபை என்ற மக்கள் அமைப்பானது பொது வேட்பாளரை முன்னிறுத்தும் நோக்கத்தோடு உழைத்து வருகின்றது.அது கட்சிகளோடு இணைந்து ஒரு பொதுக் கட்டமைப்பை உருவாக்கவிருக்கின்றது.இன்னொரு பக்கம் தமிழரசுக் கட்சிக்குள் சுமந்திரன் அணியானது பொது வேட்பாளருக்கு எதிராக உழைத்து வருகின்றது. தமிழ் பொது வேட்பாளர் வேண்டுமா வேண்டாமா என்ற விவாதம் சூடு பிடிக்கத் தொடங்கியுள்ளது.இந்த விவாதத்தை முதலில் தொடக்கி வைத்தது அரசியல் விமர்சகர்கள் சிலர்,அரசியல்வாதிகளான சுரேஷ் பிரேமச்சந்திரன், விக்னேஸ்வரன்,இவர்களோடு மக்கள் மனு என்று அழைக்கப்படும் ஒரு குடிமக்கள் சமூகம். யாழ்ப்பாணத்தை மையமாகக் கொண்டு இயங்கும் காணொளி ஊடகம் ஒன்றின் அனுசரணையோடு இயங்கும் ஒரு குடிமக்கள் சமூகம் அது.பொது வேட்பாளருக்கு ஆதரவாக அந்த சிவில் சமூகம் வடக்கு கிழக்கில் இதுவரை மூன்று கருத்தரங்குகளை ஒழுங்குபடுத்தியிருக்கின்றது. இக்கருத்தரங்குகளில் பொது வேட்பாளரை ஆதரித்து எழுதிவரும் கருத்துருவாக்கிகள்,அரசியல் செயற்பாட்டாளர்கள், அரசியல்வாதிகள், ஆர்வலர்கள் பங்குபற்றுவதுண்டு.

# பல்கலைக்கழக பட்டத்தை "பாடை"யில் கட்டி வேலையில்லா பட்டதாரிகள் யாழ்ப்பாணத்தில் முன்னெடுத்த கவனயீர்ப்பு

பல்கலைக்கழக பட்டத்தை பாடையில் கட்டி வேலையில்லா பட்டதாரிகள் இன்று யாழ்ப்பாணத்தில் கவனயீர்ப்பு போராட்டமொன்றை முன்னெடுத்தனர்.

வடக்கு மாகாண வேலையில்லா பட்தாரிகள் சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ் மாவட்டச் செயலகத்திற்கு முன்னாள் கடந்த செவ்வாய்கிழமையற்று காலை கவனயீர்ப்பு போராட்டம் மேற்கொள்ளப்பட்டது.

(தொடர்ச்சி 9ம் பக்கம்)



